# எழுத்தாளன்

# THE WRITER

திருச்சி, தமிழ் எழுத்தாளர் சங்க

## இலக்கியச் சிறப்பு மலர்

## 1959

விலை ஐம்பது புதிய காசு

பாரத நாட்டின் பௌதிக விற்பன்னர்,

உலகப் புகழ் பெற்ற விஞ்ஞான மேதை,

செந்தமிழ்ச் செல்வர்

**டாக்டர் K. S. கிருஷ்ணன் அவர்களுக்கு**

**எங்கள் நல்வரவு.**

அவர்தம் மாண்பார்ந்த தலைமையில்

மாநாடு கூடும் சிந்தனைச் சிற்பிகளான

**எழுத்தாளர்க்கு எங்கள் வாழ்த்துக்கள்.**




# வின்ஸென்ட்

**வின்ஸென்ட் & கோ பிரைவேட் லிமிடெட்**

திருச்சிராப்பள்ளி & கிளைகள்.

# எழுத்தாளன்
# THE WRITER

திருச்சி, தமிழ் எழுத்தாளர் சங்க நான்காவது ஆண்டு விழா

# இலக்கியச் சிறப்பு மலர்
## 1959

*

(பதிவு எண். 30 / 57)

24, தேரடிக் கடைத்தெரு :: திருச்சிராப்பள்ளி-2

விலை ஐம்பது புதிய காசு

# ஆனந்த விகடன் நாடகப் போட்டி

விகடன் அறிவித்திருக்கும் மாபெரும் நாடகப் போட்டியை ஏராளமான நேயர்களும் தமிழகத்தின் எழுத்தாளர் பலரும் பெரு மகிழ்ச்சியுடன் வரவேற்றிருக்கிறார்கள். போட்டியை வெளியிடும் வரை விகடனுக்கு இருந்த மகத்தான பொறுப்பு, இப்போது எழுத்தாளர்களைச் சார்ந்து இருக்கிறது. இந்தப் பொறுப்பை அவர்கள் நன்கு நிறைவேற்றி, அவர்களும் பெருமையடைந்து, தமிழுக்கும் பெருமை தேடித் தர வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் எழுத்தாளர்களை உற்சாகம் கொள்ளச் செய்யும் ஒரு முக்கிய அறிவிப்பு, போட்டியில் சேர்க்கப்பட்டுள்ளது. பரிசு பெறும் நாடகங்களை விகடனில் பிரசுரிக்கும் உரிமை ஒன்று மட்டுமே விகடனைச் சார்ந்தது. பிரசுரம் ஆன பிறகு, புத்தகம் போடுதல், நாடகம் நடித்தல், படம் பிடித்தல் முதலிய மற்ற உரிமைகள் யாவும் அவைகளை இயற்றிய ஆசிரியர்களையே சேரும்.

## நிபந்தனைகள்

1. போட்டிக்கு அனுப்பப்படும் நாடகங்கள், தமிழ் நாட்டுச் சமூக வாழ்வை அடிப்படையாகக் கொண்டோ, அல்லது சரித்திர சம்பந்தமான சம்பவங்களை ஆதாரமாகக் கொண்டோ உருவாக்கப்படலாம். ஆனால் சொந்த மனோதர்மத்தைக் கொண்டு, உரை நடையில் எழுதப்பட்டிருக்கவேண்டும்.

2. தொடர் நாடகம் 'விகட'னில் 50 பக்கங்களுக்குக் குறையாமலும் 150 பக்கங்களுக்கு மேல் போகாமலும், ஓரங்க நாடகம் 8 பக்கங்களுக்குக் குறையாமலும் 30 பக்கங்களுக்கு மேல் போகாமலும் இருத்தல் அவசியம்.

3. ஒரே எழுத்தாளர் ஒன்றுக்கு மேற்பட்ட நாடகங்களைப் போட்டிக்கு அனுப்பினாலும் ஏற்றுக் கொள்ளப்படும்.

4. நாடகங்கள் காகிதத்தின் ஒரே பக்கத்தில் சுலபமாக வாசிக்கும்படி எழுதப் பெற்றிருக்கவேண்டும்.

# பரிசு ரூ. 25,000

## தொடர் நாடகம்

முதற் பரிசு ... ரூ. 12,500
இரண்டாவதுபரிசு ரூ. 5,000
மூன்ருவது பரிசு ரூ. 2,500

## ஓரங்க நாடகம்

முதற் பரிசு ... ரூ. 2,500
இரண்டாவதுபரிசு ரூ. 1,500
மூன்ருவது பரிசு ரூ. 1,000

5. நாடகத்தின் முதல் பக்கத்தின் தலைப்பிலேயே தொடர் நாடகம் அல்லது ஓரங்க நாடகம் என்பதைத் தவருமல் குறிப்பிடவேண்டும். நாடகத்தின் கையெழுத்துப் பிரதியை அனுப்பும்போது தபால் உறையின்மீது "ஆனந்த விகடன் நாடகப் போட்டி" என்று குறிப்பிட்டு, "ஆசிரியர், ஆனந்த விகடன், 151, மவுண்ட் ரோடு, சென்னை-2" என்ற விலாசத்திற்கு 31—12—59 தேதிக்குள் கிடைக்கும்படி அனுப்ப வேண்டும்,

6. நாடகத்துடன் கூட, அதை எழுதியவர், அது தமது சொந்தக் கற்பனையே என்றும், தமிழிலோ வேறெந்த மொழியிலோ வெளியான நூலின் கருத்தை உள்ளடக்கியோ அல்லது தழுவியோ எழுதப்படவில்லை' என்றும்', உறுதிமொழி அனுப்பவேண்டும்,

7. தேர்ந்தெடுக்கப்படாத நாடகங்களைத் திரும்பப் பெற விரும்புவோர், அவைகளுடன் போதிய தபால் தலைகளை அனுப்பிவிடவேண்டும். எதிர்பாராத வகையில் கையெழுத்துப் பிரதிகள் தவறிப்போக இடம் உண்டாகையால், கைவசம் ஒரு நகல் வைத்துக்கொள்வது அவசியம்.

8. பரிசுக்குரிய நாடகங்கள் தவிர, மற்றவைகளில் பிரசுரத்திற்கு ஏற்றவை என்று கருதப்படும் நாடகங்கள் "விகட"னில் வெளியிடப்படும். அவற்றிற்கு வழக்கம்போல் சன்மானமும் அளிக்கப்படும்.

9. போட்டிக்கு அனுப்பப் பெறும் கையெழுத்துப் பிரதிகளின் முகப்பிலேயே தனியாகஒரு காகிதத்தை இணைத்து, அதில் நாடகத்தின் தலைப்பையும், எழுதியவரின் முழு விலாசத்தையும் தெளிவாகக் குறித்து அனுப்பவேண்டும். கையெழுத்துப் பிரதியின் இதர பக்கங்களில் இந்த விபரங்கள் எழுதுவதை எழுத்தாளர்கள் தவிர்க்க வேண்டியது அவசியம்.

# தி ஆனைமலைஸ் பஸ் டிரான்ஸ்போர்ட் [பிரைவேட்] லிமிடெட், பொள்ளாச்சி.

எங்கள் பஸ்ஸுகள் கோயமுத்தூர் மதுரை ஜில்லாக்களிலும், கேரள ராஜ்யத்தில் திருச்சூர் ஜில்லாவிலும் தினசரி சுமார் 12000 மைல்கள் குறித்த நேரங்களில் ஓடி 30000க்கு மேற்பட்ட பொதுமக்கள் பிரயாணம் செய்ய வசதியளிக்கிறது.

சென்ற 28 வருடங்களாக பொதுமக்களுக்குச் சிறப்பாகவும் திறமையாகவும் பணியாற்றி வரும் ஒரு ஸ்தாபனம்.

தொழில் நுணுக்கமும் திறமையும் கொண்ட 500-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் இந்த ஸ்தாபனத்தில் பணி செய்கிறார்கள்.

**N. மகாலிங்கம்** B. Sc., A. M. I. E., M. L. A.,
டைரக்டர்.

Phone No. 143 A. Tel: "**CHELLAM**"

# K. P. செல்லம் செட்டியார் சன்ஸ்

தபால் பெட்டி நெ. 37
55. சின்ன செட்டித் தெரு, திருச்சிராப்பள்ளி.

எங்கள் கம்பெனியில்

உயர்தர குவாலிட்டி வைரங்களும், நாகரெத்தினங்களும்
விற்பனைக்குக் கிடைப்பதுடன்
வைரம், நவரெத்தினங்களால் செய்யப்படும் எல்லாவித
**நகைகளும், தங்க நகைகளும்**
கைதேர்ந்த உயர்தரமான வேலை ஆட்களைக்கொண்டு
**எல்லாவித டிசைன்களிலும்**
உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்.


சோல் புரோப்ரைட்டர்:
K. P. S. சுந்தரராஜன் செட்டியார்

பிலிம் தொழிலுக்கு
சேவைச்
சின்னம்

VIJAYA PRODUCTIONS PRIVATE Ltd.

லெஸ்ஸீஸ்
விஜயா ஸ்டுடியோ
வாஹினி ஸ்டுடியோ
சென்னை

அச்சுக்கூடங்களுக்குத் தேவையான
பலவித யந்திரங்களும் எம்மிடம் கிடைக்கும்.



பேப்பர் கட்டிங் மிஷின்

நவீன தேவைகளுக்கு ஒட்டிய வசதிகளுடன் தயாரிக்கப்பெற்றது.
வீல் ஸிஸ்டம் டயாகனல் கட்டிங் மூவ்மெண்ட், டபுள் கியரிங் டிரா ராட் ஆகிய அமைப்புகள் கொண்டது.
இரண்டு இங்கிலீஷ் கத்திகள் உண்டு 24'' சைஸ்.

பாரதி, வள்ளுவர் தமிழ் எழுத்துக்கள்
விசேஷமானவை.

மதராஸ் டைப் பவுண்டரி
38, ஜோன்ஸ் தெரு :: சென்னை-1.

வாழ்க்கையில் உள்ளதை உள்ளபடி சித்திரிப்பதுதான் இலக்கிய முறை. ஆனாலும் வாழ்க்கையில் மேன்மையும் உண்டு. சிறுமையும் உண்டு. அழகும் உண்டு. அவலட்சணமும் உண்டு. பயன்படுவதும் உண்டு. பயனற்றதும் உண்டு. பொறுக்கி எடுத்துக் கொள்வதில்தான் எழுத்தாளர்களின் கலைத் திறமை நிற்கிறது. கலையில் உண்மை இருக்க வேண்டும். உண்மை யின்றிக் கலை யில்லை. ஆனால் உண்மை யெல்லாம் கலையாகி விடாது. நிகழ்ச்சிகளையும் சம்பாஷணைகளையும் பதிவு செய்து விட்டால் இலக்கியமாகி விடாது. எது கலைக்கு உதவும் என்பதைக் கண்டு அதைத் தனிப்படுத்தி இலக்கிய உருவத்தைத் தந்தால் அது கலையாகும்.

—ராஜாஜி

*Space donated by:* The Bharathan Publications Private Limited
Proprietors of the KALKI & SWARAJYA

For Independent Views and upto date News
from various parts of the world
**Read the Southern India's Most Popular Newspaper**

# "THE MAIL"

நிறைந்த செய்தியும், சிறந்த கருத்தும் உள்ளது

## "சுதேசமித்திரன்"

கண்ணைக் கவரும் வண்ண ஓவியங்கள், சினிமாச் செய்திகள், விமர்சனங்கள்
சினிமா நட்சத்திரங்களின் விசேஷ புகைப்படங்கள் இவையனைத்தும்
அடங்கியதொரு குடும்பப் பத்திரிகை

**"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பு,**

விலை:- தினப்பதிப்பு 6 காசு; ஞாயிறு மலர் 12 காசு; வாரப்பதிப்பு 25 காசு

## "நாரதர்" (மாதம் இருமுறை)

விலை 20 காசு.
கலை அன்பர்களுக்கு களிப்பைத் தரக்கூடிய பல செய்திகளும், சினிமா,
நாடக விமர்சனங்கள் மற்றும் இலக்கிய களஞ்சியம் என்ற தலைப்பில்
ஒரு சிறந்த இலக்கிய பொழுதுபோக்கும் உள்ளது.

**M. S. VENKATARAMAN**
AGENT:- "THE MAIL", "SWADESAMITRAN", & "NARADAR".

# கரூர் வைஸ்யா பாங்கு லிமிடெட்.

ஸ்தாபிதம்; 1916

## ஷெட்யூல்ட் பாங்கு

தலைமை ஆபீஸ்: கரூர்.

பிராஞ்சுகள்: மதுரை, கோயமுத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம், தஞ்சாவூர், கும்பகோணம், திண்டுக்கல், ஈரோடு, தாராபுரம், நாமக்கல், கோபிசெட்டிபாளையம், குளித்தலை, சத்யமங்கலம், எடப்பாடி, உடுமலைப்பேட்டை, விழுப்புரம், திருப்பூர், பொள்ளாச்சி, வேலூர், (N. A.) & கரூர் பிராஞ்சு.

| | | | |
|---|---|---|---|
| செலுத்தப்பட்ட மூலதனம் | .... | ரூ. | 5,00,000 |
| ரிசர்வுகள் | .... | ரூ. | 7,07,000 |
| டிபாசிட்டுகள் சுமார் | .... | ரூ. | 3,45,00,000 |
| மொத்த வரவு சிலவுகள் சுமார் | ... | ரூ. | 3,72,00,000 |

**பிக்ஸட் டிபாசிட்டுகள் அடியிற்கண்ட வட்டிவிகிதம் வாங்கப்படும்**

| | |
|---|---|
| 3 முதல் 11 மாதங்கள் தவணைக்கு | 4 % P. A. வட்டி |
| 1 வருடத்திற்கு | 4¼% P. A. வட்டி |
| 2, 3 வருடங்கள் தவணைக்கு | 4½% P. A. வட்டி |
| ரூ. 10,000/-மும் அதற்கு மேற்பட்ட துகைகளுக்கும் | |
| 1 வருட தவணைக்கு | 4½% P. A. வட்டி |
| ரூ. 50,000/-மும் அதற்கு மேற்பட்ட துகைகளுக்கும் | |
| 1, 2, 3 வருடங்கள் தவணைக்கு | 4¾% P. A. வட்டி |
| **CALL DEPOSITS :** | |
| துகை செலுத்திய 15 நாட்களுக்குப் பின் | |
| 24 மணி நேர நோட்டீசில் கொடுக்கப்படும் Call டிபாசிட்டுகளுக்கு | 3½% P. A. வட்டி |

மூன்று வருஷ காஷ் சர்டிபிகேட்டுகள்:
ரூ. 100, 500, 1000 & 5000-க்கு முக மதிப்பு உள்ளவைகள்.
கவர்ச்சிகரமான வட்டி பெறக் கூடியவைகள்.

ஒரு குறிப்பிட்ட தொகை வரையில் கொடுக்கப்படும்.

| | |
|---|---|
| **கரண்டு கணக்குகளுக்கு** | **1 % P. A. வட்டி** |
| **சேவிங்ஸ் கணக்குகளுக்கு** | **2½% P. A. வட்டி** |
| **மாதாந்திர டிபாசிட்டுகளுக்கு** | **4 % P. A. வட்டி** |

சேவிங்ஸ் கணக்குகளில் வாரம் ரூ. 1000 வரை செக் மூலம் வாங்கலாம்.
தங்க நகைகளின் பேரிலும், வியாபார சரக்குகளின் பேரிலும் குறைந்த வட்டிக்கு கடன் கொடுக்கப்படும்.

மற்றும் சகல பாங்கு வரவு செலவுகளும் நடத்தப்படும்.
விபரங்களுக்கு எங்கள் எந்த ஆபீசிலும் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.

**C. ராமனாத செட்டி,**
அஸிஸ்டெண்டு செக்ரடரி. (1-9-1959)

**M. லக்ஷ்மீநாராயணன்,** B. A., B. L.,
செக்ரடரி & மானேஜர்.

# பொருளடக்கம்.

**கட்டுரைகள்:**


| | | |
|---|---|---|
| பற்றுக பற்றினை | (தலையங்கம்) | 1 |
| சமுதாயத்தின் காவலன் | எஸ். எஸ். வாசன் | 9 |
| எழுத்துக்கலை | டாக்டர் மு. வ. | 13 |
| விஞ்ஞானத்தில் எனது ஈடுபாடு | டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன் ... | 31 |
| ஷேக்ஸ்பியரும் நானும் | பேராசிரியர் கமலபதி | 32 |


**கவிதை:**


| | | |
|---|---|---|
| உயிர்த் துடிப்பு | திருலோக சீதாராம் | 39 |


**தலைவரைப் பற்றி:**


| | | |
|---|---|---|
| விழாத் தலைவர் டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன் | — | 4 |
| டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன் அவர்களைப் பற்றி... | — | 7 |


**நிகழ்ச்சிகள்:**


| | | |
|---|---|---|
| சென்ற ஆண்டுவிழா | — | 16 |
| இலக்கியக் கண்ணோட்டம் | — | 21 |
| இலக்கிய விவாதம் | — | 22 |
| புலன் விசாரணை | — | 23 |
| சிந்தனைப் பாதையிலே... | — | 24 |
| எங்கள் சரிதை | — | 37 |
| வாடா மலர்கள் | — | 40 |


அச்சிட்டோர்: கண்ணன் அச்சகம், மலைவாசல், திருச்சி.

## ADVERTISERS' INDEX


| No. | Advertiser | Page |
|---|---|---|
| 1 | Amar Jewellery | 44 |
| 2 | Anamalai 's Re-Treading Co. | iv |
| 3 | Ananda Vikatan | ii & iii |
| 4 | Chellam Chettiar Sons. | iv |
| 5 | Dadra K. Thulasiram | 27 |
| 6 | De-Luxe Photo Service | 44 |
| 7 | Fertilisers & Chemicals (Tr) Ltd. | 43 |
| 8 | German Radio House | 45 |
| 9 | Guptha Paper Mart | 49 |
| 10 | Imperial Traders | 15 |
| 11 | K. T. R. Perfumaries | 47 |
| 12 | Kumudam | 46 |
| 13 | Kalki | vii |
| 14 | Karur Vysya Bank | viii |
| 15 | Kalki Varadarajalu Chetty | 46 |
| 16 | Lalitha Pharmacy | 45 |
| 17 | L. K. S. Jewellers | 49 |
| 18 | Mettur Chemical & Industrial Corpn. Ltd | 44 |
| 19 | Madras Type Foundry | vi |
| 20 | Madras State Handloom Weavers, Co-op. Society | 8 |
| 21 | P. R. Narayanasamy Iyer, Wrapper | iii |
| 22 | Presidency Tutorial College | 51 |
| 23 | Palaniappa Bros. | 48 |
| 24 | Puduppunal Pathippakam | 51 |
| 25 | G. Radhakrishna Chettiar Sons | 42 |
| 26 | Rajendra Tutorial College Wrapper | iv |
| 27 | Standard Electric Co. | 52 |
| 28 | Thirunelveli Vessel Shop | 19 |
| 29 | Vincent & Co. Wrapper | ii |
| 30 | Vijayagopal Pictures | 50 |
| 31 | Vijaya Studios | v |
| 32 | M. S. Venkataraman | vi |


---

## திருச்சித் தமிழ் எழுத்தாளர் சங்கம்

பதிவு எண் 30/57

தலைவர்: திரு. சுகி சுப்பிரமணியன்

துணைத்தலைவர்கள்: திரு. அகிலன்
திரு. ஸி. எஸ். கமலபதி

பொதுச் செயலாளர்: திரு ஏ. எஸ். ராகவன்

கூட்டுச் செயலாளர்கள்:
திரு. ஐ. சண்முகநாதன், ரா. ஆறுமுகம்

பொருளாளர்: திரு. திருலோக சீதாராம் (மாநாட்டு வரவேற்புக் குழுத்தலைவர்)

நிர்வாகக் குழு உறுப்பினர்: திருவாளர்கள்,
துறைவன், என். கிருஷ்ணசாமி, பாரதன். ஸி. பி. குமாரவேலு,
வித்வான் துரைசாமி & திருமதி செல்லம்மாள்
இயக்குனர்: ரெட்டியார்.

---

உலகப் புகழ்பெற்ற விஞ்ஞான மேதையும்
தில்லித் தமிழ்ச் சங்கத் தலைவருமான

**டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன்**




திருச்சித் தமிழ் எழுத்தாளர் சங்க
நான்காவது மாநாட்டின் தலைவர்—(*1959*)

திருச்சித் தமிழ்ச் சங்கத் துணைத் தலைவர்

செம்பொருட் காட்சியர்

## வித்துவான் திரு. டி. ஐயன்பெருமாள் கோனார்



திருச்சித் தமிழ் எழுத்தாளர் சங்க

நான்காவது மாநாட்டின் திருவிளக்கேற்றுபவர்

திருச்சி தமிழ் எழுத்தாளர் சங்கம்
திருச்சிராப்பள்ளி

எழுதுகோல் தெய்வம்—இந்த
எழுத்தும் தெய்வம் — பாரதி.

---

# பற்றுக பற்றினை!

அழகை உபாசித்து, அன்பைப் பேணி, சத்தியத்தின் வழியில் வாழ்கின்ற நெறியாளர்கள் எழுத்தாளர்கள். அவர்கள் சமுதாயத்தின் காவலர்கள். இந்த அழகு, அன்பு, சத்தியம் மூன்றும் உண்மையில் வெவ்வேறு அல்ல. ஒன்றில் மற்றொன்றின் தன்மை பிணைந்து கிடக்கிறது. எனினும் மூன்றிற்குமே இயல்பான தனித்தன்மைகள் உண்டு. இம் மூன்றிலும் அதன் அதன் தன்மையில் கரைந்து நிற்கிறான் கலைஞன். பின்னர் இம்மூன்றிற்கும் அப்பாற்பட்ட நான்காவது தனித் தன்மை அவனிடம் மலர்கிறது. தனக்கெனத் தனி வழியையும் அது அமைத்துக் கொள்கிறது.

அழகை விதைத்து, அழகை வளர்த்து, அழகைப் பெருக்கி நிற்கும் இயற்கையினுள் சாதாரணக் கண்களுக்குப் புலப்படாத மாபெரும் ரகசியங்கள் எழுத்தாளனுக்குப் புலனாகின்றன. புற அழகை மீறிய அக விலாசம் அவன் முன் வந்து தரிசனம் தருகிறது. அதேபோல் அக அழகை மீறிய புற விலாசமும் அவனுக்குத் தெரியத்தான் செய்கிறது. அன்றாட வாழ்க்கைப் புதிர்கள், மனத்தின் ஊசலாட்டங்கள், கோணல்கள், கோணங்கள், சம்பவச் சிக்கல்கள் இவற்றினுள் அழகு புலனாகிறது அவனுக்கு. எல்லாவற்றையும் மீறி இயற்கையின் நியதி பளிச்சென்று விளங்கி விடுகிறது அவனுக்கு.

எனவே எழுத்தாளன் இயற்கையின் குழந்தை. இன்னும் விளக்கமாகச் சொல்வதானால் இயற்கையின் பிரதிநிதி.

மனிதர்கள் மாறலாம், இயற்கை மாறுவதில்லை. இப்படித் தான் இருக்க வேண்டுமென்று யார் அமைத்தார்களோ, அதன் நியதியில் சிறு பிசகு கூடக் காணோம். இத்தனை வண்ணங்கள் உதிர்ந்து கிடக்கின்றனவே, யார் சாயம் பூசினார்கள்? இவ்வளவு அழகு விரிந்து கிடக்கிறதே, யார் அழகு செய்வித்தார்கள்?

இயற்கையால் அழகா, அழகால் இயற்கையா? இன்று நேற்று, இயற்கை முளைத்தபோதே அழகும் முளைத்து விட்டது.

இயற்கையின் மடியில் தவழும் கலைஞனும் அழகாய் முளைத்தவன், புதிராய் வளர்ந்தவன், கருத்தாய் மலர்ந்தவன்.

மண்ணில் கால் இருந்தாலும், எழுத்தாளனின் சிந்தனை உயரப் பறக்கும். மேலே மேலே சென்றால் மண்ணின் வெப்பம் இராது. சிந்தனை உயர உயர வேதனைக் குமைச்சல் இராது.

தனது சிந்தனையை, ஆத்ம லயிப்பை, வாழ்வின் புதிரை எழுத்தில் வடித்துத் தருகிறான் எழுத்தாளன். இங்கே எழுத்து என்பது வெறும் வரி வடிவம் மட்டு மல்ல. எழுத்து மனதின் அசைவு. செயலின் வேகச் செறிவு அதனுள்ளிருந்து விசிறிப் பாய்கிறது. செயலே பேச்சின் ஒரு வகை வெளியீடுதானே? இரண்டும் வேறல்ல.

இப்படிச் சமுதாயத்தின் செயற்பாடாய், பண்பாடாய், உள்ளத்தின் குரலாய் மலர்ந்ததே இலக்கியமாகும்.

இந்த இலக்கியத்தையும் எடை போடும் அரிய கலை ஒன்று உண்டு. அது விமர்சனக் கலை ஆகும்.

இதில் ஈடுபடும் கலைஞன் எழுத்தாளனைப் போன்றே இயற்கை நியதிகளில் ஊறி நின்று தனக்கெனப் பிரிதோர் தனித்தன்மை பெற்றவன். இயற்கையின் அழகில் தெய்வீக ரகசியத்தைக் காணும் எழுத்தாளனின் மனதைத் துழாவ முற் படுகிறான் இவன். வாழ்வின் சுழிப்பில் அழகைக் காணும் அற்புதத்தைத் தேட முற்படுகிறான் இவன். உணர்ச்சிகளின் வெளியீட்டை, எழுத்தின் வன்மையைக் கண்டு பிடித்துப் போற்ற வேண்டும் என்று புறப்படும் ரசிக உள்ளமே விமர்சகனின் தனித்தன்மையாகிறது.

ஒரு வகையில் இலக்கியத்தின் சிறப்புக்கு விமர்சகன் காரணமாகிறான்.

நம் மொழியைப் பொறுத்தவரை, மேலை நாடுகளில் போல் பெரும் அளவில் விமர்சனக் கலை வளரவில்லை. புதுமை இலக்கிய வளர்ச்சியினை எடைபோடும் முயற்சியிலும் தேர்ந்த ரசிக உள்ளங்கள் மிகுதியாக ஈடுபடவில்லை. ஈடுபடும் ஒரு சிலரோ மேலே குறிப்பிட்ட ஐந்தாவது தனித்தன்மை பெற்ற அருங்கலைஞர்களாக இல்லை. அவரவர், விருப்பு, வெறுப்பைக் கூட்டிக் குறைத்து ஆய்வுப் போர்வைக் குள் திணிக்கும் முயற்சியே நடைபெறுகிறது

'உண்மையில் நம்மிடை வளர்ச்சி ஏற்படவே இல்லையா?' என்பது தான் கேள்வி.

மலையின் அழகு கலைஞனுக்குத் தான் தெரியும். அதன் பாறைகளின் முண்டு, முடிச்சுகளைக் காண்பவன் கலைஞனாக இருக்க முடியாது. கோணல் பனை மரம் வாழ்வில் குறுகிய வறிஞனை நினைவூட்டவில்லையானால், பார்க்கிறவன் பார் வையில் கலைத் தன்மை இல்லை என்பது தான் பொருள்.

அதேபோல, 'வளர்ச்சி இல்லை' என்போர் வரட்டு பௌதீகர்கள். நிலத் தின் தன்மையை மட்டுமே அறிந்தவர்கள். பயிர் விளையும் ரகசியத்தைத் துழாவும்

சிந்தனைப் போக்கு அவர்களுக்கு ஒத்து வராது. அவர்கள் அன்பு கூர்ந்து நிலத்தோடு நிற்பதே நல்லது. மேலே பறக்க இறக்கை கட்டிக் கொண்டாலும் அவர்களால் முடியாது.

விமர்சகனின் பொறுப்பு பெரிது. தான் ஆராயும் எழுத்தின் ஊடே கலைஞனின் மனத்தை ஆராயத் தெரிந்து கொள்ளாத விமர்சகனால் நல்ல ஆய்வை ஈன முடியாது.

எனவே இலக்கியத் துறையில் நுழைபவர்க்கு ஈடுபாடு வேண்டும். பக்தி வேண்டும். எழுதுபவனுக்கும் அதே, விமர்சகனுக்கும் அதே. நல்லதை ஏற்கத் தயங்கும் மனப்பான்மை தீமைக்கு வித்து. இயற்கை இதனை ஏற்காது. அதனை ஏமாற்றுவதும் நடக்காது. வீணாகப் பாறையில் மோதி மோட்ச சித்தி பெற்ற கதையாகவே முடியும்

ஆனால் விமர்சகனுக்காக எழுத்தாளன் காத்து நிற்பதில்லை. அவன் சொல்ல வேண்டியதைச் சொல்லி விடுவான். அதை ஏற்கும் ரசிகனைக் காலம் தேர்ந்து கொடுக்கும். கலைஞன் இயற்கையை, காலத்தை மட்டுமே ஏற்கும் பண்பினன். அவனுக்குச் சாதாரண மனிதர்களின் சாதாரண விமர்சனம் ஒரு தடையுமில்லை, ஒரு தீர்ந்த விடையுமில்லை.

இது குறித்துச் சென்ற ஆண்டில் கூட தலையங்கத்தில் ஆராய்ந்தோம். இப்போதும் ஆராய வேண்டிய தேவை இருக்கிறது.

தமிழ்ப் பற்று மக்களிடையே மிகுந்திருக்கிறதென்பது உண்மைதான். ஆனால் சிலரிடம் அது வெறியாகவும் பெருத்திருக்கிறது. பற்று வேறு, வெறி வேறு. வெறி நல்லதை ஏற்காது. பற்று தீயதையும் மறைத்து ஒதுக்கி மேலே செல்லும். நாம் தமிழ்ப் பற்றுள்ளவர்களாக, பக்தி உள்ளவர்களாகச் செழிக்க முயல்வோம். அதனால் மொழியின் தொன்மையைக் காத்தவர்களாவோம். நம்மையும் காத்துக் கொண்டவர்கள் ஆவோம்.

**ஏ. எஸ். ராகவன்,**

பொதுச் செயலாளர்.



## விழாத்தலைவர்

# டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன்

எழுச்சியுற்ற புதிய வாழ்வின் வைகறையில், நமது நாட்டு அறிவுத் துறையின் ஒளிக்கதிர் ஏந்தி நிற்கும் பேரறிவாளர்களில் ஒருவராக விளங்கும் டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன் அவர்கள் நமது விழாவின் தலைமைப்பீடத்தை இவ்வாண்டு சிறப்பிக்கிறார்கள்.

உலகப்புகழ் பெற்ற விஞ்ஞானியாக விளங்கும் இந்தப் பேரறிவாளர் அறுப தாண்டுகள் நிறையப் பெற்ற மகிழ்ச்சியைப் பாரத நாடு மிகச் சிறந்த முறையில் அண்மையில்தான் கொண்டாடியது. விஞ்ஞானச் சிந்தனையில் ஆழ்ந்திருக்கும் டாக்டரவர்கள் தமது இதயத்தில் தமிழன்னைக்கும் பொற்றவிசிட்டுப் போற்றி வருவது தமிழ்ப் பெருமைக்கும் அவரது தாய்மொழிப் பற்றுக்கும் ஒரு எடுத்துக்காட்டு. பாரதத் தலைநகரான தில்லி மாநகரில் வாழ்கின்ற தமிழ் மக்கள் தங்களுக்கென்று அமைத்துக் கொண்டுள்ள தமிழ்ச் சங்கத்தின் தனிப் பெரும் தலைவராக விளங்குகிறார் டாக்டர் கிருஷ்ணன் அவர்கள்.

கரிய மாணிக்கம் சீநிவாச கிருஷ்ணன் என்பது அவருடைய முழுப் பெயராகும். பொதிகை வாழ் நெல்லைப் பகுதியாக இருந்து இந்நாள் இராமநாதபுரத்தைச் சார்ந்துள்ள வத்திராயிருப்பு இவர்களின் பிறப்பிடம். தென்மொழியும் வடமொழியும் தேர்ந்து சமய இலக்கியங்களில் ஆழ்ந்து திளைத்த புகழாளரான தந்தையின் மகவாய்த் தோன்றிய பேறு படைத்தவர் நமது தலைவர்.

### இளமையும் கல்வியும்

பண்பார்ந்த கிராமியச் சூழலில், வத்திராயிருப்பிலும் திருவில்லிப்புத்தூரிலும் ஆரம்பக் கல்வி பெற்ற பின்னர் மதுரை அமெரிக்கன் கல்லூரியிலும், சென்னை கிறித்தவக் கல்லூரியிலுமாகப் பட்டப் படிப்புப் பெற்றார். சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் "பிஸிக்ஸ்" பட்டம் பெற்ற இவர் அந்தக் கல்லூரியிலேயே "டிமான்ஸ்ட்ரேட்டராகவும்" சிலகாலம் பணிபுரிந்தார். ஓய்வு நேரங்களில் இவர் நடத்துகின்ற விஞ்ஞானப் பாட வகுப்புகளில் பிற கல்லூரிகளின் மாணவரும் விரும்பி வந்து பாடங் கேட்பார்களாம்.

நோபல் பரிசு பெற்ற பேராசிரியர் சர். சி. வி. ராமன் அவர்களிடம் இருந்து விஞ்ஞானக் கல்விபெற விருப்புற்றுக் கல்கத்தா சென்று பல்கலைக் கழகத்திற் சேர்ந்தார். சர். சி. வி. ராமன் அவர்களின் பேராற்றல் மிக்க உரைகளும் பயிற்றுவித்த கல்வியும் கிருஷ்ணன் அவர்களின் ஆர்வமும் துடிப்புமிக்க நுண்மதிக்கு ஒரு சிறந்த வாய்ப்பாக அமைத்து விட்டதில் வியப்பில்லை. எம். எஸ் ஸி தேர்வுக்கு அமர வாய்க்காவிடினும் அவரை விஞ்ஞான வளர்ச்சிக் கழகத்தின் ஆராய்ச்சி மாணவராகச் சேர்த்துக் கொண்டார் சர். சி. வி. ராமன். 1923 தொடக்கம் 5 ஆண்டுகள் ஆராய்ச்சித் துறையில் ஆழ்ந்திருந்த கிருஷ்ணன், பின்னர் டாக்கா பல்கலைக்கழக விஞ்ஞானக் கலைப்பிரிவின் 'ரீடர்' பதவியை ஏற்றார். ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த ஆண்டுகள் முழுவதும் ஓயாத உழைப்புக்காலமாகும்.

ராமன் அவர்களின் ஒளிக்கதிர்களின் இயக்கம் பற்றிய புதிய ஆய்வுகளில் ஆழ்ந்திருந்த எண்ணற்ற மாணவர்களினிடையில் கிருஷ்ணன் அவர்கள் புதிய ஆர்வத்துடன் உழைத்தார்.

ஒளிக்கதிர்களை திரவங்களினூடே சிந்துகின்ற பெரு முயற்சியில் பற்பல புதிய சிக்கல்களையும் புதிர்களையும் விடுவிக்கும் அரிய சாதனைகளில் தனி வழியில் பாடுபட்டார். பின்னாளில் உலகப்புகழ் பெற்ற 'ராமன்ஸ் எஃபெக்ட்' என்ற ஒளிக்கதிர் உண்மை. உருவாகும் வகையில் இந்த உழைப்புப் பெரிதும் பயன் பட்டது.

1928-ல் கல்கத்தா போந்த ஜர்மானிய விஞ்ஞானப் பேராசிரியர் ஆர்னால்ட் என்பார் ஆற்றிய ஏழு தலையாய சொற்பொழிவுகள் யாவும் கவனமாக இவரால் குறிப்பெடுக்கப் பெற்றுப் பின்னர் வெளியிடப்பட்டன.

1929-லிருந்து 1933-வரை பேராசிரியர் கிருஷ்ணன் டாக்கா பல்கலைக் கழகத்தில் பணியாற்றினார். இங்கேதான் அவர் 'மாக்னெ - கிரிஸ்டாலிக் ஆக்ஷனை' பற்றிய ஆராய்ச்சிகளைத் தொடங்கினார். சில ஆண்டுகளுக்குப் பின்னர் இது சம்பந்தமாக அவர் வெளியிட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளைக் கண்டு விஞ்ஞான உலகமே வியந்தது.

1933-ம் ஆண்டில் பேராசிரியர் ராமன் கல்கத்தாவை விட்டுச்சென்ற பின்னர், இந்திய விஞ்ஞான வளர்ச்சிச் சங்கத்தில் மஹேந்திரலால் சர்க்கார் பௌதீகப் பேராசிரியர் என்னும் பதவியை ஏற்றுக் கொள்ளும்படி கிருஷ்ணன் அழைக்கப்பட்டார். பிறகு 1942–ல் அலகாபாத் பல்கலைக் கழகத்தில் பௌதீகப் பேராசிரியராக அமர்ந்து திறம்படத்தன் ஆராய்ச்சிகளை நடத்தி வந்தார். இந்தியா சுதந்திரமடைந்த பின் புது டில்லியிலுள்ள தேசீய பௌதீக ஆய்வுக்கூடத்தின் இயக்குனராகப் பொறுப்பேற்றுக் கொள்ளும்படி அரசாங்கம் அவரைக்கேட்டுக் கொண்டது. இதுகாறும் இப்பொறுப்பைத் திறமையுடன் நிறைவேற்றி வருகிறார் டாக்டர் கிருஷ்ணன்.


உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானியான டாக்டர் கிருஷ்ணன் பன்முறை அயல் நாடுகளுக்குச் சென்று விஞ்ஞான சொற்பொழிவுகளை ஆற்றியிருக்கிறார்.



டாக்டர் கிருஷ்ணன்
'பத்மபூஷண்' விருது பெறுகிறார்.

முக்கியமான சர்வதேச விஞ்ஞான மாநாடுகள் அனைத்திலும் பங்கெடுத்துக் கொள்ளுகிறார். சில ஆண்டுகளுக்கு முன்னர் ஜெனீவாவில் நடைபெற்ற ஆக்கப்பணிகளுக்கு அணுசக்தியைப் பயன்படுத்துவது சம்பந்தமான மாநாட்டில் கலந்துகொண்ட பின்னர் டாக்டர் கிருஷ்ணன் சோவியத் யூனியனுக்கும் விஜயம் செய்தார். அங்கே இரண்டு வார காலம் தங்கி, முதன்மையான விஞ்ஞான ஆய்வுக் கூடங்களைச் சுற்றிப் பார்த்தார். ஏராளமான இந்திய ஸ்தாபனங்களும், அயல் நாட்டு ஸ்தாபனங்களும் இவருக்குப் பல விருதுகளையும் பட்டங்களையும் வழங்கிக் கௌரவித்திருக்கின்றன.

விஞ்ஞான விஷயங்களில் இந்திய சர்க்காருக்கு இவர் மிகச் சிறந்த ஆலோசகராக திகழ்கிறார். விஞ்ஞானத் துறையில் பிரதமர் நேருவுக்கு வலது கரம் போன்றவர் என்றாலும் மிகையாகாது. இந்திய அணுசக்தி இலாகாவுடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கிறார். திராம்பேயில் புதுமாதிரியான அணு உலையை நிர்மாணித்ததில் டாக்டர் கிருஷ்ணனுடைய பங்கைக் குறைத்து மதிப்பிட முடியாது. அந்த



ஜனாதிபதி டிட்டோவுடன்

அணு உலைக்கு 'அப்சரா' என்று பெயரிட்டவரே நம் கிருஷ்ணன்தான்.

டாக்டர் கிருஷ்ணன் விஞ்ஞான வித்தகர் மட்டுமல்ல. சிறந்த சொற்பொழிவாளரும் ஆவார். எந்த விஷயத்தையும் சுவையுடன் பேசுவதில் சமர்த்தர். சொற்பொழிவு பூராவிலும் நகைச்சுவை விரவியிருக்கும். இவருடன் சற்று நேரம் அளவளாவினாலும் அவரை விட்டுப் பிரிய எளிதில் மனம் வராது.

அறிவியலின் ஆழத்தில் திளைத்து வரும் கிருஷ்ணன் தமிழ்க் கடலையும் மறந்தவரல்ல. தமிழ் இலக்கியங்களில் மிகவும் ஈடுபாடு கொண்டவர். ஆழ்வார்களின் பாசுரங்களிலே அவருக்கு அலாதிப்பற்று. கல்கத்தாவில் பாரதி தமிழ்ச் சங்கத்தை நிறுவுவதில் முன்னின்று பாடுபட்டார். தில்லித் தமிழ்ச் சங்கத்தின் தலைவராக இருந்து தொண்டாற்றி வருகிறார். அவருடைய தமிழார்வத்திற்கு இவை ஒரு சில எடுத்துக் காட்டுகளேயாகும்.

சில ஆண்டுகளுக்கு முன் அகில இந்திய வானொலி நிலையத்தினர் புது டில்லியில் இலக்கிய விவாத அரங்கு ஒன்றை நடத்தினர். முக்கியமான இந்திய மொழிகளைச் சேர்ந்த அறிஞர்கள் இந்த விவாதத்தில் பங்கெடுத்துக் கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சென்னையிலிருந்து வந்த விமானம் தாமதமாக வந்ததினாலோ அல்லது வேறெந்தக் காரணத்தினாலோ தமிழறிஞர்கள் உரிய காலத்தில் மாநாட்டில் பங்கெடுத்துக் கொள்ள இயலாது போயிற்று. இனி என்ன செய்வது? தமிழ் இலக்கியத்தைப்பற்றி யாராவது பேசவேண்டுமே? கடைசி நிமிடத்தில் வானொலி நிலையத்தினருக்கு டாக்டர் கிருஷ்ணனுடைய ஞாபகம் வந்தது. விவாத அரங்கில் சொற்பொழிவாற்றும்படி அவரை வேண்டிக் கொண்டனர். தயாரிப்பு செய்வதற்கு அவகாசமே இல்லை. எனினும் அந்த அழைப்பை ஏற்றுக்கொண்டார் கிருஷ்ணன். அவருடைய பேச்சு அன்று அனைத்திற்கும் மகுடமிட்டாற் போல அமைந்தது. தீந்தமிழில் இலக்கிய விருந்தே அளித்துவிட்டார் கிருஷ்ணன். அவருடைய இலக்கிய ஞானத்தைக் கண்டு அனைவரும் பிரமித்து விட்டார்கள். டாக்டருடைய தமிழ்ப் புலமைக்கு இது மிகச்சிறந்த சான்றாகும்.

''பூமியின் வயதென்ன? - ''சூரிய சக்தி'' — நாம் சந்தித்த மாபெரும் விஞ்ஞானிகள் ''டாக்டர் எஸ். சந்திரசேகரின் பணிகள்'' போன்ற விஞ்ஞான விஷயங்களைப்பற்றி எளிய தமிழில் அவர் கட்டுரைகள் எழுதியிருப்பதையும் இங்கே குறிப்பிடாமல் இருக்க முடியாது. உலகப்பிரசித்திபெற்ற பேரறிஞராயிருந்தும் இவரிடம் செருக்கென்பதே எள்ளளவும் இல்லை. இவருடைய தகைமை, தன்னடக்கம், அன்பு, யாருடனும் சரளமாகப்பழகும் பண்பு முதலியன அனைவரின் இதயங்களையும் ஆகர்ஷித்து விடுகின்றன.

உலக விஞ்ஞானப் பேரரங்கில் உன்னதப் புகழ்பெற்ற டாக்டர் கிருஷ்ணனுக்கு அறுபதாம் ஆண்டு நிறைந்து விட்டது. இந்திய அரசாங்கம் அவருக்கு தேசியப் பேராசிரியர் என்ற பட்டமளித்து கௌரவித்திருக்கிறது. அறுபதாண்டுகள் நிரம்பிய இளைஞர் கிருஷ்ணன் பல்லாண்டுகள் புகழுடன் வாழ்ந்து தாயகத்திற்குத் தொண்டாற்ற வேண்டுமென வாழ்த்துகிறோம்.

★

டாக்டர்

# கே. எஸ். கிருஷ்ணன்

## அவர்களைப் பற்றி:

...... டாக்டர் கிருஷ்ணன் அவர்கள் ஒரு புகழ் பெற்ற விஞ்ஞானி. விஞ்ஞானத் துறையில் அவரடைந்த சாதனைகள் கண்டு நம்முள்ளங்கள் பூரித்துப் பெருமையடைகின்றன.

**ராஜேந்திர பிரஸாத்,**
இந்திய ஜனதிபதி.

...... அவருடைய விஞ்ஞானத் துறைச் சேவை உலகப் புகழ் வாய்ந்தது. தன் பணியைத் தொடர்ந்து செய்து வருங்காலத்தில் மேலும் அவர் புகழ் ஓங்கவேண்டுமென்பதே நம் ஆவல்.

**எஸ். ராதாகிருஷ்ணன்,**
இந்திய உப-ஜனதிபதி.

விஞ்ஞானத் துறையை யன்றி, இலக்கியம், மற்றும் சரித்திரம், கலாசாரம் ஆகியவைகளிலும் அவர் மிக்க ஈடுபாடு உள்ளவர் என்பது குறிப்பிடத் தக்கதாகும். விஞ்ஞானியாகப் புகழடைந்த அவர், ஒரு தமிழ் விற்பன்னருங்கூட. இன்றையத் தமிழ்ப் பெரியோர்களில் ஒருவராகக் கூடக் கருதப்பட்டு வருகிறார். பண்டைய இந்திய சரித்திரம், இலக்கியம், தமிழ் மொழியின் வளர்ச்சி ஆகியவைகள் பற்றி அவர் பேசுவதைக் கேட்டுக் களிப்படையாதவர்கள் இருக்க மாட்டார்கள்.

'நிறைகுடம் தளும்பாது' என்பதற்கு அவரே சான்று. அவர் பாரதத்துக்கும், அகில உலகத்திற்கும் தன் பணியைத் தொடர்ந்து செய்வார் என்று நம்புகிறேன்.

டாக்டர் **ஹுமாயூன் கபீர்,**
கலாசாரம் மற்றும் விஞ்ஞானத்துறை மத்திய மந்திரி.

...... இன்றைய விஞ்ஞான யுகத்தில் விஞ்ஞானத்துக்காகவே தன் வாழ்நாளை அர்ப்பணித்துப் புகழடைந்த இந்தியரொருவரின் சாதனைகளைப் போற்றுவதுதான் முறை......

**விஷ்ணுராம் மேதி,**
சென்னை கவர்னர்.

...... புகழடைந்த விஞ்ஞானிகளில் ஒருவரான டாக்டர் கிருஷ்ணன் அவர்களின் சாதனைகள் நாட்டின் வளர்ச்சிக்கு மிகுந்த பயனையளித்திருக்கின்றன...

**வி. வி. கிரி,**
உத்தர பிரதேச கவர்னர்.

...... உரையாடலின்போது மடை திறந்தாற்போல் சமஸ்கிருத சுலோகங்களிலிருந்து மேற்கோள் காட்டுவார். மேலும் தகுந்த சமயத்தில் அடக்கமாக ஹாஸ்ய வெடிகளையும் அள்ளி வீசுவார். எனக்குக் கிடைத்த அவரது நட்பை நான் பெரிதும் போற்றுகிறேன்......

**ஸ்ரீ பிரகாசா,**
பம்பாய் கவர்னர்.

டாக்டர் கிருஷ்ணன் ஒரு பெரிய சிந்தனையாளர். பாமர மக்களும் நவீன விஞ்ஞான நுணுக்கங்களை எளிதில் புரிந்து கொள்ளும்படி எடுத்துரைக்கும் ஆற்றலை, இயல்பாகவே பெற்றிருக்கிறார்.

**வி. டி. கிருஷ்ணமாச்சாரி,**
திட்டகமிஷன் உதவி சேர்மன்,
புது டில்லி.

புன்முறுவல் பூத்த கம்பீரத் தோற்றமுடையவர். குழந்தையுள்ளமும், நற்குணங்களும் ஒருங்கே படைத்த சீலர். ஒரு விஞ்ஞானியாகவுமிருந்து, தமிழார்வம் கொண்டு, தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு அவர் அரும்பாடு பட்டு வருவதை யெண்ணி இந்திய மற்றும் இலங்கைத் தமிழர்கள் பெருமை கொள்கிறார்கள்.

**எஸ். நடேசன்,**
முன்னாள் இலங்கை அமைச்சர்.

## பரம்பரை நெசவாளி
## இன்றைய மோஸ்தரை
## உங்களுக்கு எடுத்துச் சொல்வார்





இன்றைய நாகரீக மோஸ்தருக்கும் தினுசுகளுக்கும் ஏற்றவாறு கைத்தறி நெசவு வேலைப்பாடுகளில் பரம்பரை நெசவாளி கைதேர்ந்தவராய் விளங்குவது பிரமிப்பூட்டுவதாகும். அதனுல்தான் கைத்தறித் துறையில் **கோ-ஆப்டெக்ஸ்** ஜவுளிகள் பிரபலமாகவும், உங்கள் எந்தத் தேவைக்கும் பொருந்துவதாகவும் இருக்கின்றன.

*கோ-ஆப்டெக்ஸ்*

**கைத்தறி ஆடைகள்**

உங்கள் ஆடைகளுக்கும் அலங்காரத்
திரைகள், விரிப்புகளுக்கும்

**சென்னை ராஜ்ய கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட்,**
34/A-1, பாந்தியன் ரோட், எழும்பூர், சென்னை - 8.


திருச்சி தமிழ் எழுத்தாளர் சங்கம்

எழுத்தாளன்

# சமுதாயத்தின் காவலன்

(மூன்றாவது ஆண்டு விழாத் துவக்க உரை)

**எஸ். எஸ். வாசன்**

ஆசிரியர், "ஆனந்த விகடன்."

---

உங்கள் சங்கத்தின் மூன்றாவது ஆண்டு விழாவைத் தொடங்கி வைக்கும் பெருமையை எனக்களித்தமைக்கு நான் மிக மிக மகிழ்ச்சி யடைகிறேன். இந்த விழாவைத் தொடங்கி வைக்க நான் எந்த விதத்தில் தகுதி யுடையவன் என்று நீங்கள் கருதினீர்களோ? அந்தக் காரணம் எனக்குத் தெரியாது.



ஒரு வேளை உங்கள் அன்புக்குரிய ஆனந்த விகடன் ஆசிரியர் என்ற முறையில் இந்த கௌரவத்தை எனக்கு அளித்திருக்கலாம். அல்லது மடாதிபதிகளுக்கு அடுத்தபடியாக என்னை ஒரு படாதிபதி என்று கருதியும் அழைத்திருக்கலாம். அல்லது இந்த மனிதர் ஒருவர் தான் பொதுக் கூட்டங்களில் அதிகமாக அகப்பட்டுக் கொள்ளாமல் இருக்கிறார், இது ஒரு புது முகம் இவரை அழைத்தால் கூட்டம் கூடும் என்ற எண்ணத்திலும் அழைத்திருக்கலாம். இதைத் தவிர என்னை ஒரு பெரிய எழுத்தாளன் என்று தவறாகக் கருதியும் நீங்கள் அழைத்திருக்கலாம். ஆனால் நீங்கள் என்னை ஒரு பெரிய எழுத்தாளன் என்று உண்மையிலேயே கருதி இருந்தாலும் அது குற்றமில்லை. ஏனெனில் நானும் ஒரு விதத்தில் பெரிய எழுத்தாளன்தான்!

நம் தமிழ் மொழிக்கு முதல் பெரிய எழுத்தாளர் அகத்தியர். அவர் பொதிய மலையில் இருந்து எழுதினார். நான் உச்சிப்பிள்ளையார் மலையிலிருந்து எழுதினேன். எனக்கும் அவருக்கும் ஒரே ஒரு வித்தியாசம்தான். அதாவது அவர் தமிழையே எழுதினார். நான் தமிழில் எழுதினேன். அதுவும் என் சொந்தச் சரக்கல்ல. ஆங்கிலத்திலிருந்து பல நாவல்களைத் தமிழில் மொழி பெயர்த்து எழுதினேன். உங்கள் உச்சிப் பிள்ளையார் கோவில் வாசலில்தான் நான் பிள்ளையார் சுழி போட்டேன். அது எனக்கு உச்ச வாழ்வைத் தந்தது.

உங்கள் திருச்சியில் தான் தொடங்கியது என் எழுத் துலக யாத்திரை. அதில் நான் ஓரளவுக்கு அபிவிருத்தியடைந்திருக்கிறேன் என்று நம்புகிறேன். அந்த நம்பிக்கையில்தான் என் வாழ்வைத் தொடங்கிய ஊரில் உள்ள உங்கள் சங்கத்தின் ஆண்டுவிழாவைத்துவக்கி வைக்க ஒப்புக்கொண்டேன். இதைக் காட்டிலும் வேறு தகுதி எனக்கிருப்பதாக நான் கருதவில்லை. இந்த ஒரு துணிவில்லாவிட்டால் நான் டாக்டர் வரதராசனார் அவர்கள் முன்னிலையில் தமிழ் பேச வருவேனா?

இந்த ஊரில் தாயுமானவர் காலத்திலிருந்து பல பெரிய எழுத்தாளர்கள் தோன்றி வாழ்ந்திருக்கிறர்கள். டாக்டர் ராஜன், டாக்டர் டி. வி. எஸ். சாஸ்திரி, இருவரும் ஆங்கில வைத்தியர்கள். ஆனல் தமிழ் இலக்கியத்தில் கைகண்ட சித்தர்கள், தி. ம. பொன்னுசாமிப் பிள்ளை என்று ஒரு சிறந்த நாவலாசிரியர் இங்கு இருந்திருக்கிறர். இவ்வளவு எதற்கு? உலகத்திற்கே ஒரு புதுமையாக உள்ள புத்தகச் சந்தை உங்கள் ஸ்ரீரங்கத்திலேதான் இருந்து வந்தது.

ஸ்ரீரங்கம் என்ற உடனே எனக்கு ஒரு பெரியாரின் நினைவு வருகிறது. ஸ்ரீ எஸ். ஜி. ராமாநுஜலு நாயுடு என்பவர் எத்தனையோ நாவல்களை எழுதியிருக்கிறர். கம்பராமாயணத்தை அரங்கேற்றிய ஊர் ஸ்ரீரங்கம். கன்னித் தமிழில் அத்தனை ஆழ்வார்களும் பாடிய ஊர் ஸ்ரீரங்கம். ஸ்ரீரங்கநாதர் பள்ளி கொண்டதால் மட்டும் அது பெரிய கோவில் அல்ல. செந்தமிழுக்கும் அதுவே பெரிய கோவில். இலக்கணம் இலக்கியம் என்னும் இரண்டு ஆற்று நடுவில் உள்ள கருப்பொருள்தான் ஸ்ரீரங்கநாதர்.

கம்பர் பாடியது ஸ்ரீரங்கம் என்றல், காளமேகம் பிறந்தது திருவானைக்காவல். நான் எழுதத் தொடங்கியது திருச்சி. ஆகவே, இந்த ஊர் எழுத்தாளர் சங்கத்திலே உள்ள அங்கத்தினர்கள் கவிதை, சிலேடை, ஹாஸ்யம் எல்லாவற்றிலும் எழுத வல்லவர்களாக இருப்பதில் ஆச்சரியமென்ன?

ஸ்ரீமதி குமுதினியம்மாளின் ஹாஸ்யத்திலே நாம் குலுங்கக் குலுங்கச் சிரிப்போம். சிவாஜி ஆசிரியர் திருலோக சீதாராமனின் கவிதை நயமும், திருவாசகமணி கே. எம். பாலசுப்ரமணியம் அவர்களின் உள்ளமுருக்கும் பாட்டுகளும், அகிலனின் அற்புதமான நாவல்களும், ஐயன்பெருமாள் கோனரின் தமிழ்த் தொண்டும், இன்னும் மற்ற இளம் எழுத்தாளர் பலருடைய எழுத்தும் இன்று தமிழ் மக்கள் எல்லோரையும் மகிழ்விக்கின்றன. அது தமிழ்த் தாய்க்கும் திருச்சிக்கும் பெருமையளிக்கும் விஷயம்.

ஆனந்த விகடனுக்கும் தமிழ் நாட்டுக்கும் அமரர் கல்கியை அளித்ததும் திருச்சியே. அதற்காகவும் நான் இங்கு வரக் கடமைப்பட்டுள்ளேன்.

இன்னெரு சொந்த விஷயம். இன்று உங்கள் எல்லோருடைய கவனத்துக்கும் தமிழ் நாட்டின் ஆசிக்கும் பாத்திரமாக உள்ளது ஆனந்த விகடன் மாணவர் திட்டம். அந்தத் திட்டத்துக்கு ஆதி காரணமே உங்கள் திருச்சிதான். திருச்சி மாணவர்கள் தெப்பக் குளத்தில் தூர்வை எடுத்தார்கள். இந்தச் செய்தியைப் படித்தவுடன் எனக்கு வள்ளுவர் குறள் ஒன்று நினைவு வந்தது.

தொட்டனைத்தூறும் மணற்கேணி, மாந்தர்க்குக்
கற்றனைத்தூறும் அறிவு

என்னும் குறள்தான் அது. அதனல்தான் அறிவு, உழைப்பு இரண்டும் கலந்ததாக இருக்க வேண்டும் என்று எண்ணி, ஆனந்த விகடன் மாணவர் திட்டத்தைத் தொடங்கினேன்.

ஆகவே, திருச்சி எனக்கு எல்லா விதத்திலும் நெருங்கிய உறவுடைய நகரம். இவற்றைக் காட்டிலும், என்னை விழாவைத் துவக்க அழைத்தவர்களும் எழுத்தாளர்கள். "எழுத்து கட்டளையிட்டால் இயலாதென்று சொல்ல முடியுமா?" என் வளர்ச்சிக்குக் காரணமே உங்களைப் போன்ற எழுத்தாளர்கள் தானே? கருத்தைக் கண்ணுடி போல் வடித்தெழுதிய அமரர் 'கல்கி'யும் 'தேவனு'ம் உங்களைப் போன்ற எழுத்தாளர் பலரும் சேர்ந்து கட்டிய கோட்டைதான் ஆனந்த விகடன். அதன் சார்பில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள இத்தகைய அரியதொரு சந்தர்ப்பத்தை நீங்கள் அளித்ததற்கு நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்?

இந்த விழாவில் பல இளம் எழுத்தாளர்களைக் காண்கிறேன். இளைஞர்கள் பலர் எழுத்துலகில் இறங்கி யிருப்பது எனக்கு ஆனந்தம் அளிக்கிறது.

எழுத்தில் புதுமை வேண்டுமானல் புதிய எழுத்தாளர்கள் தோன்ற வேண்

டும். "எல்லாம்தான் பழமையில் இருக்கிறதே, எது புதுமை?" என்று சிலர் கேட்பார்கள். ஆனால் பழைய பாத்திரத்தில் பாசி படர்ந்திருக்கும். அதைத் தினந்தோறும் தேய்த்து வைத்தால்தான் கண்ணுக்கு அழகாய் இருக்கும். அதைப் போலவே, கருத்துக்கள் பழையனவாக இருந்தாலும் அவற்றுக்குக் கணந்தோறும் புது மெருகு கொடுத்தால்தான் கருத்துப்பொலிவுடன் விளங்கும்; பலருக்கும் பரவும். அதற்காக புதிய எழுத்தா நிரம்ப வர வேண்டும் என்று நான் ளர்கள் விரும்புகிறேன்.

படை பலம் உலகை ஆண்ட காலம் மலையேறி விட்டது. இன்று பத்திரிகைகள்தான் உலகத்தை ஆளுகின்றன. அச்சும், மையும் இருந்தால் மாத்திரம் பத்திரிகை ஆகிவிடாது. ஆதாரமான கருத்துக்கள் வேண்டும். கலியாணப் பத்திரிகைக்குக் கூட பெண்ணும் மாப்பிள்ளையும் இருந்தாக வேண்டும். பத்திரிகைகளில் கருத்துக்களைக் கொட்டி கலை பெய்யச் செய்வது உங்கள் மதிதான். 'பேனாபிடித்தவர் பெரியவர்' என்றதத்துவம் தான் இன்றைய ஆட்சி. காந்தியும் கார்ல் மார்க்சும், ரூஸோவும் லிங்கனும் உலகில் தோன்றியபோதே அரசியலிலும் அறிவு புகுந்துவிட்டது. இப்பொழுது நடப்பது அறிவாட்சி. முன்பு நடந்தது ஆயுதத்தின் ஆட்சி.

முன்பெல்லாம் அறிவுடையவர்கள் அருட் பாதையில் மட்டும் தான் நமக்கு வழி காட்டினார்கள். புத்தர், ஏசுநாதர், முகம்மதுநபி, சங்கரர், ராமாநுஜர், அப்பர், சுந்தரர், ஆண்டாள் ஆகிய எல்லாப் பெரியோர்களும் எழுத்தாளர்கள் தான்; கவிஞர்கள்தான்.

அவர்கள் காட்டிய வழி அருள் வழி. இன்றைய எழுத்தாளர்கள் காட்டுவது அறவழி. இன்று உலகில் புகழ் பெற்ற நமது நேருஜி ஒரு எழுத்தாளர். ராஜேந்திர பாபு ஒரு எழுத்தாளர். ராஜாஜி, மா. பொ. சி., ஜீவா, அண்ணாத்துரை, ராமசாமி நாயக்கர் அனைவரும் எழுத்தாளர்களே. இன்று நடப்பது எழுத்தாளர் ஆட்சியே தான்.

பல எழுத்தாளர்கள் பட்டினி கிடக்கிறார்களே? தமிழ் எழுத்தாளர் மகாநாடு என்றால் ரயிலில் கூட சலுகை தர மறுக்கிறார்களே? (அண்மையில் இந்தச் சலுகை கிடைத்துள்ளது.) இது எப்படி எழுத்தாளர் ஆட்சியாகும் என்று உங்களுக்கு ஐய மேற்படலாம். எழுத்தாளர் ஆட்சியில்தான் எழுத்தாளர்கள் பட்டினி கிடப்பார்கள்! எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் ஆண்டால்தான் எழுத்தாளர்களை மதிப்பார்கள்! இந்த இரண்டில் எது நல்லது என்று பார்த்தால், நாம் சிறிது கஷ்டப்பட்டாலும் பாதகமில்லை. நம் ஆட்சியே நடக்கட்டும் என்று தான் நாம் நினைப்போம். அப்படி நினைக்கும்போது நமக்குப் பெருமை ஏற்படுகிறது. அத்துடன் பொறுப்பும் அதிகமாகிறது.

நாட்டின் நல் வாழ்வு எழுத்தாளர் கையில்தான் இருக்கிறது. பிரமன் எழுதிய எழுத்து ஆயுசுடன் முடிந்து விடுகிறது. **ஆனால் பேனாப் பிடித்தவன் எழுத்துக்கள் எத்தனையோ காலம் இருக்கின்றன.** ஆதலால் பேனாவின் படைப்பு பிரமன் படைப்புக்கு மேல் என்று ஆகி விட்டது. ஆகவே, அதை நல்ல முறையில் நாம் உபயோகிக்க வேண்டும். பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்காய் முடிந்தால் அதற்கு அநுமார் என்று பெயர் வைத்துவிடலாம்; அல்லது உடைத்தெறிந்து விட்டு வேறு ஒன்றைச் செய்துவிடலாம். ஆனால் நாம் உருவாக்குவது மண்ணில் அல்ல, மனத்தில். நம் எழுத்துக்கள் மக்கள் மனதில் பதிகின்றன. பதிந்து முளைக்கின்றன.

நன்கு சிந்தித்து வருங்கால சமுதாயத்தை உருவாக்கும் நல்ல விதைகளை விதைக்க வேண்டும். நம் நாடு புதிதாக சுதந்திரம் பெற்ற நாடு. சுதந்திரம் வந்து பதினோறு ஆண்டுகள் ஆனாலும் இதை ஒரு வயதுக் குழந்தைக்குத்தான் ஒப்பிடலாம். ஆகவே, கைக் குழந்தைக்குப் பால் புகட்டும் தாயைப் போல அறிவுப் பாலைப் புகட்டும் எழுத்தாளர்கள் கவனத்துடன் இருக்க வேண்டும். நீங்கள் அதைச் செய்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

இன்னும் ஒரு விஷயம். சென்ற ஆண்டு ஆனந்த விகடன் சிறு கதைப் போட்டியில் திருச்சி எழுத்தாளர் திரு. ஏ. எஸ். ராகவன் பரிசு பெற்றிருக்கிறார்.

நாவல் போட்டியிலும் திருச்சியி லிருந்து பலர் கலந்துகொண்டார்கள்.

இந்த ஆண்டு அறிவிக்கப்பட்டிருக்கும் விகடன் நாடக இலக்கியப் போட்டியைப் பற்றியும் நீங்கள் அறிந்திருப்பீர்கள். இது வியாபார முறையில் ஆரம்பிக்கப்படவில்லை என்பதை அதன் மகத்தான பரிசுத் தொகையிலிருந்தே நீங்கள் அறியலாம்.

பாட்டுக் கச்சேரி நடத்தும் சபைகள் ஒரு சிலருக்காவது இலவசமாகப் பாட்டுச் சொல்லித் தரவேண்டும். அப்படிச் செய்தால்தான் அவைகளுக்கு தமாஷா வரியிலிருந்து விலக்கு உண்டு. வரி விலக்கு இல்லாவிட்டாலும் ஆனந்த விகடனும் இந்த விதிக்கு விலக்கல்ல என்பதுதான் என் தாழ்மையான அபிப்பிராயம்.

எழுத்தையே நம்பி வாழும் பத்திரிகைகள் மொழிக்கும் தொண்டு செய்ய வேண்டும். அதில் லாப நஷ்டம் பார்க்கக் கூடாது. நஞ்சைக்கு உரம் இடுவது போல், நல்ல இலக்கியச் செழிப்புக்கு நம்மால் இயன்றளவு தொண்டு செய்ய வேண்டும் என்று கருதினேன். அதன் பலனே நாடக இலக்கியப் போட்டி. பரிசுத் தொகை இருபத்தையாயிரம்.


அதில் திருச்சி எழுத்தாளர் சங்க அன்பர்கள் நன்றாக ஈடு பட்டு அந்தப் பரிசைத் தட்டிக்கொண்டு போக வேண்டும் என்று நான் ஆசைப்படுகிறேன்.

அழியாத இலக்கியங்களைப் படைக்கும் வாய்ப்பு உங்களுக்கு இருக்கிறது. எந்த அரசியல் கட்சிகளுக்கும் இல்லாத அளவு மக்களின் ஆதரவும் உங்களுக்கு இருக்கிறது. இந்நாட்டில் பத்திரிகை படிப்பவர்களின் எண்ணிக்கை அவ்வாறு பெருகி வருகிறது. இந்த அரிய வாய்ப்பை உணர்ந்து அதற்கேற்றபடி நாம் நடந்து கொள்ள வேண்டும்.

சமுதாயத்தின் காவலன் எழுத்தாளன்.
சமுதாயத்தை உருவாக்குபவன் எழுத்தாளன்.
இன்றைய சமுதாயத்தின் அச்சாணியே
எழுத்தாளன்தான்.

அவன் நேற்று வரை "புலவர் வறுமை" என்ற புதரில் சிக்கியிருந்தான். அதில் பழகிப் பழகி, வறுமை இருந்தால் தான் எழுத வரும் என்று நம்பும் அளவுக்குக் கூட அவன் வந்துவிட்டான்! கலைமகளும் திருமகளும் ஒன்று சேரமாட்டார்கள் என்று பல கவிதைகள் கூடப் பாடிவிட்டான்! ஆனால் இன்று காலம் மாறிவிட்டது. சினிமா, ரேடியோ, பத்திரிகை, அரசியல் ஆகிய அத்தனை துறைகளிலும் அவன் இப்போது இறங்கலாம். அவனுடைய எழுத்து நன்றாக இருந்தால் ஒரே நாளில் அத்தனை மொழிகளிலும் அவன் பெயர் பரவிவிடும். அவன் வறுமையின்றி புகழும் பொருளும் பெற்று வாழலாம் என்பதே என் நம்பிக்கை. பொது மக்களின் பொழுது போக்குக்கும் களிப்புக்கும் காரணமாக உள்ள எழுத்தாளர் சமூகம் முன்னேற வேண்டும்; அவர்கள் சீரும் சிறப்புமாய் வாழ வேண்டும்; இதுவே என் வாழ்க்கையின் லட்சியம்.


வாழ்க எழுத்தாளர்! வளர்க தமிழ்!



# எழுத்துக் கலை

டாக்டர் மு. வரதராசனார்.

நாட்டைக் காக்கும் வீர அணி எழுத்தாளர் அணியேயாகும். இவர்கள் போரை நாடிக் கத்தியை நீட்டி நிற்கும் போர் வீரர்கள் அல்லர். போரை நிறுத்தி அமைதியைக் காக்கப் புத்தியைத் தீட்டி நிற்கும் மாவீரர்கள். நம் மொழியில் வீரத்தைப் பற்றியும், போர்த் திறமை பற்றியும் பரக்கப் பேசும் நூல்கள் மிகுதியாக உள்ளன. எழுதியும், பேசியும், பெருமைப்பட்டும் வீரத்தைப் போற்றியவர்கள் நாம். ஆனால் இன்றோ நிலைமை மாறி விட்டது. போரே இனி நாட்டில் எழக்கூடாது. அதற்குப் பாடுபடக்கூடிய மாபெரும் சக்தியாக எழுத்தாளர் தம் பேனா இருக்கிறது. எழுத்தாளர்கள் அறிவுப் பட்டாளமாக, அன்புப் பட்டாளமாக அணிவகுத்து நிற்கிறார்கள்.



வெறும் வீரர்கள் மட்டுமல்ல இவர்கள். நாட்டைக் காக்கும் மருத்துவர்களும் இவர்களே ஆவர். மக்களின் உள்ளங்களில் புரையேறிவிட்ட நோவுக்கும் அயர்வுக்கும் கருத்துக்கள் என்னும் மாத்திரைகளைப் பக்குவம் அறிந்து தருபவர்கள் இவர்கள். மருந்து நாக்குக்குக் கசக்கலாம். ஆனால் நாட்டுக்கு நல்லதாக இருக்கும். கண்ணுக்குக் கைக்கலாம். ஆனால் கருத்துக்கு இனிக்கும்.

காலச் சிற்பிகளான எழுத்தாளர்கள் காலத்தைக் கடந்து சென்று கருத்துக்களைத் தரும்போது மக்கள் அவற்றைப் புரிந்துகொள்ளத் தயங்குகிறார்கள். அவர்கள் கண் இருந்தும் குருடராவர். காதிருந்தும் செவிடராவர். எதையும் போற்றி அனுபவிக்க முடிவதில்லை அவர்களால். அத்தகையோர்க்கு நெஞ்சில் பதியும்படி அறிவுரைகளை அன்பாக, அழகாக, அழுத்தமாகத் தருகிறார்கள் எழுத்தாளர்கள். எழுத்தாளர்கள் நல்ல பரம்பரையில் வந்தவர்கள்.

இந்த அணி பிற அணிகளைப் போல் எண்ணிக்கையில் பெருமைப்படுவது அல்ல. கூறப்போனால் இவர்கள் மிகச் சிறிய அணியினரே ஆவர். ஆனால் இவர்கள் செய்கின்ற பணி உலகின் போக்கையே மாற்றிவிடக்கூடிய சக்தி வாய்ந்தது.

அடக்கம் அமரருள் உய்க்கும். எழுத்தாளர் அடங்கி வாழ்பவர்கள். நாக்கையும் பேனாவையும் அடக்கமாகக் கொண்டு வாழ விரும்புகின்றவர்கள். ஆனால் சொற்களைக் கொண்டு விளையாடவும் வினையாடவும் அறிந்தவர்கள்.

மக்கள் எழுப்பிய மண்டபங்கள், மன்னர் எழுப்பிய அரண்மனைகள் காலத்தால் பாழாகலாம். உறையூரே இதற்குச் சான்று. அந்தப் பெரு நகர் இன்று எங்கே? மாட மாளிகைகளும் எழிற்

மூன்றாவது ஆண்டு விழாவில் டாக்டர். மு. வ. அவர்களின் தலைமை உரையின் சாரம்.

கோபுரங்களும் தமிழனின் பெருமை பேசி நின்ற அந்தத் தலைநகர் இன்று எங்கே? இந்த உறையூரில் எத்தனைக் கலைஞர்கள் வாழ்ந்தார்கள், எத்தனை ஓவியர்கள் செழித்தார்கள், கல்லில் உயிரூட்டிய சிற்பிகள் எத்தனை பேர் மண்டியிருந்தார்கள்! அவர்களது வாழ்வும் கனவும் கொழித்த கலையின் சாயல்கூட இன்று இல்லையே!

ஆனால் கண்ணெதிரே இல்லாத அந்தக் காலத்தின் பெருமையைப் புலவர்கள் எழுதிவைத்த நூற்கள் இன்னமும் நமக்குக் காட்டிக் கொண்டுதான் இருக்கின்றன. அழியாக் கவிதைகளில் அழியும் அழகைப் பொறித்துத் தந்துள்ளார்கள் அவர்கள். வரலாறு பேசும் பேரலறிய அப் பொற்காலம் கவிதைகளால் சுட்டிக் காட்டப்படுகின்றது இப்போதும். சிற்பக் கலை வாழ எழுத்துக் கலை வாழவேண்டும். கலைகளிலே உயர்ந்தது, சிறந்தது எழுத்துக் கலையேயாகும்.

இன்று நாட்டில் ஒரு வகைத் தீண்டாமை நிலை இருந்து வருவதைக் காணும்போது வேதனையுறுகிறது நெஞ்சம். பழைய இலக்கியங்களைக் கற்ற புலவர்களில் பலர் புதுமை இலக்கியங்களை விரும்புவதில்லை. சங்க இலக்கியங்களே போதும் என்று கருதுகிறார்கள். அதே போல, புதுமை எழுத்தாளர்கள் பழந்தமிழ் இலக்கியங்களைக் கற்பதில்லை. இப்படியாகத் தீண்டாமை மனப்பான்மை நிலவுகிறது. இந் நிலை மாறவேண்டும். புதுமை எழுத்தாளர்கள் சிந்தனைச் சிற்பிகள் என்பதையும், சங்க காலக் கவிஞர்களின் பரம்பரையினர் என்பதையும் புலவர்கள் மறந்துவிடக் கூடாது. அதே போல் பழைய இலக்கியங்களினின்றே புதுமை மலர்கின்றது என்பதைப் புதுமை எழுத்தாளர்களும் மறந்துவிடக் கூடாது. இரு சாரார்க்கும் என் வேண்டுகோள் யாதெனில், பழையதை நாடுவோர் புதுமையையும் சுவைக்கவேண்டும், புதுமையில் திளைப்போர் பழைமையையும் காண வேண்டும் என்பதே.

'நாட்டின் காவலர்களாகவும், பிணி தீர்க்கும் மருத்துவர்களாகவும் உள்ளவர்கள் எழுத்தாளர்கள்' என்றேன். காத்தலும் படைத்தலும் அழித்தலும் ஆகிய மூவகைப் பெருந் தொழில்கள் ஆற்றுவோர் இவர்கள். ஆக்கலும் காத்தலும் ஒருங்கே அமைந்த எழுத்தாளரே சிறப்புப் பெறுபவர் ஆவர்.

இவர்களைப் போற்றிக் காத்தல் மக்களின் கடமை. வறுமையால் வாடும் நெஞ்சு, வண்மை காணாத கலைஞனின் உள்ளம் வாழ்வின் தேவைகளைத் தேடிக் கொள்ளப் புன்மைக் கருத்துக்களைத் தீட்டும் நிலை ஏற்பட்டால் அதற்கு மக்களே பொறுப்பேற்பவர் ஆவர். எனவே பணிவோடு வேண்டுகிறேன். எழுத்தாளர்களைக் கெட்டவர்களாக ஆக்காதீர்கள். இரக்கம், அருள், ஆதரவு, வாழ்வு இவற்றைத் தாருங்கள் எழுத்தாளர்கட்கு. எழுத்தாளன் பட்டினி, எதிர்காலத்துக்குத் தீமை.

பழங்காலப் புலவர்களும் எழுத்தாளர்கள் தாம். அவர்களுக்கு அரசர்கள் எவ்வளவோ மதிப்புக் கொடுத்து வந்தார்கள். அரசினர் தவறு செய்தால் புலவர்கள் சுட்டிக் காட்டித் திருத்துவார்கள். புலவர்களின் அறிவுரைக்கும் அறவுரைக்கும் மன்னன் தலை வணங்கினான். தலையை வாங்கவில்லை. புலவன் பெருமையோடு வாழ்ந்தான், பெருமிதத்தோடு வாழ்ந்தான். அந்தப் பெருமையும் பீடும் இன்றைய எழுத்தாளர்க்கும் வேண்டும்.

சிந்திப்பவர்களின் எண்ணிக்கை நாட்டில் பெருக வேண்டும். பசித்தவன் தானே புசிப்பான்? பசியில்லாதவனுக்கு திணித்தால் வயிற்று நோவு தானே வரும்? எனவே வீட்டுக்கு ஒரு நூல் நிலையம் ஏற்பட்டு மக்கள் அனைவரும் படிக்கும் வழக்கத்தை மேற்கொள்ள வேண்டும். படித்தவர்களைக் கண்டு மனம் மகிழும் நிலை மற்றவர்க்கு ஏற்பட வேண்டும்.

இன்றைய கல்வி முறையில் உள்ள குறைபாட்டைப் பற்றிப் பல அறிஞர்கள் கூறியிருக்கிறார்கள். குறைபாட்டுக்குக் காரணம் கல்வித் துறையில் உள்ள 'திணிப்பு' முறையே யாகும். அறிவுப் பசி ஏற்படாதவரை திணித்துப் பயன் என்ன? எனவே பசிக்காதவர்களுக்குப்

பசியை உண்டாக்கவேண்டும். பின்னர் அவர்கள் தாமே வலியப் புசிப்பார்கள். கல்வித் துறையில் இம் முறையைப் பின்பற்றினால் குறைபாடுகள் அகலும்.

'இலக்கியம் பயனுக்கா, பொழுது போக்குக்கா?' என்ற கேள்வி எழுகிறது. கேள்வியிலேயே விடையும் இருக்கிறது. பொழுதுபோக்கு என்பதும் ஒரு பயன் தானே? நன்றாகப் பொழுது போக்க இலக்கியம் பயன்பட்டாலும் சிறந்த பயனே எனலாம். ஆனால் நமக்கு வெறும் பொழுதுபோக்கு மட்டுமே போதுமானதல்ல. இலக்கியச் சிறப்புப் பொருந்திய நூல்களும் வேண்டும். இரண்டும் விரவிய இலக்கியமும் நன்றே ஆகும்.

இன்னொன்று. இலக்கியங்களில் கொச்சை மொழிகளைப் பயன்படுத்தலாமா என்கிற கேள்வி. சிலர் இதை எதிர்க்கிறார்கள். ஆனால் இதில் தவறு இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. வெளிநாட்டு இலக்கியங்களில்கூடக் கொச்சை மொழிகள் விரவிக் காணக் கிடக்கின்றன. தக்க இடங்களில், பொருட் செறிவைக் கருதிப் பெய்த கொச்சையும் இச்சையோடு ஏற்பதேயாகும்.

இந்த எழுத்தாளர் அணிக்கு நாட்டு மக்களின் துணை வேண்டும். நாட்டைக் காக்கும் பொறுப்பை அவர்கள் செம்மையாகச் செய்வார்கள்.

வாழ்க எழுத்துக்கலை!

---



BEST BY TEST




அதோ!
மோட்டார்
வாகனங்களின்
ஜீவநாடி!

★

கிடைக்குமிடம்:
இம்பீரியல் ட்ரேட்ஸ்
அம்கோ—ஹவுஸ்
பட்டர்வர்த் ரோடு,
திருச்சி-2.
போன்: 406.



# சென்ற ஆண்டு விழா

சென்ற ஆண்டு ஜூலை மாதம் 27வயன்று காலை, திருச்சி நகரப் பிரமுகர்கள், வர்த்தகப் பெருமக்கள், கல்லூரி ஆசிரியர்கள், மாணவ, மாணவியர், பல்வேறு சங்கங்களின் பிரதிநிதிகள், இலக்கிய ரசிகர்கள் அனைவரும் திருச்சி டவுன் புகை நிலையத்துக்கு அருகாமையிலுள்ள உருமு தனலட்சுமி வித்யாலயத்தை நோக்கிச் சாரி சாரியாகச் சென்று கொண்டிருந்தார்கள். கீழ் அரண் சாலையிலிருந்து டவுன் நிலையத்திற்குச் செல்லும் கிளைப்பாதையின் முகப்பில், "எழுத்துலக நண்பர்களே வருக, வருக" என்ற அலங்கார வளைவு மலைக்கோட்டையை எதிர்நோக்கிக் கம்பீரமாக அமைக்கப்பட்டிருந்தது.

வழி நெடுக வாழை மரங்கள், மகுட தோரணங்கள், வரவேற்பு வளைவுகள், அலங்காரக் கம்பங்கள் பிரமாதமாக அலங்கரிக்கப்பட்டிருந்தன. ஏடுகளை அலங்கரிப்பதுபோல திருச்சி நகர வீதிகளை அலங்கரித்திருந்தனர்.

உருமு தனலட்சுமி வித்யாலயத்தின் மைதானத்தில் விழாவுக்காக, விசேஷமான பந்தல் அமைக்கப்பட்டிருந்தது. விழாப் பந்தலின் முகப்பு வாசலில் திரளானபேர் கூடி நின்று நாதஸ்வர வாத்தியம் முழங்க விழாத் தலைவர்களை வரவேற்கக் காத்திருந்தனர். தலைவர்கள் விழா நடக்கும் இடத்திற்கு வந்ததும் கூடியிருந்தபிரமுகர்களின் பிரதிநிதிகள் தலைவர்களுக்கு மாலை சூட்டி வரவேற்று விழாப் பந்தலுக்கு அழைத்துச் சென்றூர்கள்.

விழாப் பந்தலில் ஆயிரமாயிரம் பேர் கூடி அமரிக்கையாக தலைவர்களின் நல்லுரைகளைக் கேட்க அமர்ந்திருந்தனர். பந்தலில் கம்பத்துக்குக் கம்பம் தமிழ் மொழியின் சிறப்புக்களை ஏந்திய கவிதைகள் காட்சி தந்தன. ஒளிமயமாக மின் விளக்குகளும், பல்வேறு இலைத் தளிர்களும் பந்தலை சிறப்பாக அலங்கரித்திருந்தன.

குமாரி சரோஜாவின் தமிழ்த்தாய் வாழ்த்துடன் விழா தொடங்கியது. வரவேற்புக்குழுவின் தலைவர் திரு. "சுகி" சுப்ரமண்யம் தனக்கே உரித்தான ஹாஸ்யம் கலந்த தனது இன்சொற்களால், கவிதையும் உரைநடையுமாக வந்திருந்த அனைவரையும் வரவேற்று, திருச்சிராப்பள்ளியில் ஆதிகாலம் தொட்டுத் தமிழ் வளர்த்த பெரும் புலவர்களையும், அவர்களை ஆதரித்த பெருமக்களையும் எடுத்துக்கூறி "மூவாத் தமிழுக்கு முத்தான எங்கள் டாக்டர் மு. வ. அவர்களே. வாழும் தமிழை வளர்க்கப் பிறந்த எங்கள் வாசன் அவர்களே! பைந்தமிழ் வளர்க்கும் செந்தமிழ்க் கலைமகளின் செவிலித் தாய் கி. வா. ஜ. அவர்களே! பைந்தமிழே பாரெல்லாம் சென்று ஏனைய மொழிகளுடன் கலந்து கரைந்து நிறைந்து நிற்கிறது என்று ஆங்கில மொழிப்பதம் ஒவ்வொன்றையும் அழகு தமிழ்ச் சொல் என்று கூறும் பன்னீர் **(PUN)** பாலசுப்ரமணியம் அவர்களே! வருக வருக! பெருவாழ்வு வாழ்ந்த உங்கள் வாக்குகளால் வழங்குங்கள் செந்தமிழை. பூரித்த மனதில் பொங்கிவரும் கருத்துக்களை வாரி வழங்குங்கள். கேட்கக் காத்திருக்கிறோம். உள்ளம் நிறைய, உவகை பொங்க, உணர்ச்சி ததும்ப, உங்கள் வார்த்தைகளை கேட்டுரசித்து ஆனந்தம்பெற ஆர்வத்துடன் அமர்ந்திருக்கிறோம்," என்று தனது வரவேற்புரையை முடித்தார்.

அடுத்து சங்கத் தலைவர் ரெட்டியார், ஆண்டுக்கு ஒரு புதிய செய்தியை திருச்சித் தமிழ் எழுத்தாளர்கள் தமிழகத்துக்கு அறிமுகம் செய்வது வழக்கமென்றும் சென்ற வருடம் ஆபாச இலக்கியத்தைக் கண்டனம் செய்து அறிக்கையிட்டதாகவும், இந்த ஆண்டு, கட்சி அரசியலில் கலக்காத நடுநிலையான சிந்தனையாளர்கள் நாட்டில் பெருகவேண்டு மென்பதே திருச்சி எழுத்தாளர் சங்கத்தின் அறிக்கையும், வேண்டுகோளுமாகும் என்று கூறினர்.

திரு. அகிலன் சங்கத்தின் ஆண்டு அறிக்கையைப் படித்தார். இறுதியில், தனி மனிதர்களின் அறிவு, திறமை, கலை உணர்ச்சி, செயல்கள், இவற்றால் ஒரு நாடு பயனடைய வேண்டுமானல் அந்த நாடு அந்தத் தனி மனிதர்களை நன்ருகப் புரிந்துகொள்ள வேண்டும். கட்சிக்காகவோ, சாதி சமயத்திற்காகவோ ஒரு வரைப் புகழ்வதும் சரி, இகழ்வதும் சரி, அறியாமையிலும் அறியாமை. உலகத்தின் சிறந்த சிந்தனையாளர்களும், கலைஞர்களும், எந்தச் சார்பு மற்ற தனி மனிதர்களே.

ஆழ்ந்த சிந்தனைக்கும் வலிமையான திட்டங்களுக்கும் அக வாழ்வும் புற வாழ்வும் மலர்வதற்கான வழி வகைகளுக்கும் இந்த நாடு தனிப்பட்ட நிலையில் நின்று சிந்திக்கும் பேரறிஞர்களையே எதிர் பார்த்து நிற்கிறது. பாரபட்சமற்ற திட்டங்களைச் சொல்லக் கூடியவர்கள் விருப்பு வெறுப்பின்றிச் சிந்திக்கும் தனி மனிதர்களே.

இத்தகைய நடுநிலைமைச் சிந்தனையாளர்களும், அவர்களுடைய எண்ணங்களைப் புரிந்து கொண்டு செயலாற்றும் பண்புள்ள இளைஞர்களும் இந்த நாட்டில் பெருகவேண்டும் என்பதே எங்கள் ஆவல். இதுவே சங்க அறிக்கை தந்த இந்த ஆண்டின் செய்தி.

தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் தமிழர் வாழும் இதர இடங்களிலிருந்தும் தமிழ் அறிஞர்களும் எழுத்தாளர் சங்கத்தாரும் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியிருந்தார்கள். அந்த வாழ்த்துச் செய்திகளை சங்க துணைச் செயலாளர் திரு. ஐ. ஷண்முகநாதன் வாசித்தார்.

விழாவைத் தொடங்கி வைத்த ஆனந்த விகடன் ஆசிரியர் திரு. வாசன் அவர்கள் மேடையில் காம்பீரமாக வைக்கப்பட்டிருந்த குத்து விளக்குகளை ஏற்றி வைத்து தனது துவக்க உரையை* ஆற்றினர்கள்.

திரு. வாசன் அவர்கள் தமது துவக்க உரையில், உங்கள் உச்சிப்பிள்ளையார் கோவில் வாசலில்தான் என் எழுத்துக்குப் பிள்ளையார் சுழி போட்டேன். அது எனக்கு உச்ச வாழ்வைத்தந்தது. உங்கள் திருச்சியில் தொடங்கியது என் எழுத்துலக யாத்திரை. அதில் நான் ஓரளவு அபிவிருத்தியடைந்திருக்கிறேன் என்று நம்புகிறேன், என்றுகூறி திருச்சிராப்பள்ளியில் தமிழ் வளர்த்த அன்றைய எழுத்தாளர்களையும், சிறந்து விளங்கும் இன்றைய எழுத்தாளர்களையும் வாசன் அவர்கள் குறிப்பிட்டார்கள். அமரர் கல்கியைத் தந்தது உங்கள் திருச்சிராப்பள்ளியே என்று வாசன் அவர்கள் பெருமிதத்தோடு கூறினர். பேனு பிடித்தவர்கள் பெரியவர்கள் என்ற தத்துவம்தான் இன்றைய ஆட்சி. கார்ல் மார்க்சும், ரூஸோவும் லிங்கனும் உலகில் தோன்றியபோதே அரசியலிலும் அறிவு புகுந்துவிட்டது. இப்போது நடப்பது அறிவாட்சி. முன்பு நடந்தது ஆயுதங்களின் ஆட்சி.

முன்பெல்லாம் அறிவுடையவர்கள் அருட் பாதையில் மட்டும்தான் நமக்கு வழி காட்டினர்கள். இன்றைய எழுத்தாளர் காட்டுவது அறவழி. இன்று உலகில் புகழ்பெற்ற நமது நேருஜி ஒரு எழுத்தாளர். ராஜாஜி, மா. பொ. சி. ஜீவா, அண்ணுத்துரை, ராமசாமி நாயக்கர் அனைவரும் எழுத்தாளர்களே. இன்று நடப்பது எழுத்தாளர் ஆட்சி என்று விரிவாகக் கூறி விழாவைத் தொடங்கிவைத்தார்கள்.

*(துவக்க உரை, தனியாக பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.)

விழாத் தலைவர் திரு. டாக்டர் மு. வ. அவர்கள் தமது முன்னுரையில் எழுத்துக்

கலையின் தனிச் சிறப்பை எடுத்துக் கூறிவிட்டு எழுத்தாளர்கள் பேனாவையும் நாக்கையும் அடக்கமாகக் கொண்டு வாழ விரும்புகிறவர்கள். ஆனால் சொற்களைக் கொண்டு விளையாடவும் வினையாற்றவும் எழுத்தாளர்களுக்குத் தெரியும். எழுத்தாளர்களுக்கு மூன்று ஆற்றல்கள் இருக்கின்றன; படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முப்பெரும் ஆற்றல்களே அவைகள். இந்த ஆற்றல்களில் படைத்தல் காத்தல் ஆகிய இரு ஆற்றல்களும் ஒருங்கே ஒரு எழுத்தாளனிடம் இருந்தால் மிக்க சிறப்புண்டு. எழுத்தாளன் மக்களின் ஆதரவைப் பெறாத நிலையில் வறுமையால் வாடும்போது ஆபாச இலக்கியங்களை உருவாக்குகிறான். ஆகவே பொதுமக்களை ரசிகப்பெரு மக்களை ஒன்று கேட்டுக்கொள்கிறேன். தயவு செய்து எழுத்தாளர்களை கெட்டவர்களாக மாற்றாதீர்கள். இரக்கம் அருள் ஆதரவு, வாழ்வு இவைகளை எழுத்தாளர்களுக்குக் கொடுங்கள். எழுத்தாளன் பட்டினி, எதிர்கால நாட்டுக்குத் தீமையே தரும். ஆதிகாலத்தில் அரச நீதி தவறியபோது அதனை தைரியமாக எடுத்துச் சொன்னவர்கள் எழுத்தாள பரம்பரையிலே தோன்றிய புலவர்கள். புலவர்களின் அறவுரைகளையும் அறிவுரைகளையும் கேட்டு அரசர்கள் தலைவணங்கினார்கள். · தலையை வாங்கவில்லை. பழந்தமிழ்ப் புலவர்களுக்கு இருந்த மெய்த்துணிபு இன்றைய எழுத்தாளர்களுக்கும் இருக்க வேண்டும். பெருமை மட்டுமல்ல பெருமிதமும், அடக்கம் மட்டுமல்ல, அஞ்சாமையும் எழுத்தாளர்களுக்கு வேண்டும், படித்தவர்களைக்கண்டு மனம் மகிழும் நிலை மற்றவர்களுக்கும் ஏற்பட வேண்டும், என்று விரிவானதோர் அறவுரையும் அறிவுரையும் வழங்கினார்கள்.

அடுத்து கலைமகள் ஆசிரியர் திரு. கி. வா. ஜ. சிறப்புச் சொற்பொழிவாற்றுகையில் திருச்சி தமிழ் எழுத்தாளர் சங்கம் மூன்று வயதுக் குழந்தை, இதற்கு என் நல்வாழ்த்துக்கள் என்று கூறி உழவர் ஓதையிலும் மதகோதையிலும் நடக்கும் காவிரியின் சிறப்பை விளக்கி இலக்கிய நயம் நிறைந்த, கருத்துச் செறிந்த, சிந்தைக்கினிய, சொற்பொழிவாற்றினார்.

கடைசியாக திருவாசகமணி திரு. கே. எம். பாலசுப்ரமணியம் அவர்கள் பேசுகையில் இலக்கிய ரசனை மக்களிடம் பரவுகின்ற வேகத்தைப்பார்த்து சந்தர்ப்ப வாதிகள் மட்டரக இலக்கிய உற்பத்தியை யந்திர கதியில் உற்பத்தி செய்து வருகின்றார்கள். இந்த நிலை மாற வேண்டும். மாம்பழ சீசன் இலக்கியங்களாக இல்லாமல் வாழைப்பழ ரகத்தில் இலக்கிய ரசனை பரவ வேண்டும். என்று சுவைபட, நகைச்சுவை ததும்ப, கேட்டிருந்தோர் அனைவரும் வயிறு குலுங்க சிரிக்கச் சிரிக்கப் பேசி முடித்தார்.

சங்கத் தலைவர் ரெட்டியார் விழாவில் கலந்து கொண்ட தலைவர்களுக்கு சங்க அங்கத்தினர்களின் கவிதை நூல்களான புதுப்புனல் வெளியீடுகளையும் இந்த ஆண்டு விழாவை ஒட்டிச் சங்கம் வெளியிட்டிருக்கும் இலக்கியச் சிறப்பு மலரையும் வழங்கினார்.

உள்ளூர் வெளியூர்களிலிருந்து வந்திருந்த இலக்கிய ரசிகர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் சுவை மிக்க அமுது படைக்கப்பட்டது. இத்துடன் முற்பகல் நிகழ்ச்சிகள் முடிவடைந்தன.

மாலை நான்கு மணிக்குப் பிற்பகல் நிகழ்ச்சி ஆரம்பமாயிற்று. சட்ட சபை அங்கத்தினர்கள் ரோட்டரி சங்கத்தினர் தமிழ் சங்கத்தின் உறுப்பினர்கள், புலவர் பெருமக்கள், வக்கீல்கள், டாக்டர்கள், வியாபாரிகள், ஆசிரியர்கள் அனைவரும் விழாவில் கலந்து மகிழ விழா நிகழ்ச்சி விருவிருப்பான முறையில் தொடங்கியது.

திருச்சி தமிழ் எழுத்தாளர் சங்க அங்கத்தினர் ஒவ்வொருவரையும் கூடியிருக்கும் பெருந்திரளான மக்களுக்குச் சங்கத்தின் செயலாளர் திரு. ஏ. எஸ். ராகவன் தக்கவாறு அறிமுகம் செய்து வைத்தார்.

சங்கத்தின் முதல் தீர்மானத்தை முக்கியமான சிறப்புத் தீர்மானத்தை திரு. ஏ. எஸ். ராகவன் பிரரேபித்தார். தீர்மானத்தின் வாசகம் இதுகான்.

வளம் நிறைந்த நீண்ட இலக்கியப் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் தமிழ் எழுத்தாளர்கள். நாங்கள் எங்களுடைய சின்னஞ்சிறு தேவைகள் எதை

யும் தீர்மானம் போட்டுத் தமிழர்களிட மிருந்து பெற்றுக்கொள்ள விரும்பவில்லை. புதுமையான கற்பனைகளையும் சிந்தனைகளையும் எங்கள் இலக்கியத்தினால் தமிழகத்திற்குக் கொடுக்கவே விரும்புகிறோம்.

என்றென்றும் நிலைத்து நிற்கும் பேருண்மைகளையும், மனித உணர்ச்சிகளையும் வெளியிட்டு என்றென்றும் இந்த நாடும் மொழியும் இன்புற்று வாழ வழிவகுப்பதே எங்கள் குறிக்கோள். தமிழகம் தன் ஆழ்ந்த சிந்தனையாலும், ஒழுக்கத்தாலும், பண்பாட்டாலும், சமுதாய உணர்வாலும் உயர்ந்து விளங்க வேண்டும். அந்த நோக்கமுள்ள எங்களது முயற்சிகளுக்குக் குறுக்கே நிற்கும் சிறுமைகள் அகல வேண்டுமென்பதே எங்கள் ஆவல்.

கட்சி உணர்ச்சி, சாதி–சமய–இன உணர்ச்சி கீழ்த்தரமான ஏமாற்று வித்தை, வியாபார மனப்பான்மை இவை ஒன்றுகூடி இன்றைக்குத் தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சிக்கு முட்டுக் கட்டை போட்டு வருகின்றன. புதுமையான இலக்கிய உழைப்பை மக்கள் புரிந்து கொள்ளாதபடி தமிழர்களைத் திசை திருப்பி விடுகின்றார்கள் பலர்.

இது போன்ற குழப்ப நிலையிலிருந்து மக்கள் விடுபட வேண்டுமென்றும் உலகத்தின் பிற பகுதிகளில் எப்படி நடுநிலையில் நின்று சிந்திக்கும் தனிப்பட்ட சிந்தனையாளர்களை மக்கள் புரிந்து கொள்கிறார்களோ அப்படி தமிழ் நாட்டிலும் புரிந்துகொள்ள வேண்டுமென்றும் சங்கம் விரும்புகிறது.

இளைஞர்களும் பெரியோர்களும் தமிழகத்தில் சிந்தனைச் செல்வர்களின் எண்ணிக்கை பெருகவும் இலக்கிய ஆசிரியர்களின் உழைப்பு வளரவும் தக்கதொரு சூழ்நிலையை ஏற்படுத்துவார்களாக. ஒளிபடைத்த புதிய தமிழகத்தை உருவாக்குவதில் எங்கள் பணி குன்றாதிருக்க வேண்டும் என்று நாங்கள் கொள்ளும் உறுதியே இந்த முதல் தீர்மானம்.

சங்கத்தின் இரண்டாவது தீர்மானத்தை சங்கத்தலைவர் திரு. ரெட்டியார்


திருச்சி நகரத்தின்
சிறந்த பாத்திரக்கடை

பித்தளை,
தாமிரம்,
வெண்கலம்,
எவர் சில்வர்

முதலிய எல்லா வகைப்
பாத்திரங்களுக்கும், நம்பிக்கையும்
நாணயமும் உள்ள இடம்

★

திருநெல்வேலி
பாத்திரக்கடை

★

சி. வ. கந்தசாமி பிள்ளை சன்,
பாத்திர வியாபாரம்,
142, பெரியகடைவீதி,
திருச்சிராப்பள்ளி-8.

படித்தார். தீர்மானத்தின் வாசகம் இதுதான்.

நாட்டின் பல பகுதிகளில் தனித் தனியே இயங்கும் தமிழ் எழுத்தாளர் சங்கங்கள் ஒன்றுசேர்ந்து ஒரு சம்மேளனமாக அமையவேண்டுவது அவசியம். எழுத்தாளர்களுக்கு ஒரு பலமான மத்திய ஸ்தாபனம் இருந்தால், எழுத்தாளர்களின் பிரச்னைகளுக்கு சுலபமாக பரிகாரம் காண முடியும் என்று இந்தப் பேரவை நம்புகிறது. எனவே சம்மேளனம் தொடங்க, எல்லா எழுத்தாளர் சங்கங்களும் ஒன்றுபட்டு உடன்பட வேண்டுமென்று இந்தப் பேரவை தமிழ் எழுத்தாளர்களை பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறது.

இந்தத் தீர்மானத்தை ரெட்டியார் சபையின் முன்வைத்து விவரித்துப் பேசியதின் சுருக்கம் இது. எழுத்தாளர்களின் சக்தி முயற்சி இவைகளை சிதற விடாமல் ஒன்று சேர்த்து ஒரு ஸ்தாபனமாக்கிவிட்டால், எழுத்தாளனுக்கு குடும்ப நிதி திரட்ட வேண்டிய அவசியமிராது, எழுத்தாளனை ஆதரிப்பாரில்லை என்ற பழியில்லை. பிறமொழிகள் அடைந்திருக்கும் உன்னத நிலைக்கு தமிழ் மொழியையும் எழுத்தாளர்கள் உயர்த்த உற்சாகமும் ஏற்படும். எனவே இத்தீர்மானத்தையும் ஏகமனதாக நிறை வேற்றிக் கொடுத்து மத்திய சங்கம் அமைக்க வருக வருக என்று எழுத்தாளப் பெருமக்களை இருகரம் கூப்பி பணிவுடன் கேட்டுக் கொள்ளுகிறேன் என்றார் திரு. ரெட்டியார்.

தலைவர் திரு. டாக்டர். மு. வ. அவர்கள், தீர்மானம் போடவேண்டுமே என்பதற்காக பல பல தீர்மானங்கள் போடாமல் நடைமுறைக்குகந்த உடனடியாகத் தேவையுள்ளதான தீர்மானத்தைக் கொண்டுவந்தது இவர்களது செயல் திறமையையும், ஆர்வத்தையும், லட்சியத்தையும், எடுத்துக்காட்டுகிறது. இந்த இரு தீர்மானங்களையும் ஏகமனதாக நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று, கேட்டுக்கொண்டதும் பலத்த கைத்தட்டலுடன் இரு தீர்மானங்களும் நிறைவேறின.

## விவாத அரங்கு.

இலக்கியம் உருவாவது ஏதாவது ஒரு பயன் உண்டாக வேண்டும் என்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டா? அல்லது பொழுது போக்கு வதற்காகவா? இந்த விவாதத்தை சிவாஜி ஆசிரியர் திரு. திருலோகசீதாராம் அவர்கள் தொடங்கிவைத்து இலக்கியம் வெறும் பொழுதுபோக்குக்காகவே உருவாக்கப்படுபவை என்று வாதித்தார் இதனை எதிர்த்து இலக்கியம் பயனுக்காகவே உருவாகியது என்று பேராசிரியர் சி. எஸ். கமலபதி விவாதித்தார். இந்த விவாதத்தில் திருவாளர்கள், அகிலன், சுகி, மாறன், துறைவன், மாயா, பசுபதி, பூமிநாதன், நா. பார்த்தசாரதி, ரா. ஆறுமுகம், ரா. நிலமேகம், ரெட்டியார், திருமதி. செல்லம்மாள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விவாதத்தின் முடிவில் திருலோக சீதாராம் அவர்கள் தான் வாதத்திற்தாக இதுவரை வாதித்ததாகவும், பேராசிரியர் தலைமையில் வாதிட்டவர்கள் தகுந்த காரணங்கள் எடுத்துச் சொல்லத் தவறிவிட்டார்கள் என்று கூறி இலக்கியம் பொழுது போக்குடன் பயன் தருவதற்குமே உருவாக்கப்படுகிறது என்றார்.

பேராசிரியர் கமலபதி தனது வாதத்தை முடித்துப் பேசுகையில், இதுவரை வாதத்திற்காக திருலோக சீதாராம் கருத்தைத் தானும் தன்னைச்சார்ந்தவர்களும் எதிர்த்தாலும் உண்மையில் பொழுது போக்க இலக்கியத்தால் முடிந்தால் அதுவே ஒரு பயன் என்பது முடிவாகிறது என்றார்.

விவாதத்தின் முடிவைச் கட்சித் தலைவர்கள் சார்பு மாறி முடிவு கூறி தீர்வு காணத் தலைவரை திகைக்க வைக்காமல் சுமுகமான வகையில் புதிய முறையில் விவாதத்தை முடித்தது போற்றத் தக்கது என்று கூறி தனது முடிவுரையில் விஸ்தாரமாகப் பேசினார் விழாத் தலைவர் டாக்டர் மு. வ.


ரெட்டியார் நன்றி நவின்றார். திரு. சுப்ரமண்யத்தின் வாழிய செந்தமிழ் பாடலுடன் மாநாடு வெற்றிகரமாக முடிந்தது. ★

திருச்சித் தமிழ் எழுத்தாளர் சங்க
மூன்றாவது மாநாட்டின் தலைவர்
**திரு. டாக்டர் மு. வரதராசனார் அவர்களையும்**

திருவிளக்கேற்றிய
'ஆனந்த விகடன்' ஆசிரியர்
**திரு. எஸ். எஸ். வாசன் அவர்களையும்**

மலர்மாலை சூட்டி வரவேற்கிறார்

**தாயுமானார் திரு. என். ராமசாமி அய்யர்**
[சாவித்ரி வித்யாசாலை—சீதாலக்ஷ்மி ராமஸ்வாமி கல்லூரி அதிபர்]






சென்ற மாநாட்டின் நிகழ்ச்சிகள்

தலைவர்

**டாக்டர் திரு. மு. வரதராசனர் அவர்கள்**

சொற்பொழிவு நிகழ்த்துகிருர்.

மேற்கண்ட, மாநாட்டின் பல காட்சிகளை
ஒன்ருக இணைத்துத் தந்தவர்
புகைப்பட நிபுணர், திரு. பெரியசாமி
டீலக்ஸ் போட்டோ ஸ்டுடியோ, கரூர்.

# இலக்கியக் கண்ணோட்டம்

கவிதை, கட்டுரை, சிறுகதை, நாவல் என்னும் பற்பல வடிவங்கொண்டு வாழ்வின் அழகையும் அருளையும் விளக்கிக் காட்டுகின்ற இலக்கியம் என்னும் விரிந்த உணர்வுக் கலையை ரசிக்கும் கண்ணோட்டம் எப்படிப் பட்டதாக இருக்கவேண்டும்?

ரசமான கேள்வி தான்.

இதே கேள்வியை மற்றொரு விதமாகவும் கேட்கலாம். விமர்சனம் என்பது எப்படி அமைய வேண்டும்?

அடிப்படையில் இலக்கியப் படைப்பு நாட்டின் கலாசாரத்திற்கும், பெருமைக்கும், மொழியின் சிறப்புக்கும் வகை செய்வதாக அமைதல் வேண்டும். மொழியை மாசு படுத்தும் படைப்பு நாட்டுக்குத் தீமை விளைப்பதாகும். பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் வருதல் வேண்டுமேயன்றி புன்மைக் கருத்துக்கள் புகுதல் நச்சுக்கலவையாகவே முடியும்.

இந்த அடிப்படையில் வளரும் கலைஞன் உணர்ச்சிகளை வடிக்கும்போது நாட்டையும், மொழியையும் நினைக்கின்றான். அவனுடைய கண்ணோட்டம் தூய்மை பெற்றதாகிறது. பின்னர் தன் எழுத்தைத் தானே விமர்சித்து அதில் உள்ள பிழைகளை நீக்கும் மன நிலையை அவன் பெறுகிறான். அப்போது படைப்பின் தரமே உயர வழி ஏற்படுகிறது. கணந்தொறும் புதுச் சிந்தனைகளிலும் காட்சிகளிலும் தேங்கியிருக்கின்ற உள்ளம் நல்லதையே சொல்ல முற்படுகிறது. அவற்றை நன்றாகச் சொல்ல முற்படுகிறது.

தமிழில் குடும்பச் சூழ் நிலையைச் சித்தரிக்கும் சிறு கதைகளே அளவில் மிகுதியாக இருப்பினும், புதிய கருத்துக்களும் நடையழகும் பின்னிக் கலந்த வண்ணக் கதைகள் பல வெளி வருகின்றன என்பதை மறுக்க இயலாது. இப்படைப்புக்களில் திண்மையானவளர்ச்சியும் ஆழ்ந்த கலை உணர்வும் ஒளி வீசுகின்றன. பத்திரிகைகளின் தேவையையும் அளவையும் கணக்கிடும்போது இந்த விகிதம் குறைவென்று சொல்லக் கூடியதாக இல்லை.

எனினும் நாடகங்களைப் பொறுத்த வரை நாம் இன்னும் வளரவேண்டிய நிலையில் தான் இருக்கிறோம் என்பதை மறுக்க முடியாது. நகைச்சுவை நாடகங்கள் அவ்வப்போது வார இதழ்களிலும், திங்கள் இதழ்களிலும் வெளியானபோதிலும் இலக்கியச் செறிவு நிறைந்த நாடகங்கள் அதிகம் மலரவில்லை. அவற்றை உருவாக்குவதில் எழுத்தாளர்கள் ஈடுபடுதல் வேண்டும்.

பிரசுரமாகும் நூல்களின் அளவு மிகுதியாக இருக்கிறது. எனினும் அவற்றில் பெரும் பகுதி துப்பறியும் கதைகளும் கொலை, கொள்ளை இவற்றை ஆராயும் மர்மக் கதைகளுமாகவே உள்ளன. வாழ்க்கைக்கு ஒவ்வாத நூல்களால் பயன் ஏதுமில்லை. கற்பனையின் பயன் வாழ்வை வளப்படுத்துவதாக அமைய வேண்டுமேயன்றி அதை மாசு படுத்துவதாக அமையக்கூடாது. துப்பறியும் கதைகளாக பிற மொழி இலக்கியங்கள் உருமாறித் தமிழில் வர முற்பட்டிருக்கின்றன. மக்களின் ஆதரவு இவற்றுக்கு இருப்பதாகக் கூறுவது மிகையே ஆகும். மக்களை நல் வழிப் படுத்தத்தான் கலைப்படைப்பு முயல வேண்டும்.

மொழியின் சீரிய அமைப்பிற்கும் மக்களிடையே எழுந்துள்ள விழிப்புணர்ச்சிக்கும் சென்ற அரை நூற்றாண்டாக எழுத்தாளர்கள் பெரும் பணி புரிந்திருக்கிறார்கள். அவர்களுடைய கலை உணர்வு நிறைந்த பார்வையில் வாழ்வின் மலர்ச்சிக்குப் புதுப் பாதைகள் வகுக்கப்படும். நாட்டின் வரலாற்றையே பொற்காலமாக மாற்றும் காலச்சிற்பிகள் அவர்கள். அவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் தருகின்ற வழி வகைகளை அரசினர் செய்து தரவேண்டும்.

26—10—58 அன்று நடந்த கூட்டத்தில் பேராசிரியர் கமலபதி அவர்கள் தலைமையில் அங்கத்தினர் தெரிவித்த கருத்துக்களின் சாரம்

# இலக்கிய விவாதம்

விவாதம் என்பது எப்படி அமைய வேண்டும்? அதில் சிறப்பாகப் பங்கு பெறுவது எப்படி?

பழைய கதை ஒன்றை இங்கே நினைவு படுத்திக்கொள்வோம். முன்னொரு காலத்தில் தேவர்களும் அசுரர்களும் கடலைக் கடைந்தார்களாம். முதலில்விஷம்வெளிப்பட்டது. பின்னர் அமிர்தம் கிடைத்தது. அதேபோல் இலக்கிய விவாதத்தினுல் காரசாரமான கருத்துப் பரிமாற்றங்களுக்குப் பின் கருத்தின் அமிருதத் தெளிவு கிடைப்பதென்பது உறுதி. நினைவிருக்கட்டும். பழைய கதையில் கடலைக் கடைய மேருமலை தேவைப்பட்டது. அதேபோல் இலக்கிய விவாதத்துக்கும் திண்மையும் உறுதியும் வாய்ந்த பேச்சுத் திறன் வேண்டும்.

விவாதத்தில் இரு சார்பாக நின்று ஒரு பொருளின் நன்மை, தீமைகள் பேசப் படுகின்றன. கருத்தைச் சார்ந்தும் மறுத்தும் பேச்சு தொடர்கிறது. கருத்து உயர்ந்ததாக இருப்பதால் மட்டுமே விவாதம் வெற்றிபெற்றுவிடாது. அந்தக் கருத்துக்களை வலியுறுத்திச் சொல்லத் தெரிய வேண்டும். எதிர்க் கட்சியினரின் கருத்தினைத் தாக்கிப் பேசும்போது வெறும் தாக்குதல் மட்டுமே இருத்தல் விவாதத்தின் போக்கையே திருப்பி விடக்கூடும். இப்படித் தாக்கும்போது கருத்து மறந்துபோய், தாக்கிப் பேசிய நண்பரின் மீது தாக்குதல் குவியத் துவங்கும். எனவே தாக்குதலை நகைச்சுவையோடு கலந்து வீசினுல் அது எதிராளிகளைப் பிணைக்கும், அதே சமயம் தாக்கி வீழ்த்தும்.

இன்னொன்று, விவாதத்திற்குக் குரலை உயர்த்தியும், தாழ்த்தியும், இடித்தும் நடித்தும் பேச்சை வளைத்து செல்ல வேண்டியது அவசியமாகும். மேற்கோள் காட்டுதலிலும் கவனம் தேவை. உதவிக் கழைத்த மேற்கோள் ஆசிரியர் உங்களுக்குத் தெரியாமல் பிரிதோரிடத்தில் மாறுபட்ட கருத்தைக் கூறியிருப்பார். அதைப் பற்றிக்கொண்டு வாதுக்கு வந்து விடுவர் எதிர்ச்சார்பினர். எனவே மேற்கோள் காட்டுகிற ஆசிரியரது முரண்பட்ட கருத்துக்களையும் அறிந்து வைத்திருக்கவேண்டும். அவற்றையும் கூறி அலசி கட்சியை உறுதி செய்துகொண்டு விடவேண்டும். எதிராளிக்கு இடம் அளித்துவிடக்கூடாது.

எல்லாவற்றையும் விட எடுத்துக் கொண்ட பொருளைப் பற்றிய திண்மையான கருத்தும், பேசுகிற பேச்சிலும் சொல்கிற வாதத்திலும் நம்பிக்கையும், உணர்ச்சிமிக்க ஆவேசமும் வேண்டும். சுருக்கமாகவும் கவர்ச்சிகரமாகவும் சொல்லுதல் அவசியம். கூறியது கூறலும், கூறுது விடுத்தலும், இலக்கியத்தில் ஆழ்ந்த பயிற்சியின்றி மேம்போக்கான விமர்சனமும் தோல்வியையே விதைக்கும்.

இவ்வளவும் விவாதத்துக்குத் தேவைதான். பிடிவாதமாக அழுத்தமாக வாதாடிப் பேசும் கலை விவாதம் என்கிற அழகான ஆராய்ச்சிஅரங்காகமலரும்.இங்கே கருத்தை ஆராய்கின்ற இரண்டு ஆழ்ந்த சிந்தனை ஆறுகள் ஒன்று கலக்கின்றன. கலக்குமிடத்தில் அவற்றுள் சுழிப்பும், வலிப்பும் இருந்தாலும், பிறகு அவை இரண்டும் கலந்து ஒன்ருகி நீள்கின்றன.

எந்தப் பொருளிற்கும் சில சார்புகள் உண்டு. உலகமே துவந்த மயமானது. நன்மையை வலியுறுத்தும் கட்சியைவிட தீமையைக் கூறும் கட்சிக்கு விவாதத்தில் ஆழ்ந்த பயிற்சியும் ஞானத் தெளிவும் தேவை. அந்தச் கட்சியே நன்மையை மேலும் வலியுறுத்தி தீமையைக் களையும் கட்சியாகவும் அமைகிறது.

எழுத்தைப் போலவே இலக்கிய விவாதத்திலும் கருத்தைவிட, அதை விளக்கும் வழியே முக்கியமாகும். எதைச் சொல்வது என்பதைவிட எப்படிச் சொல்வது என்பதே பெரிது. 'சொல்லுக சொல்லிற் பயனுடைய' என்ற குறள் விவாதத்திற்குப் பொருந்தும். ★

# புலன் விசாரணை

காற்று மரங்களிடைக் காட்டும் இசைகளிலும்
ஆற்று நீரோசை அருவி யொலியினிலும்

உயிர்த்தத்துவத்தையும், வாழ்வின் ரகசியங்களையும் காண்கிறான் கவிஞன். மரங்களின் இளந்துளிர்கள் காற்றில் சலசலத்துக்கவிதைகளாக அவன்காதில் ஒலிக்கின்றன. ஓடுகின்ற அருவிகள் ஞானபோதனை தரும் புத்தகங்களாக அவனுக்குக் காட்சி தருகின்றன. இயற்கையின் மடியில் படுத்தபடி படைப்பின் வியப்பினை எல்லாம் கண்டு மகிழ்கிறது கவிஞனின் உள்ளம்.

அந்தக் கவிஞனது உள்ளமே ஒரு புலன் விசாரணைக் கலைஞனுக்கும் தேவைப்படுகிறது. கற்பனை, மனத் திட்பம், உள்ளுணர்வு இவற்றைக் கொண்டே ஆதி காரணத்தை இந்தக் கலைஞன் கண்டு பிடிக்கிறான். எனவே அவனும் ஒரு கவிஞனே ஆகிறான்.

ஒரு கொலை நடந்து விட்டது. செல்வம் கொள்ளை போய்விட்டது. வீட்டிலிருந்த குழந்தையைக் காணோம். இத்தகைய நிகழ்ச்சிகளின் காரணத்தைக் கண்டு பிடிக்க புலன் விசாரணை செய்பவர் தமது கற்பனையை ஓட விடுகிறார். சுற்றுப் புறங்களை நன்கு கவனிக்கிறார். எஞ்சி இருக்கின்ற சின்னங்களைத் துழாவுகிறார், பிறகு பசி, தூக்கம் எல்லாம் மறந்து போகிறது அவருக்கு.

மனிதன் ஏன் இந்தக் கொலை, கொள்ளை இவற்றில் ஈடுபடுகிறான்? பிறர் செல்வத்தைக் கரந்து வாழ வேண்டுமென்கிற கயமையான இச்சையே ஆதி முதல் இதற்கு முதற்காரணமாக இருந்திருக்கிறது. பொறாமையும், வஞ்சம் தீர்க்கும் வெறியும் சில சமயங்களில் காரணங்களாக இருக்கின்றன.

எப்படியாயினும் எஞ்சிய சின்னங்களே புலன் விசாரணைக்கு உதவுகின்றன. உடலுருப்பில் மிக அற்பமானவையாகக் கருதப்படும் கேசம், நகம் போன்றவைகள் குற்றவாளியைக் காட்டிக் கொடுத்து விடும். கைரேகைகளைக் கொண்டோ, தவறிவிடப்பட்ட ஒரு கைக்குட்டை அல்லது மேலாடையைக் கொண்டோ புலன் நீள ஆரம்பிக்கும்.

துப்பறிபவர் தமது நுண்ணிய அறிவுத் திறனால் மனிதர்களை இனம் கண்டுகொள்ள வேண்டியிருக்கிறது. படபடப்பாகப் பேசுபவர்களெல்லாம் குற்றம் புரிந்த நெஞ்சினர் என்று அவர் கண்டு கொள்ளுதலும் முடியாது. நிதானமாக, அளந்து, அழகாகப் பேசுபவர் எல்லாம் நல்லவர்கள் என்றும் அவர் முடிவு கட்டக்கூடாது. சில சமயங்களில் குற்றவாளி யார் என்று தெரிந்தும் தகுந்த சாட்சியம் இன்றி அவரால் எதும் செய்ய முடியாமற் போகும். எனவே அவர் அமைதியாக, நிதானமாகச் சிக்கலை அவிழ்க்க முயல்கிறார். அவிழ அவிழக் குற்றவாளிகளைத் தாமே சிக்கலில் விழச் செய்கிறார்.

இந்தக் கலைஞர்கள் நாட்டுக்கு நல்ல தொண்டாற்றும் கவிஞர்கள்.

பொது மக்களுக்கும் சில கடமைகள் உண்டு. கொலையோ கொள்ளையோ நடந்து விட்டால் அவர்கள் உடனே அந்த விவரங்களை போலீசுக்கு அறிவிக்க வேண்டும். குறிப்பிட்ட நிகழ்ச்சி நடந்த இடத்தைப் போலீசாரின் பரிசோதனைக்கு ஏற்றவாறு கலைக்காமல் விட வேண்டும்.

திருச்சி மாவட்ட உதவி போலீஸ் அதிகாரி திரு என் எஸ். முத்துசாமி பிள்ளை அவர்கள் 30—11—58 அன்று நடந்த கூட்டத்தில் பேசிய சுவைமிக்க சொற்பொழிவின் சாரம். இக்கூட்டத்திற்கு திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் தலைமை வகித்தார்.

# சிந்தனைப் பாதையிலே......

திருமதி. செல்லம்

சிந்தனை! சிந்தனை !! என்ன சிந்தனை? எதற்குச் சிந்தனை ?? ஏன் சிந்தனை செய்ய வேண்டும் என்று நமது மனம் நம்முடன் போராடலாம். நமக்கு நினைவு தெரிய ஆரம்பித்த நாள் முதல் எதற்காவது சிந்தனை செய்துதான் வருகிறோம் என்பதே சிந்திக்கவேண்டிய விஷயம்.

குழந்தைக்கு அப்போது தான் நீந்தத் தெரிகிறது. ஆற்றில் குளத்திலல்ல. தான் தன் முயற்சியால் நகர்ந்து துள்ளித்துள்ளி நீந்தக் கற்றுக்கொள்கிறது. உடனே அதன் சிந்தனை தூர இருக்கும் சாமான்களை எப்படி எடுக்கலாம், கொட்டி இறைக்கலாம் என்பதில் போகிறது.

அக் குழந்தைக்கு தளர் நடைபோடத் தெரிந்து விட்டது. உடனே அதன் சிந்தனை உயரப் பறக்கிறது. மேலே இருக்கும் சாமான்களை எப்படி எட்டிப் பிடிக்கலாம், எடுக்கலாம் என்பதில் போகிறது.

அதற்குப் பேசி விளையாடும் பருவம் வந்து விட்டது. அப்போது குழந்தையின் உள்ளம் தெளிவுபட்டு வருகிறது. தனது சகபாடிகளுடன் எப்படி விளையாடலாம், துஷ்டக் குழந்தையானால் யாரை அடிக்கலாம். சீண்டலாம், எதன் மேல் ஏறலாம் எப்படி எப்படி விஷமம் பண்ணலாம் என்ற சிந்தனையில் செல்கிறது. அத்தகைய நிலை வரும்போதுதான் பெரியோர்களாகிய நாம் நமது சிந்தனையை முழு மூச்சுடன் அந்தக் குழந்தைகளை திருத்தி வளர்க்கும் பாதையில் செலுத்த வேண்டும்.

ஒவ்வொரு காரியத்திற்கும் முக்கியப்பட்டோர் ஒருவர் வேண்டியிருக்கிறது. கப்பலுக்குக் கப்பித்தானும் எஞ்ஜினுக்கு அதைச் செலுத்த விசையாளரும் வண்டி ஓட்ட சாரதியுமாக எப்படி அவசியமாக இருக்கிறதோ அதேபோல் வாழ்க்கைப் பாதையை நாம் செவ்வனே நடத்த ஒரு சிந்தனையாளர் அவசியம் வேண்டும்.

நம் குழந்தைகளை நல்ல முறையில் புத்திசாலியாக வளர்க்க நமது சிந்தனை சுறுசுறுப்புடன் பாடுபட வேண்டும் நமது குடும்பம் நடத்தும்போது அனேகமாக ஆண்களின் பங்கு சம்பாதித்துப் போடுவதுடன் நின்றுவிடுகிறது. ஒரு தாயின் பங்கு முழுக்க முழுக்க சிந்தித்துப் பாடு பட்டால் தான் குழந்தைகளை நல்ல முறையில் வளர்க்க முடியும்.

சிறிய வயதிலேயே பெரியோர் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் உன்னிப்பாய் கவனித்து அதேபோல தாங்களும் செய்ய வேண்டும் என்கிற ஆசை குழந்தைகளுக்குத் தோன்ற ஆரம்பித்து விடுகின்றது. அதைத்தான் "வேடன் கைக்கிளியோ! ஆச்சிரமத்துக் கிளியோ' வென்று நம் பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். வேடன் கைக்கிளி "குத்து, கொல்லு" என்று சொல்லுமாம் ஆச்சிரமத்து கிளி "வாருங்கள் ! வாருங்கள் !!" என்று அழைக்குமாம். பெரியாழ்வாரிடம் சிறு பெண்ணுகை இருக்கும் போதே ஸ்ரீ ஆண்டாள் இருந்து அவரின் செயலை கவனித்து வந்ததால் தான் இன்று அவரின் பாசுரங்களுக்கு ஈடு இணையில்லாமல் இருக்கிறது.

நாம் குழந்தைகளுடன் பேசும்போது மிக்க கவனத்துடன் வார்த்தைகளை உபயோகப் படுத்தவேண்டும். "வாடீ! இங்கே" என்று அழைக்கும்போது பொருத்தமாக இருப்பதாகத்த'ன் தோன்றும். அவர்களும் நம்மை வாடீயம்மா! என்று கூப்பிடும்போதோ நம் தலையில் அடிக்கிறமாதிரித் தோன்றும். துணிமணிகள், சாமான்கள் எல்லாவற்றையும் நாம் சுத்தமாகவும் சரியாகவும் வைத்திருந்தோமானால் குழந்தைகள் மனதிலும் "எறும்பூரக் கல்லும் தேயும்" என்றபடி அவைகள் மனதில் நன்கு படிந்துவிடும்

சிந்தனைப்பாதையில் முதல்படி இவையெல்லாம்.

நம்மைப்பற்றி நாம் சிந்திக்க வேண்டியது எத்தனை எத்தனையோ? உலகில் எல்லோரும் ஒரேவிதமான அந்தஸ்தில் சூழ்நிலையில் இருந்து விடுவதில்லை. ஒருவீட்டில் நான்கு பேர்கள் இருந்தால் நான்கு விதமான நிலையில் தான் இருப்பார்கள். எப்போது சற்று தாழ்ந்த நிலையில் உள்ளவர்களின் சிந்தனை பொருமை என்ற பாதையில் செல்லத் தொடங்கியதோ, நமது நிம்மதி சந்தோஷம் எல்லாம் அத்துடன் தொலைந்தது. நமது வாழ்நாளே நரகமாகிவிடும். நாம் ஏமாறுமல் நமது சிந்தனையை நல்ல முறையில் நல்ல பாதையில் செலுத்தினேமானல் நமது வாழ்க்கையைச் சுவர்க்க போகமாக மாற்றி விடலாம்.

இதைப்போல் படித்ததை, பார்த்ததை, செய்ததை, செய்ய வேண்டியதை சிந்தித்து மனதில்நிறுத்தி பழக்கப்படுத்திவிடில் நமது பாதை புல், பூண்டு இல்லாத ராஜபாட்டையில் 'ஜாம் ஜா'மென்று சரளமாக சென்று விடலாம்

நமது செயலில் பிறருக்கு சிறிதும் துன்பம் இருக்கக்கூடாது. வார்த்தைகளால் பிறர் மனம் புண்படக்கூடாது. மனது, வாக்கு காயம் மூன்றாலும் நாம் நமது மனதால் சிந்தித்து செல்லும் பாதையை நல்லபாதையாக்கி நடந்தோமானல் எல்லோருக்கும் நல்லவராய் இன்புற்று வாழ தடையொன்றுமில்லை

**ரா. ஆறுமுகம்**

சிந்தனை செய்யாமலேயே இந்தப் பாதையில் நுழைந்து விட்டேன் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னல். அதனல் பலஇடங்களிலும் சுற்றியலைந்து கொண்டிருந்தேன். நகர மக்கள், கிராமவாசிகள் ஆகியோரின் வாழ்க்கையை சித்தரிக்கும் சில கதைகளை எழுதினேன். அவற்றிலெல்லாம் எனக்குத் திருப்தி ஏற்படவில்லை. அவ்விதம் சென்று கொண்டிருக்கையில் காலம் சென்ற ஸ்ரீ கு. ப. ரா. அவர்கள் என்னை 1935-ல் சென்னையில் சந்தித்து சரியான பாதையில் திருப்பிவிட்டார்

அதன் பின்னர்தான் சிந்திக்கத் தொடங்கினேன். அந்தக்காலத்தில் ஒரு சில எழுத்தாளர்கள்தான் எப்போதோ அபூர்வமாய் கிராமியக்கதைகள் எழுதி வந்தார்கள். நம் நாடு லக்ஷக்கணக்கான கிராமங்களைக் கொண்டது; அவற்றில் வாழும் கோடிக் கணக்கானவர்களின் நிலையை நகர மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்று பலரும் பேசிவந்தார்கள். நானும் கிராமத்தில் பிறந்து வளர்ந்தவனுதலால் அவர்களைப் பற்றி ஏன் எழுதக்கூடாது என்று தோன்ற அன்றுமுதல இன்று வரை கிராமீயக்கதைகளிலேயே என் சிந்தனையை யெல்லாம் செலவிடுகிறேன்.

கிராம மக்களில் அநேகர் பள்ளிப் படிப்பு இல்லாதவர்களே. அதனல் அவர்களுக்கு ஒன்றும் தெரியாதென்று சொல்லிவிட முடியாது. அவர்களில், ஆணும் பெண்ணும் நல்ல உலக அனுபவமும், அறிவும். ஆற்றலும் பெற்றவர்களே. அவர்களுடைய பழக்க வழக்கங்கள் தான் நகரவாசிகளுக்கு விசித்திரமாகத் தோன்றும். அவைகளை எழுத்தில் வடிக்கும்போது அவர்கள் மனம் புண்படாமலிருக்கும் வகையில் எழுத வேண்டும்.

என் கிராமீயக் கதைகளில் அநேகமாக காதல் விஷயம் 'பச்சை'யாக இருப்பதாகக் குறைகூறும் நண்பர்களுமிருக்கிறார்கள், ஆனல் கிராமீய வாழ்க்கையை நன்ருய்த் தெரிந்தவர்கள் அதை ஒரு குறையாகக் கருதமாட்டார்கள். நகரில் நடக்கும் 'கண்டதும் காதல்' கதைகளுக்கும் கிராமத்தின் 'புனிதக் காதல்' கதைகளுக்கும் எவ்வளவோ வித்தியாசமிருக்கின்றன. கிராமத்தில் முன்பின் தெரியாத ஒருவனிடம் ஒருத்தி பேசிவிட முடியாது. அவர்கள் சமூகம் அதற்கு இடம் கொடுக்காது. ஒருவரை யொருவர் நன்ருய்த் தெரிந்த பின்பே பேசிப் பழகுகிறார்கள். மனதிற்கு பிடித்திருந்தால்தான் காதல் அரும்புகிறது. அவர்களுக்குள் ஒரு தீர்மானம் செய்தபின் அதை மாற்ற யாராலும் முடியாமல் போகிறது. அதற்கு இடையூருக வரும் எந்த இன்னல்களையும் அவர்கள் லட்சியம் செய்வதில்லை. மனதிற்குப் பிடித்துவிட்டால் பின்பு மணமும் நடக்கிறது. நகரங்களில் நடக்குமா இப்படி? மேல் நாடுகளில் காணும் காதல் முறையை ஒட்டியே நம் கிராமவாசிகளும் நடந்து கொள்ளுகிறார்கள்.

ஆகவே கிராம மக்களின் வாழ்க்கை பற்றித் தெரியாதவர்களுக்கு நான் எழுதும் கதைகள் அது 'வேறு வழி'யில் செல்வதாகத்தோன்றுகிறது. என் கதை ஒன்றை ஏராளமானவர்கள் குறை கூறினர்கள். ஆனல் அதே கதை பல பாஷைகளில் மொழி

பெயர்க்கப்பட்டு பல பத்திரிகைகளிலும் வெளிவந்தபோது வேறு சிலர் அதைப் பாராட்டினர்கள்.

நான் இப்போது எழுதுவதையெல்லாம் ஆழ்ந்து சிந்தித்தேதான் எழுதுகிறேன். அப்படியிருந்தும் அது சிலருக்கு 'விரச மாக'த் தோன்றினாலும் அது என் குற்ற மல்ல, கிராம மக்களைப் பற்றி அவர்கள் அதிகமாகத் தெரிந்து கொள்ளாததே யாகும்.

## ராதிகா

உலக ஞானம் அற்றவர்களுக்குக் கலை ஞானமளித்து மக்கள் அறிவும் பண்பும் நன்மையும் பெறுமாறு செய்வதே இலக்கிய கர்த்தாக்களின் சாகசமாகும். எதிலும் புற வடிவம் மட்டும் ரசிகரைத் திருப்திப் படுத்தி விடாது. அவருடைய ஆத்மாவில் புகுந்து அகத் தூண்டுதல்களை நிறைவேற்ற மதிப்பும் நோக்கமும் கொண்டு இருக்க வேண்டும். என்றும் எப்போதும் நிரந்தரமாக நிலைத்து நிற்பதே கலை எனப் படும்.

மனிதன் பிறந்த காலம் முதல் சிந்தனைத் திரையிலே உணர்ச்சியும் அறிவும் பிறந்து விட்டன. மனிதன் போக்கை மாற்றுவது உணர்ச்சிகளே; அந்த உணர்ச்சிகளே இலக்கிய வடிவெடுத்து கதை, கட்டுரை, கவிதை, நாடகம், நாவல் எனப் பலவிதமாக பரிணமிக்கின்றன.

இலக்கியமே உயிராகவும் எழுத்தே சுபாவமுமாகக் கொண்டவர்களே உண்மை எழுத்தாளர்கள். காலத்திற்கேற்றபடி கருத்தும் மாற வேண்டும். சமுதாயத்திலே மாற்றும் சக்தி பேனா முனைக்கு நிச்சயம் உண்டு. நாட்டுச் சரித்திரத்தின் ஏடுகளிலே கத்திக்கு இருக்கும் இடத்தை விட எழுத்தாளர் பேனா முனைக்குத் தான் அதிக இடம் உண்டு. இலக்கியமும் சமுதாயமும் உயிரும் உயிர்ப் பாகமுமாய் இருத்தல் வேண்டும். இலக்கியம் வளர்ச்சி பெற்றால் தான் சமுதாயம் சீர்திருந்தி சிறப்புப் பெறும்.

சமூகத்தை நையாண்டி செய்து விடுவது மட்டும் போதாது. காலத்தை வெல்லும் வலுக் கொண்டு நடை முறையில் செயல் ஆற்றவும், அந்தச் செயல் பயன்படவும் இலக்கியம்பயன்படவேண்டும். விஷயம் எதுவாயினும் இருக்கலாம். எடுத்துக்கொண்ட விஷயத்தில் ஈடுபாடும், பக்தியும் வேண்டும் தங்கள் எழுத்தாகிய சுடரினால் சமூகத்தின் உண்மை நிலையை மக்கட்கு உணர்த்திக் காட்டுவதே கடமை. தூங்கும் மக்களின் அறியாமையால் உழலும் மானிட வர்க்கத்தைத் தட்டி எழுப்பி தங்கள் கருத்தின் மூலம் மக்கள் மனதை நல்வழியில் கவர்ந்து வழிகாட்ட வேண்டும்.

சிந்தனைத் திரையில் "இருந்தால்" என்ற வேகத்தில் இனிக்கும் கற்பனை, "அனுபவம்" என்ற தொடரில் துயரச் சிந்தனை, கோபத்திலோ, துயரத்திலோ ஆவேசமும் உணர்ச்சியுமான பல கருத்துக்கள், இப்படியாக உண்மைக்கு கற்பனை மெருகும் உணர்ச்சி மிக்க எழுத்துக்களுமே மனதில் பதியும்படி இருக்கும்.

எண்ணம் எப்போதும் உயர்வாகவே இருக்க வேண்டும். உயர்ந்த எண்ணம் கொண்டு வாழ்பவர்கள் வாழ்வில் தாழ்வு பெற்றாலும் அவர் உயர்ந்த எண்ணத்தால் சிறந்தவர் எனக் கருதப்படுவார்.

சொந்த அனுபவத்தின்மீது எழுத்து விளைவுகளை வைத்து சிந்தனைப் பாலம் அமைத்து அதன் முடிவுகளைக் கொண்டு பாதைகளைக் காட்டும்போது மனித சமுதாயத்திற்கே பொதுவான அனுபவத்துக்குக் கோடி காட்டப்படுகிறது.

எழுத்து ஆணித்தரமாக இருக்க வேண்டும். ஆனால் காட்டாறின் கடும் ஒலி கேட்கக் கூடாது. பளிங்கு நீர் ஓடையின் பண்ணிசை கேட்க வேண்டும். சிம்மத்தின் கர்ஜனை கேட்காமல் குயிலின் குரல் இனிமை கேட்கப்பட வேண்டும்.

கதை, கட்டுரை, நாடகம், நாவல் எதன் மூலமாயினும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை எடுத்துக் காட்டி நன்மைக்கு வழி காட்டுவதே குறிக்கோளாகக் கொள்ள வேண்டுமேயன்றி, எவ்விதக் கருத்தும் இல்லாமல் வெறும் வர்ணனைகளாலோ அலங்கார அடுக்குச் சொற்களாலோ பலன் இராது. கருத்தும் வேண்டும். படித்து, கேட்டு ரஸிக்கக் கூடியபடி அலங்கார மொழிகளும், வர்ணனைகளும் பின்னணி போல் ஒலித்தாலே போதுமானது. கதை கவிதை, நாடகம், நாவல் முதலியன ஓர் கட்டுப்பாட்டுக்குள் கால நிர்ணயத்துக்குள் அடக்கி எழுதப்பட வேண்டும்.

## சி. பி. குமாரவேல்

தமிழ் நாட்டில் அவரவர்கள் சிந்தனைப் பாதையில் எழுந்தவற்றை மற்றொருவருடைய பத்திரிகையில் எழுதி சமுதாயத்திற்கு பயன்படும் இலக்கியம் சிருஷ்டித்ததாக தெரியவில்லை. கம்பர், வள்ளுவர்,

இளங்கோ, காலங்களில் பத்திரிகைகளிருந்திருந்தால் இப்போது பெருமைப்பட பேசிக்கொண்டிருக்கும் ராமாயணமும், குறளும், சிலப்பதிகாரமும் தோன்றியிருக்குமா என்பது சந்தேகம்.

அந்தக் காலத்திய பேறு மன்னர்களை மக்களை ஆண்ட மன்னர்கள் ஆதரித்தார்கள் என்றாலும், அவர்கள் சிந்தனைப்பாதையில் எழுந்த எண்ணங்களை, கண்ட உண்மைகளை நாட்டுநலன் கருதி, பொருளாதார சமுதாய முன்னேற்றம் வேண்டி எழுதி எழுதிக் குவித்தார்கள் அதனால் தான் அவைகள் மன்னர்களால் பாராட்டப் பட்டன; சாகா இலக்கியங்களாக, இன்றும் முடிசூடா மன்னர்களாக அரசாட்சிசெய்து கொண்டிருக்கின்றன.

சிந்தனைப் பாதையில் இலக்கியத்தை சிருஷ்டிக்க நினைத்து எழுதும் எழுத்தாளரின் கதை கண்டிப்பாக பத்திரிகையில் வராது. பத்திரிகையின் போக்கிற்கு, தரத்திற்கு, நம் சிந்தனைப் பாதையைத் திருப்பி ஏதாவது கதையளந்தால், வார்த்தைகளால் விளையாடினால் பெயர் கிடைக்கும். பொருளும் வந்து சேரும். வானம்பாடிகளாக நினைத்துக்கொண்டு அறங்களையும் அறிவுரைகளையும் மக்களுக்கு சொல்ல வேண்டுமென்று நாம் சிந்தனைப்பாதையில் நடந்தால் பொருளாதாரத்தில் தோல்வி நிச்சயம். விளம்பரம் கிடைக்காது.

எழுத்தை கலையாக நினைக்காமல் தொழிலாகக் கொண்டு விட்டவர்கள் சமுதாயத்துக்கும், மொழிக்கும் வழக்காடும் வக்கீல்களாகச் சொல்லிக்கொண்டு எப்படி எழுதினால் சிரிப்பார்கள், எப்படிப் பேசினால் கை தட்டல் கிடைக்கும் என்பதுதான் அவர்கள் சிந்தனைப் பாதையில் நடமாடும் எண்ணங்கள்.

நாம் எழுதும் எழுத்துக்கள் மக்கள் மனதில்பதியுமா? சமுதாயத்திற்குப் பயன் தருமா என்று யாரும் சிந்தித்து எழுதுவதில்லை. சிந்திக்கச் சிந்திக்க மனதிலே குமுறி எழும் எண்ணங்களை, கொந்தளிக்கும் கருத்துக்களை எந்த எழுத்தாளனும் எழுத முடியாத, பேசமுடியாத சிந்தனைப் பாதையில் பத்திரிகை உலகமும், சமுதாயமும் இருக்கும்போது எதை எழுதுவது? எதை சிந்திப்பது?


## வாருங்கள்.

**ஒருமுறை வந்து பாருங்கள்!**

நவ நாகரீகமான பட்டாடைகள், பட்டு & நூல் ஜவுளிகள், உயர்ந்த வேலைப்பாடுகள் அமைந்த கொள்ளேகாலம், காஞ்சீபுரம், பெங்களூர் முதலான பல ஊர்களில் சிறந்த நெசவாளர்களால் தயாரித்த 9 கஜம், 6 கஜம் சேலைகளும், உறையூர், கோடம்பாக்கம் நூல் சேலைகளும் கிடைக்கும்.

பட்டுப் பாவாடைத் துண்டுகள், சோளி பீஸ்கள், மைசூர் கிரேப் மற்றும் பலரக ஷர்ட்டிங், கோட்டிங் துணிகள், பலவித வாயில்கள், லான், சீட்டி தினுசுகள் சாயத்திற்கும் உத்திரவாதமுடனும் சரசமான விலையிலும் கொடுக்கிறோம்.

**நாணயத்திற்கும் நல்ல கைராசிக்கும் பெயர்போனது எங்கள் கடை.**
**விஜயம் செய்து பாருங்கள்.**

# தாத்ரா கி. துளஸிராம்

**பட்டு & பீஸ் கூட்ஸ் வியாபாரம்,**

**தெற்கு வாசல், : : ஸ்ரீரங்கம்.**

பத்திரிகைகள் உலவாத காலத்தில்தான் வள்ளுவரும், இளங்கோவும், கம்பனும், அழியா இலக்கியங்களைச் சிருஷ்டித்தார்கள். இந்தக்காலத்தில் மக்கள் மனதிலே இடம் பெற்றுள்ள மு. வ., கல்கி, அண்ணாதுரை, கி. வா. ஜ., பாரதிதாசன் போன்றவர்கள். அவரவர்கள் சிந்தனைப்பாதையில் பார்த்தவைகளை, கேட்டவைகளை, எழுந்த கருத்துக்களை எழுதிக் குவிக்க சொந்தமாக பத்திரிகைகளை ஏற்படுத்திக்கொண்டு எழுதினார்கள்; எழுதி வருகிறார்கள். பத்திரிகைக்காரர்களுக்கு தகுந்தபடி எழுதி எழுதி அசைக்க முடியாத நிரந்தர ஸ்தானத்தை அடைந்த பிறகு. அகிலனைப் போன்றவர்கள், அவர்கள் சிந்தனைப் பாதையில் நடப்பதால் மக்கள மனதிலே இடம் பெற்றிருக்கிறார்கள்.

பயனுள்ள இலக்கியத்தைச் சிருஷ்டிக்க நினைக்கும் எழுத்தாளர்கள் சமுதாயத்தை மறந்து, உணவும் உடையும் இல்லாமல், துடித்துத்துடித்துச் சாகும் மக்களைப்பற்றிச் சிந்திக்காமல். எப்படிப்பட்ட பத்திரிகைக்கு கதை எழுதவேண்டும், அதன் தரம் எப்படி, கொள்கை என்ன என்று சிந்தித்து அதன் பாதையில் நடந்து, எழுதி எழுதி முதலில் இடத்தையும் பணத்தையும் சம்பாதித்துக் கொள்ளவேண்டும் பிறகு பொழுது போக்கு இலக்கியங்களை சிருஷ்டிக்காமல் நம் சிந்தனைப்பாதையில் எழும் எண்ணங்களை ஏறுநடை போடச் செய்யலாம்

## எம். எஸ். ரமணி

நான் நடிப்பை முக்கியத் தொழிலாய்க் கொண்டவன். என அனுபவத்தில் நான் காணும் குறைபாடுகளை எடுத்துச் சொல்வது, நாடகாசிரியர்களுக்குப் பயனபடக் கூடியதாய் இருக்குமென்ற நம்பிக்கை. அவ்வளவு தான்

நடிப்புக்கு உறுதுணையாயமைவது நாடக வசனந்தான் வசனம் பொறி வாணம போன்றது. நடிகன் தீப்பொறியாகப் பணியாற்றுகிறான். பொறி வாணத்தில் கரு மருந்துகள் சரியான அளவில வைக்கப் பட்டு போதிய அழுத்தத்துடன் பொதியப்பட்டிருந்தால் தான், அதைத் தீப்பொறி தாக்கும் போது, நாம் அதன வாணஜால அழகைக் காண முடிகிறது. பொறி வாணத்தில் எங்காவது சிறு பிசகு இருந்து விட்டால் தீப்பொறி அதை எத்தனை முறை தான தாக்கினாலும பயனபடுவதில்லை. மிஞ்சிப் போனால் தாக்குதலின் வேகம் தாங்காமல் பொறி வாணம புஸ் வாணமாகி விடும.

நாடகங்களை படிக்கும் போதும் உள்ளதைவிட, ஒலி பரப்பில் இக்குறை, பூத உருவமே பெற்று விடுகிறது. அந்தந்தப் பாத்திரத்திற்கென்று ஆரம்பத்தில் அமைத்துக் கொண்ட பாணி, கடைசி வரையில் சரிவரத் தொடர்ந்து வராமல், நடுநடுவே ஒன்றுக் கொன்று ஒவ்வாமல், குழப்பம் ஏற்பட்டு விடுகிறது. இது காரணமாக நாடக ஓட்டம் தடைப்பட்டு, கட்டுக் கோப்பு பிடிப்பு, இழந்து தொய்வுகளுக் குள்ளாகித் தாழ்வுக் காற்றழுத்த மண்டலத்துட் புகுந்து விட்ட ஆகாய விமானம் போல, டபாரென்று உயரம் இழந்து விடுகிறது.

நடிகர்கள், அவரவர் கற்பனைத் திறனுக்கேற்றவாறு பாத்திரங்களைச் சித்தரித்துக் காட்டி, நாடகாசிரியரின், உள்ளத்தில் இருந்த உணர்ச்சி வேகங்களை, எட்டிப் பிடிப்பது தான் நடிப்புக் கலை. ஒரே பாத்திரத்தை ஒவ்வொரு நடிகரிடம், ஒவ்வொரு விதமாகக் காண்கிறோம்.

வசனத்தில் காணும் உணர்ச்சிகளை நடிகன உணர்ந்து நடிப்பது எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியம் நடிகனின் நல்லுணர்ச்சிகளைப் புரிந்து. கொண்டு நடிக்கும் வண்ணம் வசனம் அமைப்பது ஆகும்.

## பி. கே. மூர்த்தி

உலகம் தோன்றிய நாள் முதல் இன்று வரை. எத்தனையோ மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. மாற்றங்கள் என்றால் ஒரு துறையில் மட்டும் அல்ல; மனிதனின் ஒவ்வொரு துறையிலும், அவனே அதிசயிக்கத் தக்க வகையில் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. எல்லாவற்றையும் விட அவனின் அறிவுத்துறை தான மிக முக்கியமான ஒன்றாகும். அந்த அறிவுத் துறையை 'சிந்தனைப் பாதையில்' செலுத்திய காரணத்தினால் தான, இன்று மனிதன் விண்ணையே அழிக்கக்கூடிய விஞ்ஞானப் பாதையில் சென்று கொண்டிருக்கிறான்.

கிரேக்கம் தந்த சிந்தனைச் சிற்பி சாக்ரட்டீஸ் 'சிந்தியுங்கள், சிந்தியுங்கள்' என்று அவர் சிந்தனைக்கு முதல் இடம் கொடுத்தார். அந்த சாக்ரட்டீஸின் சிந்தனையிலே உதித்தவர் தான் அரசியல் மேதை பிளேட்டோ.

ஸர் ஐஸக் நியூட்டனின் சிந்தனை, பூமிக்குப் பொருள்களை தனனை நோக்கி இழுக்

கும் 'ஒரு சக்தி' இருக்கிறது என்பதைக் கண்டு பிடித்தது. அதே போல் மைக்கேல் பாரடே, டால்டன், மார்க்கோனி, ரைட் சகோதரர்கள், மாடம் க்யூரி, ஐன்ஸ்டீன், எடிஸன், ஜெகதீஷ்சந்திர போஸ், சர். சி. வி. ராமன், டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன் போன்றவர்கள் எல்லாம், ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் அறிவுத் திறனைக் கொண்டு, சிந்தனைப் பாதையில் ஆராய்ச்சி செய்து, மனித வர்க்கத்திற்குத் தேவையான பல பொருள்களைக் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

அணுவையும் பிளந்து விடலாம் என்பதை இன்று நம் விஞ்ஞானிகள் கண்டு விட்டனர். இப்போது சந்திர மண்டலத்தை நோக்கி அவர்கள் பறந்து கொண்டிருக்கிறார்கள். இந்தச் சிந்தனைச் சிற்பிகளுக்கு உலகு என்றென்றும் கடமைப் பட்டிருக்கிறது.

## பழுவூர் சங்கர்

''பாட்டினைப் போல் ஆச்சரியம்
பாரின் மிசை இல்லையடா''

என்றார் பாரதி. குளவி இசைவிடாது கொட்டிக் கொட்டி புழுவையும் தன்னின மாக்குவது போல் இந்த ஆச்சரியம் என் உள்ளத்தில் புகுந்து, தங்கி மூலைமுடுக்குகளிலெல்லாம் பரவி இறுதியில் உள்ளத்தையே கவியுள்ள மாக்கிவிட்டது.

பள்ளிப்பருவத்தில் ஒரு நாள் எத்தனையோ இன்னல்களுக்கிடையில் சிந்தனைப் பாதையில் சென்று கொண்டிருந்த நான் சிறு கவியொன்றைக் கண்டெடுத்தேன். பல்லாயிரக்கணக்கான ரூபாய்கள் மதிப்புள்ள மாணிக்கமாக இல்லாவிடினும் சில ரூபாய்கள் மதிப்புள்ள முத்தாகவாவது இருந்தது கண்டு மகிழ்ந்தேன். அன்று தொடங்கிய நான் இன்றும் எழுதிக்கொண்டுதான் இருக்கிறேன். என் மனத்திலெழுந்ததை எழுதுகிறேன், மனம் திருப்தியாகின்றவரை எழுதுகிறேன். எழுதி முடிந்த ஒன்றை பல்வேறு கோணங்களினின்று சீர்தூக்கிப்பார்த்து திருப்திகரமான நிலையில் நிறுத்திய பிறகே என் எழுத்தை மதிக்கக்கூடிய பத்திரிக்கைகளுக்கு அனுப்புகிறேன். ஒரு கவிஞர் தான் எழுதிய கவியை பிறர் ரசிக்கவோ அநுபவிக்கவோ தான் பிறருக்கு அளிக்கிறார். அதனைப் பிறர் ஆராய்ச்சிக்கோ பரிசீலனைக்கோ அனுப்பமாட்டார். நானும் இவ்விதிக்கு மாறுபட்டவனல்ல.

சிறுவர்களுக்கு விருப்பமான பாட்டின் மூலமாகவே எளியமுறையில் நீதிகளையும், பண்டைச் சரித்திரங்களையும், கதைகளையும் கூறி அவர்களது அறிவை வளர்க்க விருப்பம் அதிகம், இத்துறையில் என்னாலியன்ற அளவு ஈடுபட்டும் வருகிறேன்.

## சு. இராமசாமி

நாட்டு மக்களுக்கு நம்மால் ஆன எழுத்துப் பணி என்கின்ற முறையில் இலக்கியப்பணி ஆற்றவேண்டும் என்பதே எனது தலையாய கடமைகளுள் ஒன்றாகக் கருதுகிறேன். கதைகளும் கட்டுரைகளும் படிப்போர்க்கு இலக்கியச்சுவைகளை ஊட்டி இன்புறுத்தும் வண்ணமும், நீண்ட நடைச் செலவில் சலிக்கும் இக்காலத்தவருக்கு சுருங்கிய நடைச் செலவில் பயன் பெறவும். பொழுது போக்கு மட்டுமில்லாமல் உள்ளத்தைத் தொடும் உன்னத கருத்துக்களைக் கொண்டதாகவும் அமைக்கவேண்டும் என்பது எனது எண்ணம்.

பழம் பெருமையைப் பேசி நேரத்தைப் பாழாக்கியும் மூடப் பழக்கங்களில் திளைத்தும், அறியாமை இருளில் சிக்கியும் அல்லலுறுகின்ற மக்களுக்கு இலக்கிய மாகிய ஒளி விளக்கினை ஏற்றி அறியாமையாகிய இருளினை அகற்றவேண்டும் என்பதே என் கருத்து.

இலக்கியத்தின் வாயிலாக வாழ்க்கை முறையினை மக்களுக்கு எடுத்தியம்பி, நல்லொழுக்கத்தைப் புகட்டி, இயற்கை எழில் நலத்தை எடுத்துக்காட்டி, அதைப் படைத்த இறைவனின் தன்மையினை நினைவூட்டி, நல்வழிப் படுத்தும் இலக்கியங்கள் பல எழுதப்படல்வேண்டும். மேனாட்டு ஆராய்ச்சி நூல்போன்று (Literary criticism) நூல்கள் மிக நம். இலக்கியத்தைப் பற்றிய ஆராய்ச்சி நூல்கள் வெளி வருதல் வேண்டும் அவைபாமர மக்களுக்கு எளிதில் புரிந்து கொள்ளும் விதத்தில் எழுதப்படவேண்டும். மேனாட்டார் பலர் தமிழிலுள்ள இலக்கியச் சுவையினை இன்றும் அறியாதிருக்கின்றனர். அவர்கள் அறிந்து இன்புறும்வண்ணம் தமிழ் இலக்கியத்தின் சிறப்பினைப் பற்றி ஆங்கிலத்திலும் நூல்கள் எழுதி வெளியிடுதல் வேண்டும்.

## 'பாரதன்'

மலரும் உள்ளம் குழந்தை உள்ளம். அதுமல்லிகை மலர்போன்றது அங்கு தூய்மையே முழுக்க முழுக்க ஆட்சி நடத்தும். மனத்தைமயக்கும் மணமும் அந்த உள்ளங்களிலே உண்டு. வளர்ந்தவர்கள் உள்ளம் ரோசா மலர் போன்றது. அங்கு

முள்ளும் உண்டு — கவர்ச்சியும் உண்டு. இலக்கியங்களின் தன்மையும் அதுதான்.

எட்டு வயதில் நான் படித்த முதல் பத்திரிகை புதுக்கோட்டை பாலர் மலர். அதிலே எனக்கு அதிக ஈடுபாடு உண்டாக்கியது குழந்தை கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்கள் தொடர்ந்து எழுதிய பாடல்கள். நானும் அந்தப் பத்திரிகை வாயிலாக குழந்தை உலகத்திலே நடமாடினேன்.

எனது எழுத்துக்களுக்கு அதிக வாய்ப்பு அளித்தது குமுதம் வெளியிட்ட "ஜிங்லி"- சிறுவர் வார இதழ். "அந்தப் பத்திரிகையில் இருந்து திரும்பி வந்தது—இந்தப் பத்திரிகை ஏற்றுக் கொள்ளாதது என்ற கவலைகள் இல்லாமல் கதைகளை அனுப்பி கொண்டே இரு. உன்னுடைய நல்லகதைகளுக்கு "ஜிங்லி"யில் இடம் உண்டு" என்று அதன் ஆசிரியர் குழுவிலே ஒருவராக இருந்த ரா. கி. ரங்கராஜன் அவர்கள் எழுதிய ஊக்கமூட்டும் அஞ்சல்கள் தொடர்ந்து பல வாரங்கள்—பலமாதங்கள் கதைகள் எழுதக் கூடிய ஆற்றலை எனக்குத் தந்தன.

"பட்டை போட போடத்தான் பளபளக்கும் வைரம். மெருகு கொடுக்க கொடுக்கத்தான் மினு மினுக்கும் தங்கம்" என்ற குழந்தைக் கவிஞரின் குரலைச் செயல் படுத்தினார். ரா. கி. ரங்கராஜன் அவர்கள்.

ஜிங்லி நின்றது. பூஞ்சோலை தோன்றியது. கதையோடு கவிதை எழுதும் பயிற்சி அளித்தது பூஞ்சோலை. காலத்தின் கொடுமையால் பூஞ்சோலை நின்றதாலும் அதன் கௌரவ ஆசிரியர் அழ. வள்ளியப்பா அவர்களுக்கும் எனக்கும் ஏற்பட்ட நேசத்தை அந்தக்காலத்தில் பிரிக்க முடியவில்லை. எனவே, காலத்திற்கு எனது நன்றி.

அழ. வ. அவர்கள் எனது சகோதரராக மாறினார்கள் — உடன் பிறந்த சகோதரர் இல்லாத குறையை அகற்றினார்கள். கவிஞர் கு. சா. கிருஷ்ணமூர்த்தி அவர்களும் அழ. வ. அவர்களுக்கு மூத்தவர் ஆனார்கள்.

இரண்டு பலமான பாதுகாப்பாளர்களைத் துணையாகக் கொண்டு எனது இலக்கியச் செடி படர்ந்தது.

எனது இலக்கியப்பாதையிலே இடையிலே தோன்றிய எழிற் கூடம் திருச்சி தமிழ் எழுத்தாளர் சங்கம். இங்கு எனக்கு அமைந்த சகோதரர்களின் எண்ணிக்கை பன்மடங்காக உயர்ந்தது. ஓர் இலக்கியத் தாயும். இரு மைத்துனர்களும் கிடைத்தது நான் செய்த நற்பேறு.

திருச்சி தமிழ் எழுத்தாளர் சங்கம் எனும் குடும்பத்தில் வயதில் கடைசி குழந்தையாக —எல்லோருடைய அன்பையும் பெற்று உலவிவரும் வாய்ப்பு எப்பொழுதாவது வாழ்வில் தோன்றும் துன்பப் பசியை அகற்றும் இன்ப சுரபியாக எனக்கு அமைந்து இருக்கிறது.

எதிர்காலத்திலும் எனது பாதையில் மல்லிகை மலர்களை அதிகம் பரப்புவதே எனது குறிக்கோள். சிற்சில ரோசா மலர்களைப் படரவைக்கவும் எண்ணம் உண்டு.

### வா. கோ. பா.

நான் எழுத்துலகில் இடம் பெற்றபோது நான் ஈடுபட்டுள்ள துறை இன்னதென்றே அறியா நிலையிலிருந்தேன்; அதனால் சிந்திக்கக்கூடத் தேவையின்றி எதையெதையோ நிறைய எழுதிக்கொண்டே போனேன்; ஆனால் இன்று நான் ஈடுபட்டுள்ள துறை மிகப் புனிதமானது, பொறுப்புள்ளது என்பதை நான் நன்கு உணர்ந்துவிட்டேன். அதன் விளைவாகத்தான் அதிகம் எதுவும் எழுவதில்லை. ஆமாம், சிந்தனைப் பாதையில் இப்போதுதான்—அதாவது எழுதத் தொடங்கிய பனிரெண்டு ஆண்டுகளுக்குப் பின்பு —நான் பிரயாணத்தைத் தொடங்கியிருக்கிறேன்!



# விஞ்ஞானத்தில் எனது ஈடுபாடு

(டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன்)

---

விஞ்ஞான ஆராய்ச்சி, விஞ்ஞானிக்குப் பெரிய லட்சியம். அந்த ஆராய்ச்சியினால் லாபம், நஷ்டம், புகழ் உண்டோ இல்லையோ அவனுக்குக் கவலையில்லை. அவன் பொருட்படுத்துவது ஒன்றுதான். அந்த ஆராய்ச்சியில் அவனுக்கு உண்டாகும் தெவிட்டாத ஆனந்தந்தான் அது.

> "கொள்ளத் துணியிலென்?
> தீதென் றிகழிலென் கூர்மதியீர்!
> எள்ளத் தனைஉக வாதிக ழாதென்
> னெழில்மதியே!"

என்றார் ஒரு பெரியார். இதுவே உண்மையான விஞ்ஞானியின் மனப்பான்மை.

என்னை அகப்படுத்திய துறை விஞ்ஞானம். நான் அந்தத் துறையில் இறங்கி முப்பது வருஷங்களுக்கு மேலாயிற்று. இன்றும் நான் அந்தத் துறையிலேயே மூழ்கி வருபவனாகையால், விஞ்ஞானத்தில் எனக்கு ஈடுபாடு உண்டு என்று சொல்லத் தேவையில்லை. அந்த ஈடுபாடு எந்த அளவுக்குச் செயலில் முடிந்தது என்பது வேறு கேள்வி. அதற்கான பதிலையும் என் நண்பர்கள் சொல்லவேண்டுமே தவிர நான் சொல்வதற்கு இல்லை. அதற்கு போதுமான துணிவு இல்லை எனக்கு. விஞ்ஞானத்தில் எனக்குள்ள ஈடுபாடுதான் நான் பேசக்கூடிய விஷயம். அதுவே இன்றையப் பேச்சுக்கான விஷயமாகும்.

விஞ்ஞானத்தில் முதல் முதலாக நான் ருசி கண்டது 1911-ஆம் வருஷத்தில், ஹைஸ்கூலில் நாலாவது பாரத்தில் நான் படித்து வரும்போது. எங்களுக்கு விஞ்ஞானம் போதித்தவர் பெரிய விஞ்ஞானி அல்லாவிட்டாலும், விஞ்ஞான விஷயங்கள் பலவற்றை வெகு தெளிவாகவும் ருசிகரமாகவும் எடுத்துரைப்பதில் வெகு சமர்த்தர், அவருடைய பாடங்கள், கேட்பவர் மனதில் பதியும்படி இருந்ததோடு, மேன்மேலும் விஞ்ஞான விஷயங்களைக் கேட்கவும் படிக்கவும் பேரவாவை உண்டுபண்ணக் கூடியவையாயிருந்தன, அது பௌதிக நூலானாலும் சரி, ரசாயனமானாலும் சரி, அவருடைய போதனை முறையே தனிப்பட்டது.

அவர் வெறும் புத்தகத்தைப் படித்துப் பாடம் கற்பிப்பவர் அல்ல. அவரிடம் நாங்கள் கற்றது ஏட்டுச் சுரைக்காயும் அல்ல. அநேக சிறு ஆராய்ச்சிகளை நேரில் எங்களுக்குச் செய்து காட்டுவார் அவர். எங்களைச் செய்யும்படி தூண்டுவதும் உண்டு. எனக்குத் தெரிந்தவர்களில் இம்மாதிரியான உபாத்தியாயர் வெகு சிலரே. அவரிடம் நான் விஞ்ஞானம் முதல் முதலாகப் பயில நேர்ந்ததை ஒரு பெரும் பாக்கியமென்றே கருதுகிறேன். அந்தப் பெரியாரின் பெயர் ஸ்ரீமான் ஏ. சுப்ரமண்ய ஐயர் ஆகும். எனக்கு விஞ்ஞான மூட்டிய ஆசிரியருக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சிறிது காலந்தான் அவர் எங்கள் பள்ளிக்கூடத்தில் தங்கியிருந்தார்.

அதே சமயத்தில், மற்றொரு விஞ்ஞான ஆசிரியரும் எங்கள் பள்ளிக்கூடத்திலே வெறும் வகுப்புகளில் பாடம் சொல்லிக் கொண்டிருந்தார். அவருக்குத் தமிழ் மொழியில் பேரன்பு. தமிழ்ப் பண்டிதரும் ஆவார். அவர் பேசுவதெல்லாம் செந்தமிழில்தான். அவர் விஞ்ஞானம் கற்பித்ததும் தனித் தமிழில்தான். அவர் தாம் திருவாளர் திருமலைக் கொழுந்து பிள்ளை. அவர் பாடங்களைக் கேட்ட பிறகுதான் தனித்தமிழில் எதுவும் சொல்லமுடியும் என்று நான் கண்டு கொண்டது. அது முப்பத்தெட்டு வருஷங்களுக்கு முன்.

அவருடைய நாவீறு தனிப்பட்டது. ஏதோ ஒரு சிறு பிழை செய்த மாணாக்கனை அவர் புன்சிரிப்புடன் நோக்கி, "புத்தியைப்

புறத்தே செல்ல விட்ட கழுதாய்! கழுதை மூதாய்! பெஞ்சாரோகணம் செய்வாயாக'' என்று கூறியது போன்ற அவர் சொற்கள் இன்னும் என் காதுகளில் தொனிக்கின்றன.

நான் விஞ்ஞானத்தில் உண்மையான ருசி கண்டது ஒரு வருஷத்திற்குப் பின் எங்கள் பௌதிக நூலாசிரியர் ஒரு தடவை 'ஆர்கிமுடீஸ்' சித்தாந்தத்தைப்பற்றி ஒரு கட்டுரை எழுதச் சொன்னர். அப்பொழுது நாங்கள் கற்றிருந்தது, அந்தச் சித்தாந்தத்தை நிரூபிக்க மட்டுந்தான். அந்தக் கட்டுரை எழுதும் போது, அந்த சித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்டு பண்டங்களின் திண்மை (Density)யை அளப்பதற்கு நான் கண்டு பிடித்த் ஒரு சிறு கருவியைப் பற்றி எழுதியிருந்தேன. அந்தக் கருவியைக் கண்டு பிடித்ததில் எனக்கு உண்டான உற்சாகத்துக்கு அளவே கிடையாது. சில நாட்களுக்குப் பிறகுதான் கண்டு பிடித்த கருவி புதிது அல்ல வென்றும், நிக்கோல்ஸன் (Nicholson) என்பவர் வெகு காலத்துக்கு முன்பே அந்த மாதிரியான கருவியைக் கண்டு பிடித்தார் என்றும், அதை எல்லோரும் உபயோகப் படுத்தி வருகிறார்கள் என்றும், அதற்கு 'Nicholson's Hydrometre' என்ற பெயர் வழங்குகிறது என்றும், எல்லாப் பௌதிகப் புத்தகங்களிலும் அதைப் பற்றிப் படிக்கலாமென்றும் தெரிந்து கொண்டேன். ஆனல் என உற்சாகம் மட்டும் குறையவில்லை.

முழு மனத்துடன் விஞ்ஞான ஆராய்ச்சியில ஈடுபட்டது ஏழெட்டு வருஷங்களுக்குப் பின அப்பொழுது கல்கத்தா பலகலைக் கழகத்தில் ஸ்ரீ ஸி. வி. ராமன், 'பாலிட்' பேராசிரியராக நியமிக்கப் பட்டு, அங்கு அவர் செய்த ஆராய்ச்சிகளைப் பற்றி Nature, Philosophical Magazine போன்ற மேல நாட்டு விஞ்ஞானப் பத்திரிக்கைகளில் பிரசுரமாகி யிருந்தது. அந்தக் கட்டுரைகளின அச்சுப் பிரதிகள் சில எனக்குக் கிடைத்தன. அவைகளைப் படித்த பிறகு தான், விஞ்ஞானத் துறையில் புதிதாகக் கண்டு பிடித்த விஷயங்களை அப்போதைக்கப்போது பிறர் படிக்கும்படி அச்சிடும் வழக்கம் உண்டு என்பதும், அந்த மாதிரியான கட்டுரைகளைப் பிரசுரிப்பதற்கு என்றே அநேக விஞ்ஞானப் பத்திரிகைகள் வெகு காலமாகவே நடந்து வருகின்றன என்றும், நம் நாட்டிலிருந்து ராமாநுஜன், ராமன் போன்றோர் அந்தப் பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதி வருகிறார்கள் என்றும், அவற்றில் சிலவற்றை மேல் நாட்டு விஞ்ஞான நிபுணர்கள் வெகுவாகக் கொண்டாடி யிருக்கிறார்கள் என்றும் தெரிந்து கொண்டேன். இது எனக்கும் கண் திறந்த மாதிரி அமைந்தது. விஞ்ஞானத்தைப் பற்றியும் விஞ்ஞானிகளின ஆராய்ச்சியைப் பற்றியும் புதிய உணர்ச்சி உண்டாயிற்று. நான் இதற்கு முன்பு கேள்விப் படாத ஒரு புது உலகம் அதாவது விஞ்ஞான உலகம் - எனக்குப் புலனாயிற்று. எட்டு வருஷங்களுக்கு முன் இந்த விஞ்ஞான உலகமும், அதன் நியதிகளும் எனக்குத் தெரிந்திருந்தால், நான். கண்டு பிடித்திருந்த 'திண்மை' அளக்கும் கருவியைப் பற்றி எழுதியிருக்கலாமே என்று அநுதாபப் பட்டேன்; அப்படியே எழுதியிருந்தால், உடனே யாராவது ஒரு விஞ்ஞானி, அது வெகு காலத்துக்கு முன்ன தாகவே, நிக்கோல்ஸன் முதலானோருக்குத் தெரியும் என்று இதைக் குறித்து எழுதியிருப்பாரே என்று நினைத்து நானே சமாதானம் பண்ணிக் கொண்டேன. இவை சிறு விஷயங்கள். அதிலிருந்து எழுந்த ஒரு பெரு விளைவை நான் இங்கே குறிப்பிட வேண்டும். அதாவது, என் முழுமனத்துடன் விஞ்ஞானத் துறையில் இறங்கி ஆராய்ச்சி செய்யவேண்டும் என்ற பேரவா எனக்கு எழுந்து, அப்படியே விஞ்ஞான ஆராய்ச்சியிலேயே பொழுது போக்குவதாகத் தீர்மானித்தேன்.

அப்பொழுது நான் வகித்து வந்த சிறு உத்தியோகத்தை உடனே விட்டுவிட்டு, ஸர் ஸி. வி. ராமனிடம் பௌதிக ஆராய்ச்சி செய்வதாகத் தீர்மானித்துக் கல்கத்தா சென்றேன். ஆனல், நான் உடனே விஞ்ஞான ஆராய்ச்சியை ஆரம்பிப்பதற்கு இணங்க வில்லை இரண்டு வருஷகாலம், கல்கத்தா பல்கலைக் கழகத்தில் பௌதிகத்தின் பல அம்சங்களை முறைப்படி கற்ற பின்புதான், அவருடைய ஆராய்ச்சிக் கோஷ்டியில் சேர முடிந்தது. ஐந்து வருஷ காலம் அங்கே குருகுல வாசம் செய்யும்படியான பாக்கியம் கிடைத்தது. இந்த ஐந்து வருஷங்கள் என்னுடைய விஞ்ஞான வாழ்வில் பெரிய திருநாளாக வாய்த்தன.

# ஷேக்ஸ்பியரும் — நானும்

பேராசிரியர் ஸி. எஸ். கமலபதி, எம். ஏ.

நான்: நாடக உலகின் நந்தாவிளக்கே, வருக வருக. உங்களைப் பற்றித்தான் எண்ணமிட்டுக்கொண்டிருந்தேன். நான் செய்த புண்ணியம். நீங்களாகவே வந்துவிட்டீர்கள்.

ஷேக்ஸ்பியர்: உங்கள் தீந்தமிழ் நாட்டில் தீவிரமான மறுமலர்ச்சி ஏற்பட்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன். உடனே கிளம்பி இங்கு வந்து விட்டேன். ஏன், நான் இப்படிவந்தது உங்களுக்குப் பிடிக்கவில்லையா என்ன? பிறமொழியார்களைக்கண்டால் அவ்வளவாக.........

நான்: அப்படியொன்றுமில்லை. ஒரு சிலர் மொழித்தூய்மையைப் போற்றுகின்றனர் என்றாலும், கருத்துப் பரிமாற்றத்திற்கு எந்தவிதமான தடையும் கிடையாது. உங்கள் நூல்களைப் படிக்காதவர்களெல்லாம்கூட உம்மைப் போற்றுகிறார்கள்.

ஷேக்: அப்படியா? படிக்காத காரணத்தினால்தான் போற்றுகிறார்களோ, என்னவோ!

நான்: இல்லை, இல்லை. உண்மையாகவே உங்கள் பேரிலும், உங்களுடைய நாடகக் காப்பியங்கள் பேரிலும் எம்மக்களுக்குச் சொல்ல முடியாத மோகம்...... எனக்குக்கூட நெடு நாட்களாக ஒரு பெரிய ஆவல்...... சொல்லலாமென்றால் சொல்கிறேன்........

ஷேக்: தாராளமாகச் சொல்லுங்கள். தைரியமாகவே பேசுங்கள்.

நான்: வந்து...... உங்கள் காப்பியங்களைப் போலவே, உலகெங்கும் போற்றப்படக்கூடிய செம்மையான சீரிய நாடக இலக்கியங்களைச் செந்தமிழில் இயற்றவேண்டும். அதை எப்படிச் சாதிப்பது? அதற்கான யோசனைகள் சிலவற்றைத் தாங்கள்தான் சொல்லவேண்டும்.

ஷேக்: (பரிவும் எளனமும் கலந்த சிரிப்புடன்) ஆர்வமுள்ள எழுத்தாள நண்பனே, உன் பரிதாப நிலையைக்கண்டு எள்ளி நகையாடத் தோன்றிடினும், பரிவுணர்ச்சியொன்று அதைத் தடுத்து நிறுத்துகிறது. என்னைப் போன்று, அவனைப் போன்று, இவனைப் போன்று என்ற நினைப்பே கலைப்படைப்பின் பரமவிரோதி. நீ இன்னொருவனைப் போன்று ஏன், எதற்காக எழுதித் தொலைக்கவேண்டும்? அப்படி எழுதத்தான் முடியுமா? அப்படியே முடிவதானாலும், உன்னை அதற்காக யாரும் போற்றமாட்டார்களே! ஆகவே, நீ உன்னைப் போலவே எழுதிக்கொண்டுவா... அதுதான் உண்மையான முன்னேற்றத்திற்கு உறுதுணை செய்யவல்லது.

நான்: ஆம்... உண்மை...... காப்பியடிப்பவனுக்குச் சுய அறிவு இல்லை என்பதைச் சுட்டிக்காட்டுகிறீர்கள். நான் என் சொந்தப் பாணியிலேயே எழுதிவரவேண்டும்... சரி...... நாடகம் நல்லபடி அமைய வேண்டுமென்றால் முதற்கண் கவனிக்கப்படவேண்டிய விஷயம் எதுவென்பதைச் சற்று கூறவேண்டும்.

ஷேக்: உங்கள் தமிழில் உள்ளதுபோல் எல்லாவற்றிற்கும் இலக்கணச் சூத்திரங்களை என்றால் யாத்துக்கொடுக்க முடியாது... நான் கையாண்ட முறைகளை வேண்டுமானால் சொல்கிறேன். முதல் வேலையாக உயிரோட்டமுள்ள நல்ல கதையொன்றைத் தெரிந்தெடுத்துக் கொள்வேன்.

நான்: என்ன, என்ன? தெரிந்தெடுப்பீர்களா? அப்படி என்றால் நீங்கள் எந்த ஒரு கதையையும் சுயமாகவே கற்பனை செய்தது கிடையாதா?

ஷேக்: (இடி, இடி எனச்சிரித்த வண்ணம்) சுயமாகவா? கற்பனையா? என்னப்பா இது, இப்படியெல்லாம் உன்னையே நீ ஏமாற்றிக்கொள்கிறாய்? "சுயமாகவே கற்பனை செய்த கதை" என்று எந்த மடையனாவது கதை விட்டால் அதை நீ அப்படியே நம்பிவிடுவாய் போலல்லவா தோன்றுகிறது? லக்ஷக்கணக்கான கதைகள் எழுதப்பட்டுவிட்டன, ஆயிரக்கணக்கில் நாமும் படித்திருக்கிறோம். அந்தக்கதைகளுடன் எந்தவிதமான தொடர்பும் இல்லா வகையில் புத்தம்புதிதாக எழுதுவதற்கு என்னப்பா இருக்கிறது?

நான்: ஏன், நாமே புதியதொரு கதையைக் கற்பனை செய்யமுடியாதா என்ன?

ஷேக்: ஐயோ, எழுத்தார்வ இளைஞரே.. கற்பனை என்றால் பொருள் என்ன என்பது தெரியுமா உமக்கு? கண்டு, கேட்டு, படித்து நாம் அனுபவித்த விஷயங்களைப் புதிய முறையிலே கோர்வையாக்கி, நூதனமான ஒரு கோணத்தி லிருந்து அதனைப் பார்த்து, நமக்கே சொந்தமான பாணியில் சொல்வதைத்தான் கற்பனை என அழைக்கிறோம். நீ என்ன நினைத்துக்கொண்டா லும் சரி, நான் எந்த ஒரு கதையையும் சொந்த மாகப் பெற்றெடுக்க வில்லை. (குழந்தைகளைப் பெறுவதற்கும் மனைவி ஒருத்தி தேவைப்பட வில்லையா... அவளின்றிச் சொந்தமாக நானே பெற்றெடுக்க வழி யேது?) பிறர் பெற்ற குழந்தை களுக்குத்தான் எல்லாவித அலங்காரங்களும் செய்து, செய்வித்து மகிழ்ச்சியுற்றேன். என்னைப் பொறுத்தவரை உண்டாக்குவதைவிட உருக் கொடுப்பதில்தான் கலைத்திறனைக் காண்கிறேன். எத்தனை குழந்தைகள் வளர்ப்புக் கோளாறுகளி னால் பாழடைந்து போகின்றனர்!

நான்: ஆம். வால்மீகி, வியாஸர், கம்பன், ஹோமர், வர்ஜில், டாஸ்ஸோ போன்ற ஆதிகவி களின் அடிச்சுவட்டிலேதானே எல்லாக்கதை களும் செல்கின்றன? நல்ல கதையைப் பொறுக்கி எடுத்துக்கொண்டு, நல்லபடியாக நடத்திக் கொண்டு போனால் நல்லதொரு நாடகம் உரு வாகிவிடும் அல்லவா? நடையைப்பற்றி அவ்வள வாக அக்கறைகொள்ள வேண்டுவதில்லை அப்படித் தானே? நடையைப்பற்றி எடுத்த எடுப்பிலேபேனா முனையில் தட்டுப்படும் வார்த்தைகளே போதும் அல்லவா?

ஷேக்: (இரக்கமான பார்வையுடன்) அழுவதா சிரிப்பதா, ஒன்றுமே தோன்ற வில்லை. நண்பரே, நல்லதொரு நடையை அமைத்துக் கொள்ளாதவன் எப்படியப்பா நாடகத்தை எழுத முடியும்? இன்னும் சொல்லப் போனால் பலவித மான நடைகளை எழுதத்தெரிந்திருக்க வேண்டும். உன் தனித்தன்மையை, சுய ஒளியை நடையில் தான் காட்டவேண்டுமென்று முன்னமே சொல்ல வில்லையா? கவியுள்ளம், கவின்மிகுக் கவிச்சொல், இவை அமையப் பெறாதவன் நாடக உலகத்தை எட்டிப்பார்க்கவும் அருகதையற்றவன், சொல்லின் வளமும், சக்தியும் செறிந்து விளங்க, பண்டிதர்கள் நடைக்கும் பாமரர் பேச்சுக்கும் இடையே பாலமமைந்தாற்போன்ற பளிங்கு நடையைக் கையாளவேண்டும். உபயோகிக்கப் படும் ஒவ்வொரு சொல்லையும் அளந்து, நிறுத்து, முடியுமானால் புதுப்பித்து, அல்லது புதிதாகவே உண்டாக்கித் தேவைக்கு ஏற்றபடி பயன் படுத்திக் கொள்ளவேண்டும், அதைத்தான் "தகர்த்தெறிய முடியாத்தனிச்சொல்" என்கிறோம்.

நான்: நாடக இலக்கியத்திற்கு நடை யழகு அவ்வளவு இன்றியமையாததோ? கொச்சை மொழியைப் பச்சையாகவே கையாளலாம் என் றெல்லாம் சொல்லிக்கொள்கிறார்களே.

ஷேக்: பிச்சைக்காரர்கள் நடத்தும் லச் சையற்ற கொச்சை நாடகங்கள் அப்படி இருக்க லாமோ என்னவோ... ஆனால் இலக்கியத்தில் இடம் பெறத்தகுந்த நாடகங்களுக்கு நடையழகு மிக மிக அவசியம். சொல்லப்போனால் நடையின் போக்கு நாடகத்தின் பின்னலையே திருப்பி அமைக்க வல்லது. கதை உயிர் என்றால், நடை உடல் போன்றது. உடலில் வலுவில்லை என்றால் பாவம் அந்த உயிர் என்னதான் சாதிக்க முடியும்? அங்கம் குறைந்த அல்லது பிணியுற்ற உடல் கொண்டவர்களின் அந்தராத்மாவும் மனப்பான் மையும் குறுகிக் கோணலாகி விடுவதை நீ கண்ட தில்லையா? ஆகவே நடையின் முக்கியத்துவத்தை எப்போதும் மறந்துவிடக் கூடாது.

நான்: ஆம்.. ஆம்... பல்லாயிர வருடங் களுக்குமுன் வாழ்ந்த, ஒப்பிலாமணிகளான எங் கள் சங்கத்தமிழ்க் கவிகள்கூட.........

ஷேக்: மீண்டும் ஒரு குற்றம் செய்யத் துணிகின்றாய், நண்பனே, உன் குற்றத்தை எடுத்துக்காட்டுவதற்காக என்னை மன்னிக்க வேண்டும். இறந்து மறைந்துவிட்ட பழங்காலத் தையே நினைந்து நினைந்து உருகுவதும், அதற் குத் தங்கமுலாம் பூசுவதும், அக்காலக் கவிமன் னர்கள் அநாயாசமாக உதிர்த்து விட்டுப்போன சில வரிகளை எடுத்துக்கொண்டு விளக்கி, விளக்கி விம்மி வீங்குவதும், அதைப்போன்று இனி யாருமே எண்ணவும் எழுதவும் முடியாது என்று முழங்குவதும் கற்றறி மூடர்கள் செய்யும் மன் னிக்கமுடியாத பெருங் குற்றம்.

நான்: (சற்றே சினந்து) அப்படி என் றால், அவைகளைக் குப்பையில் எறிந்து விட வேண்டுமென்கிறீரா... உங்கள் இன இறு மாப்பை......

ஷேக்: சீறி எழாதீர்கள், செந்தமிழ் அன் பரே... குப்பையில் போடும்படி எந்த மடையனும் சொல்லமாட்டான். அவைகளை வைத்துப் பூக்களை போட்டு பக்தியுடன் படிக்கவும் வேண்டும். ஆனால்

அவற்றையே சுற்றிச் சுற்றிச் செக்கு மாடுகளைப் போல் வலம் வராதே என்றுதான் எச்சரிக்க விரும்புகிறேன். அசைவு மட்டும் போதாது, முன்னேற்றமும்வேண்டும். அடியடியாகக் காலெடுத்து மேலே மேலே செல்லவேண்டும். கண்கள் இரண்டும் தலையின் முன்புறத்தில்தானே பொருத்தப் பட்டிருக்கின்றன? அப்படி இருக்கக் கழுத்து வலிக்க வலிக்க மீண்டும் மீண்டும் தலையைப் பின்புறம் ஏன் திருப்பவேண்டும்? அல்லது பின்புறம் பார்த்துக்கொண்டவாக்கிலே முன்னே நடந்து செல்லமுடியுமா?

**நான்:** தனித்தன்மை, ஜீவனுள்ளகதை, உறுதியான நடை, முன்னோட்டப்பார்வை, இவை நான்கும் அமைந்து விட்டால் நல்லதொரு நாடகம் உருவாகிவிடும். அப்படித்தானே?

**ஷேக்:** சுற்றுச்சுவர்கள் எழுப்பிவிட்டால் கட்டடம் பூர்த்தியாகி விடுமா? அழகான மேற் கூரையொன்றை வேயவேண்டாமா? பெண்ணின் அழகினை முழுமைப்படுத்துவது கூந்தலலங்காரம்தானே.

**நான்:** அதாவது......

**ஷேக்:** உயிரோட்டமுள்ள பாத்திரங்கள் ஊடே ஊடே உலவிவரவேண்டும். காட்சிக்குக் காட்சி அவர்கள் குணவிசேஷங்கள் வளர்ந்து முழுமையுறவேண்டும். எவ்வாறு ஒரு மனிதன் மற்றொருவனைப்போல் இல்லாமல் தனித்தன்மை பெற்று விளங்குகிறானோ, அதே போன்று பாத்திரங்கள் ரகங்களாக விளங்காமல் (Types) தனி நபர்களாகவே (Individuals) இயங்கவேண்டும். இதுபோன்ற பல பாத்திரங்களின் உறவுகள், பிணக்குகள், மோதுதல் இவைகளால் நாடகக் கதை வளர்ச்சி பெறவேண்டும். எல்லாவிதமான கருத்துக்களையும் பாத்திரங்களின் வாயிலாக வெளியாக்கவேண்டுமே தவிர, நடு நடுவே ஆசிரியர் புகுந்து திரைச்சீலையை விலக்கி முன்வந்து பிரச்சாரம் செய்வது கூடாது.

**நான்:** அப்படியென்றால், நாடகத்தில் பிரச்சாரத்திற்கு இடமே கிடையாது என்கிறீர்களா?

**ஷேக்:** அப்படிச் சொல்லவில்லையே, அவசியம் இடம் உண்டு. பாத்திரங்கள் பிரச்சாரம், எதிர்பிரச்சாரம் இரண்டுமே செய்யலாம். இரண்டு கட்சிகளும் இடம் பெறவேண்டும். ஆசிரியர் அவற்றில் பங்குகொள்ளக் கூடாது என்பதே எனது முறை.

**நான்:** அப்படியென்றால் ஆசிரியனின் முடிவு?

**ஷேக்:** அதைத்தான் சொல்லிவிடக் கூடாது என்கிறேன். முடிவு கட்டும் பொறுப்பை பார்ப்பவர் படிப்பவர்களுக்கு விட்டுவிடு. நீ நடுநிலையில் நின்று, இருதரப்பாரையும் கண்டு சத்தம் செய்யாமல்சிரித்துக்கொண்டிருக்கலாமே! கலையைப் படைப்பவன் அல்லவா நீ? படைப்பவன் படைக்கப்படும் பொருளைவிட என்றுமே உயர்ந்தவன் என்ற உண்மையை மறந்துவிடாதே. என்னால் படைக்கப்பட்ட ஒரு பாத்திரத்திற்கோ, கோட்பாட்டிற்கோ, நானே எப்படி அடிமையாகி விட முடியும்?

**நான்:** ஆம் பாத்திரங்களை நாம்தான் அடக்கியாளவேண்டும். அவை நம்மைக் கட்டுப் படுத்தும்படி விடக்கூடாது. கொடிய பாத்திரம் ஒன்றை அறவே வெறுத்துத் தூற்றித் துகள் பறக்கச்செய்ய வேண்டும்.

**ஷேக்:** சாச்சா... எட்டாம்தர குட்டிச் சுவர் எழுத்தாளரின் பாணியல்லவா அது...... மிகக்கொடிய பாத்திரம் ஆயினும் அவன் ஒரு மனிதன் என்பதை எப்படி மறந்துவிட முடியும்? கொடுந்தன்மை மங்கி மனிதத்தன்மை ஓங்கி இருக்கும் நேரங்கள் இருக்காதா? கொலைகாரன் காதலிப்பதில்லையா? கொள்ளைக்காரன் தன் பிள்ளைகளுடன் கொஞ்சி விளையாடுவதேகிடையாதா? அன்பரே...... நூற்றுக்கு நூறு கொடியவன் என்றோ நல்லவன் என்றோ இப்பூவுலகில் யாருமே இருக்க முடியாது. அமுதத்தில் அஜீரணத்தன்மை இல்லையா? அளவுக்கு அதிகமாக அருந்திப்பார். நஞ்சிலே மருந்துத்தன்மைகிடையாதா? சிறிய அளவிலே உபயோகித்துப்பார்.

**நான்:** ஆமாம் உணர்கிறேன். நீங்கள் படைத்திருக்கும் கொடியவனை ஷைலாக்கினிடத்தில் இனப்பற்றைக்கண்டிருக்கிறேன். வேசிகள் திலகம் எனத் தூற்றப் பெறும் எகிப்திய க்ளியோபாட்ராவின் உள்ளத்தில் வேரூன்றி நின்ற உண்மைக் காதலையும் அல்லவா நீங்கள் படம் பிடித்திருக்கிறீர்கள்!

**ஷேக்:** உண்மை... பரந்த மனப்பான்மையும் விரிந்த பரிவுணர்ச்சியும்தாம் சாகா

இலக்கியத்தின் தோற்றுவாய்கள். என்வெறுப்புக்குப் பாத்திரமான பாத்திரம் ஒன்று கூடக் கிடையாது. வெறுப்பின் அடிப்படையில் தோன்றும் எதுவும் உருப்படவே முடியாது என்பது வரலாறு காட்டும் மகத்தான உண்மையல்லவா? வெறுப்பு வெறுப்பவனையே வேரறுத்து விடும்.

நான்: சரி, சரி இனி நான் எல்லாரையும் ஏற்றமாகவே பேசுவேன். எல்லாக் கட்சிகளையும் உயர்த்தியே புகழ்வேன்.

ஷேக்: அப்படியா செய்யச் சொன்னேன்? வெறுக்காதே என்றால் போற்று என்பதா பொருள்? கசப்பைக் கேவலப்படுத்தக்கூடாது என்றால், அது இனிப்பைவிட இனியது என்றா கொள்வது? கசப்புக்கும் ஒரு மதிப்பு உண்டு, அதனை உணரவேண்டுமென்பதே என் வாதம்.

நான்: அன்றாட வாழ்க்கையில் நமக்குப் பிடிக்காத விஷயங்கள் எத்தனையோ இருக்கின்றனவே. அவைகளை எப்படி நமது நாடகத்தில் அமைக்க முடியும்?

ஷேக்: அன்றாட வாழ்க்கை ஒன்றினையே அடித்தளமாகக் கொண்ட நாடகங்கள் அமரத்துவம் அடையமுடியாது. நாளுக்கு நாள் மாறிக்கொண்டே போகும் நாகரீகத்தைக் கிண்டல் செய்வதுதான் நாடகம் என்று பலர் நினைக்கின்றார்கள். அதுதான் தவறு. ஒருவன் நேற்று விபூதி பூசினான்; இன்று முகப்பவுடர் பூசுகிறான். நேற்று முன்னே சிரைத்துச்சிகை என்றான், இன்று பின்னே சிரைத்துக்கொண்டு கிராப்பு என்கிறான். நேற்று புராணத்தைப் போற்றினான், இன்று விஞ்ஞானத்தைப் போற்றுகிறான். இவை எல்லாம் வாழ்க்கைக் கடலின் மேல் ஓடி விளையாடும் அலைநெளிவுகள். இதை எல்லாம் புறக்கணித்து ஆழ்கடலில் முழுகி முத்தெடுக்க வேண்டும். அதாவது மாறுபடாத மானிட மாண்புகள் குணக்கோணல்கள் இவைகளைக் கருவாக அமைத்துப் புனையப்படும் நாடகங்கள்தாம் கால வெள்ளத்தால் கரைக்கப்படாத இலக்கியங்களாகும்.

நான்: அரசியல் பிரச்சினைகளுக்கு நாடகத்தில் இடம் கிடையாது என்பதுதானே அதன் பொருள்?

ஷேக்: அப்படியும் சொல்லிவிட முடியாது. நம் காலத்து மக்களுக்குப் பிடித்த ஒரு சில விஷயங்களையே பன்னிப்பன்னிச் சொல்லிக்கொண்டிருக்கக் கூடாது. இலட்சிய அரசியல் பொருளாதாரக் கோட்பாடுகளைத் தீர்க்க தரிசனம் செய்து படம்பிடித்துக் காட்டலாமே. பாமர மக்கள் புரிந்து கொள்ளும் பாஷையில் பேசவேண்டும்; ஆனால் அவர்களுக்கு எளிதில் புரியாத புதுத்தத்துவங்களை எடுத்துச்சொல்ல வேண்டும். சிரிப்பூட்டும் வார்த்தைகளில் சிந்தனையைக்கிளறும் சக்தியினை அமைக்க வேண்டும்.

நான்: அதாவது... நாடகம் வெறும் பொழுது போக்கல்ல. அறிவுக்குத் தூண்டுகோலாகவும் அமையவேண்டும் என்கிறீர்கள்.

ஷேக்: சந்தேகமென்ன? பேசிக்கொண்டே போகும் போது பாத்திரங்கள் நிரந்தரமான உண்மைகளைத் தூவிவிட்டுக் கொண்டே செல்ல வேண்டும், வேகமாக ஓடிச்செல்லும் தெருப்பாடகர்கள் ராகலக்ஷணங்களை உதிர்த்துச் செல்வதுபோல்; தெருவழியே நடைபயிலும் மோகினிப்பெண் எல்லா உள்ளங்களுக்கும் உணர்ச்சி யூட்டுவதுபோல; சூடான காப்பியிலே நறுமணம் கமழ்வதுபோல.

★

“காப்பி ஆறிப்போகிறது, எழுந்திருடா” என்று என் அருமைத் தாயார் அரற்றியதைக் கேட்டுத் திடுக்கிட்டெழுந்தேன். கண் விழித்த போதுதான் நான் கண்டது கனவு என்பது புலனாயிற்று. நல்லதொரு தமிழ் நாடகம் எழுதி விடவேண்டும் என்ற தீவிர எண்ணத்துடன் கண்ணயர்ந்து விட்டதின் காரணமாகப் பூத்த பகற்கனவுதான். என்றாலும்தான் என்ன? என் கனவு என் பலிக்கக்கூடாது? பலித்திடுமா?



# தமிழ் எழுத்தாளர் சங்கம், திருச்சி.

## எங்கள் சரிதை

16—1—55ல்
சங்கத்தைத் துவக்கிவைத்தவர் :

திரு. ம. பொ. சிவஞான கிராமணியார்

எங்கள் மாநாட்டின் மகுடபதிகள்:

திரு. ஆர். மகாதேவன் "தேவன்" — 1956
டாக்டர் திரு. ரா. பி. சேதுப் பிள்ளை — 1957
டாக்டர் திரு. மு. வரதராசனார் — 1958
டாக்டர் திரு. கே. எஸ். கிருஷ்ணன் — 1959

திருவிளக்கேற்றியவர்கள் :

திரு. கி. வா. ஜகந்நாதன், ஆசிரியர், 'கலைமகள்'
திரு. ஏ. ஜி. வேங்கடாச்சாரி, ஆசிரியர், 'தினமணி'
திரு. எஸ். எஸ். வாசன், ஆசிரியர், 'ஆனந்த விகடன்'
செம்பொருட்காட்சியர் திரு. ஜயன்பெருமாள் கோனார்

செந்தமிழ் பேசிச் சிறப்பித்தோர் :

'பெருஞ்சொல் விளக்கனார்' திரு. அ. மு. சரவண முதலியார்
சப்ஜட்ஜ் திரு. எஸ். மகராஜன்
குழந்தைக் கவிஞர் திரு. அழ. வள்ளியப்பா
திரு. மகாலிங்கம் 'பகீரதன்'
திரு. கி. வா. ஜகந்நாதன்
திருவாசகமணி திரு. கே. எம். பாலசுப்ரமணியம்
திரு. எஸ். ராமகிருஷ்ணன் எம். ஏ.,

விழாத் தலைவர்கள் :

திரு. தெ. துரைராச பிள்ளை, அமைச்சர், திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கம்.
திரு. அ. சீநிவாசராகவன், முதல்வர், வ. உ. சி. கல்லூரி, தூத்துக்குடி.
டாக்டர் திரு. எட்வர்ட் பால் மதுரம் M. L. A., தலைவர், திருச்சிராப்பள்ளித் [தமிழ்ச் சங்கம்

சங்கம் பாராட்டிய தமிழ்ச் செல்வர்கள் :

திருவாசகமணி திரு. கே. எம். பாலசுப்ரமணியம்
முத்தமிழ்க்காவலர் திரு. கி. ஆ. பெ. விசுவநாதம்
டி. கே. எஸ். சகோதரர்கள்
தமிழவேள் திரு. பி. டி. ராஜன்
நாவலர் திரு. அகிலன்
கவிஞர் திரு. கலைவாணன்
பொற்காசுப்புலவர் திரு. திருலோக சீதாராம்
பொற்சுடர்க்கவிஞர் திரு. துறைவன்
வித்துவான் திரு. கு. க. நரசிம்மன்

வித்துவான் திரு. வி. துரைசாமி
முதுபெரும் நூலாசிரியர் திரு. எம். ஆர். ஜம்புநாதன்
சமூக நாவலாசிரியர் திரு. ஏ. எஸ். ராகவன்
குழந்தைக் கவிஞர் திரு. பாரதன்
திவான்பகதூர் திரு. என். ராமசுவாமி அய்யர்
சிந்தனைச்செல்வர் திரு. 'சுகி' சுப்ரமணியம்
சிறுகதைச் சிற்பி திரு. மாயா - நாராயணசாமி

## நாங்கள் ஆராய்ந்த கருத்துக்கள்

வாழ்க்கையும் இலக்கியமும்
கவிதை
எது இலக்கியம்?
கதையில் சோகம் — விதியாலா அல்லது பாத்திர அமைப்பாலா?
நமது பண்பாடு
அமெரிக்க அனுபவங்கள்
தற்காலத் தமிழ் இலக்கியம்
கதையின் சிறப்பு — கதைப் போக்காலா, பாத்திரங்களின் குண விசேஷத்தாலா?
வங்கம் வளர்க்கும் தமிழ்
விமரிசனம் இலக்கியத்தை வளர்க்குமா?
இலக்கிய இன்பம்
அழகு தருவது — கதைக் கருவா? கதை அமைப்பா?
லண்டனில் தமிழ்ச் சங்கம்
நல்ல சிறு கதைகள்
நமது மூதாதையர்
மலிவுப் பதிப்புகள் இலக்கியத்தை வளர்க்குமா?
புலன்விசாரணை விளக்கம்
சிந்தனைப் பாதையில்
சிறு கதை
நாடகம்
சிறுகதையில் வாழ்க்கை
கலையும் ரசனையும்
உரை நடைத் தமிழ்
சிறு கதை — கற்பனையா, வாழ்க்கையின் பிரதிபலிப்பா?
இலக்கியமும் சட்டமும்
இருவேறு உலகங்கள்
எனது முதல் கற்பனை
பிரயாண இலக்கியம்
நாடக இலக்கியம்
இலங்கையில் தமிழ் மறுமலர்ச்சி
சங்க வளர்ச்சி
சங்க காலச் சிறு கதைகள்
குழந்தைகள் தினம்
சங்க நடவடிக்கை
தில்லியில் தமிழ் முழக்கம்
விவாதத்தில் சிறப்புப்பெறுவது எங்ஙனம்?
நமது பாராளுமன்றம்

## திருநாட்கள்

எழுத்தாளர் திருநாள் | காப்பியத் திருநாள்
கவிஞர் திருநாள் | புலவர் திருநாள்

## எங்களிடையே சொற்பெருக்காற்றிய அறிஞர்கள்

திரு. திருவாசகமணி கே. எம். பாலசுப்ரமணியம்
,, சிதம்பரம் தண்டபாணி பிள்ளை
,, கொத்தமங்கலம் சுப்பு
,, கி. வா. ஜகந்நாதன்
,, ம. பொ. சிவஞான கிராமணியார்
,, அ. ச. ஞானசம்பந்தன்
,, ஐயன்பெருமாள் கோனூர்
,, டி. கே. சண்முகம்
,, அரு. இராமநாதன்
,, எஸ். கே. ராமன் ('மாயாவி')
,, எம். எஸ். சீனிவாச சர்மா
,, ஜி. உமாபதி.
,, ரா. அ. பத்மநாபன்
திரு. ஏ. கே. செட்டியார்
,, பூர்ணம் விசுவநாதன்
,, என். ராமசாமி அய்யர்
,, எம். கயிலை அனந்தர்
,, ம. முத்துசாமி
,, திருமேனி
,, எப். ஜி. நடேசய்யர்
,, சிதம்பர ரகுநாதன்
,, பாஸ்கரத் தொண்டைமான்
,, பி. வி. ஆர்.
,, கே. என். ரங்கசாமி அய்யர்
,, பகீரதன்
,, லால்குடி கிருஷ்ணமூர்த்தி
,, ராமமூர்த்தி அய்யர்

திரு. நாராயணசாமி முதலியார்
,, தங்கவேலன் (கும்பகோணம்)
,, எம். ஆர். ஜம்புநாதன்
,, பி. டி. ராஜன்
,, அ. மு. சரவண முதலியார்
,, எஸ். மகராஜன்
,, வி. எஸ். சுப்பையா
,, பார்த்தசாரதி அய்யங்கார்
திருமதி, குமுதினி
திரு. ஸ்ரீரா
,, ப. ந. தியாகராஜன்
,, ந. சிங்காரம்
,, ஸ்ரீரங்கம் ராமகிருஷ்ணன்
,, ரம்போலா மஸ்கரனேஸ்
,, சோம. லெ.
திரு. ஸ்ரீதரம் குருஸ்வாமி
,, திருமுருக கிருபானந்த வாரியார்
, நாவற்குழியூர் நடராஜன்
,, ஆர். விசுவநாதன்
,, அ. சீனிவாசராகவன்
,, முத்துசாமி பிள்ளை (D. S. P.)
,, ஜி. ஸி. பட்டாபிராம்
,, ஆர். கிருஷ்ணசாமி ரெட்டியார்
,, டாக்டர் மதுரம்
,, அழ. வள்ளியப்பா
,, கு. சா. கிருஷ்ணமூர்த்தி
,, டி. என். ராஜேந்திரன்
,, கி. கோவிந்தராசன்
,, லக்ஷுமி நரசிம்மன்
,, எம். பழனியாண்டி

## உயிர்த் துடிப்பு

எழுத்தாளன் கதை, கவிதை
இலக்கியத்திற் புதுமலர்ச்சி
ஈதெல்லாம் என்னபுதிர்
என்றகுரல் கேட்கிறது.

புதிரில்லை புதிதில்லை
பூமிக்குள் உள்ளதுதான்
விதிச்சிக்கல் படைப்புண்மை
விளக்குரஸ வாதமிது.

மண்ணின் முழையிருட்டில்
மக்கும்உயிர்ப் பேருண்மை
விண்ணோக்கிச் செல்கிறது
வித்தாரம் பயில்கிறது

மனிதவுடல் அரண்மனையில்
மனமங்கை அரவணைப்பில்
சிந்தனைசெம் பஞ்சணையிற்
சேருமுயிர்ப் போதமிது

கதைகளிலே கரையிட்டுக்
கனவுகளைத் தேக்கிக்
காட்சியிலே கண்டபொருள்
கவிதையிலே கூட்டித்

தொகுத்துரைக்கும் வித்தையிது
தூங்கும்உயிர்த் துடிப்பு—ஆம்
துடிக்கும்உயிர்த் தவிப்பு.

# தமிழன்னையின் பாதத்தில் நாங்கள் சாற்றிய வாடா மலர்கள்

அகிலன் தந்தவை

பாவை விளக்கு
குழந்தை சிரித்தது
வாழ்வில் இன்பம்
வாழ்வு எங்கே ?
வழி பிறந்தது
புயல்
நெஞ்சின் அலைகள்
சக்தி வேல்
எழுதாத கதை
சிநேகிதி
ஆண் பெண்
தாகம்
துணைவி
நிலவினிலே
கலையும் வயிறும்
அவளுக்கு
செங்கரும்பு
புதுமை இலக்கியம்
இன்ப நினைவு
அமராவதிக் கரையில்
சந்திப்பு
கண்ணான கண்ணன்
நல்ல பையன்
தங்க நகரம்
சிவப்பு விளக்கு

'சுகி' சுப்ரமண்யம்

யுத்தகால இலக்கியம்
சாம்பார் சாதம்
திருச்சி உலகநாதன்
விதி வழியே
ஆயிரங்கால் மண்டபம்
இன்பவேலி
துணைப் பறவை
பூச்சரம்
சர விளக்கு
பன்னீர் செம்பு
ஆசை வலை
மனக்கொழுந்துகள்
ஜிலுஜிலு ராணி
(சிறுவர் நூல்)
கற்பகக் கனிகள்
கடற்கன்னி
ஆசை வெள்ளம்
வீடும் விளக்கும்
சிப்பாய் ஹிருதயம்
காதற்கண்கள்
நமஸ்காரம்

ரா. ஆறுமுகம்

விடி வெள்ளி
களத்து மேட்டில்
கன்னிகா ஸ்திரீ
நீரு பூத்த நெருப்பு
பொன் வண்டு
காதற் கீதம்
அவமானச் சின்னம்

கே. பி. கணபதி

அபூர்வப் பிறவிகள்
சிற்பியின் கனவு
மனப் பின்னல்
வளர்பிறை
விதுரன்

திருலோக சீதாராம்

உதயம்
புதுக்கவி மலர்கள்
சித்தார்த்தன்
கந்தர்வ கானம்
உழைப்பின் உயர்வு

கலைவாணன்

உதயம் (காவியம்)
நிவேதனம்
மனச் சிமிழ்
விட்டில்

குமுதினி

திவான் மகள்
யாக யோகம்
நந்துவின் பிறந்த நாள்
மக்கள் மறுமலர்ச்சி

புஷ்பத்துறை சுப்ரமணியம்

ஜீவசிலை
சித்திரப் பாவை

வி. துரைசாமி

அமுத கலசம்
முதற் காதல்

சக்தி சரணன்

சந்திரிகை
பனிமுத்தம்
மேகநாதன்
மதுவனம்

குமாரவேலு

சிவப்பு முல்லை

செந்தாமரை

தென்குமரி

பாரதன்

அழகு நிலா
பாலர் பூங்கா

துறைவன்

பொற் சுடர்
இருளில் ஒளி

என். இராகவன்

செங்கரும்பு

ஏ. எஸ். ராகவன்

அன்பின் வழி
மலர்ந்த மனம்
உணர்வின் விழிப்பு

ஸ்ரீரங்கம் நரசிம்மன்

ஆசை அறியுமோ ?

மாயா

புதுவெள்ளம்

பரதேசி

குல விளக்கு

ஷண்முகநாதன்

மஞ்சள் கயிறு

ரெட்டியார்

அஞ்சலி
சித்தசாகரம்
வாழ்க்கைக் கலை
சிறப்புடன் வாழ்க
வாழ்க்கை
நடத்துவதெப்படி ?
தராசு
பாரதி காட்டிய இல்லறம்

### கலந்துகொண்ட தமிழ் எழுத்தாளர் மாநாடுகள்

மதுரைத் தமிழ் எழுத்தாளர் முதலாவது மாநாடு
கரூர் தமிழ் எழுத்தாளர் முதலாவது மாநாடு
கல்கத்தா தமிழ் எழுத்தாளர் முதலாவது மாநாடு
சென்னைத் தமிழ் எழுத்தாளர் ஏழாவது மாநாடு

### உறுப்பினர் கலந்துகொண்டு தமிழின் உயர்வை எடுத்துப் பேசிய ஏனைய மொழி அமைப்புக்கள்

கேரள சாகித்திய பரிஷத் | வங்க பாஷா சமிதி
கன்னட சாகித்திய பரிஷத் | மேற்கு வங்க பி. இ. என். அமைப்பு
டில்லி கவி சம்மேளனம்

### அங்கத்தினர் பெற்ற பரிசில்கள்

திரு. அகிலன்—கலைமகள்.
திரு. 'சுகி' சுப்ரமண்யம்—கல்கி—ஐந்தாண்டு திட்ட நாடகப்பரிசு
திரு. என். ராகவன் ,,
திரு. மாயா — கல்கி
திரு. ஏ. எஸ். ராகவன் — ஆனந்தவிகடன், கலைமகள்
திரு. ஸ்ரீரங்கம் நரசிம்மன் — கல்கி
திரு. மாறன் — கல்கி

### எங்கள் நாடகாசிரியர், நடிகர்கள்

திரு. சி. எஸ். கமலபதி எம். ஏ.,
,, வேணுகோபாலன்
,, எஸ். கந்தசாமி
,, 'சுகி' சுப்ரமணியம்
,, என். ராகவன்
திரு. கே. பி. கணபதி
,, ரா. நீலமேகம்
,, என். ராஜகோபால்
,, எஸ். பி. கண்ணன்
,, எம். எஸ். ரமணி

### எங்கள் சங்க சகோதரிகள்

ஸ்ரீமதி குமுதினி | ஸ்ரீமதி ராதிகா (சகுந்தலா)
,, செல்லம்மாள் | ,, பாஹிமா தேவி

## எங்கள் உறுப்பினர்களில்

விவசாயிகள், வியாபாரிகள், பேராசிரியர்கள், ஓவியர்கள், தமிழ்ப் புலவர்கள் பத்திராதிபர்கள், கலைஞர்கள், கணக்கர்கள், நிர்வாகிகள், வழக்கறிஞர்கள் மருத்துவர்கள், தமிழன்பர்கள், நடிகர்கள், ஹிந்தி ஆசிரியர்கள், காங்கிரஸ்காரர்கள், தமிழரசுக் கழகத்தார், திராவிடக் கழகத்தார் முன்னேற்றக் கழகத்தார், கம்யூனிஸ்டுகள், நாம் தமிழர் இயக்கத்தார், பிராமணர், அல்லாதார்
அனைவரும் இருக்கிறார்கள்

எனினும்

எங்கள் குலம் ஒன்று; நாங்கள் அனைவரும் ஒரு குடும்பம்.
எங்கள் பணி தமிழ்ப்பணி.
எங்கள் நோக்கம்: தமிழ்நாடும், மொழியும், மக்களும் சிறப்புறல்.
எங்கள் பாதை: பிறரைத் தாழ்ச்சி கூறாமை; எங்கள் வாழ்வு: தமிழ் வாழ்வு.
எங்கள் கூட்டம் நடைபெறுமிடம் : ராஜேந்திரா கல்லூரி.
எங்கள் நன்றிக்குரியவர் : இராஜேந்திரன், (முதல்வர், ராஜேந்திரா கல்லூரி.)
எங்கள் ஏடு : "எழுத்தாளன்"


M/s. G. RADHAKRISHNA CHETTIAR SONS,
JEWELLERS
PHONE: 37,
TEL: RELIABLE.
பவுன்நகைகள்
&
வெள்ளிப்பாத்திரங்களுக்கு
M/s. G. ராதாகிருஷ்ண செட்டியார் சன்ஸ்,
ஜுவல்லர்ஸ், பெரியகடைவீதி, திருச்சி-8.
K.S.N
மானேஜிங் பார்ட்னர்: R. ஜெயதேவன்

# குருட்டு அதிர்ஷ்டம் அல்ல.

அபரிமிதமான மகசூல் அதிர்ஷ்டத்தால் வருவதில்லை. மனிதனும் இயற்கையும் சேர்ந்து அரும்பாடு பட்டதன் பயனே அது. இயற்கையின் கணக்கு இம்மியும் பிசகுவதில்லை. பயிருக்கு ஊட்டம் தந்து, ஓங்க வளர்த்து, பெரு விளைவு ஈனப் பேணுகிறது இயற்கை.

இந்த இயற்கை விந்தை, பருவத்தில் நிறைவேற—காலமறிந்து

**NPK பயிர் உரச் சத்துக்களை**

விவசாயி தாராளமாக உபயோகிக்கவேண்டும்.

பயிர் உரச் சத்துக்களைத் தயாரித்து விவசாயிகளுக்கு வழங்குவதன்மூலம் முதன்மையான தேசீயஉணவு உற்பத்தி சாதனைகளில் மாபெரும் பங்குபெற்று விளங்குகிறது **FACT**

| எங்கள் தயாரிப்புகள்: | எமது இதர தயாரிப்புகள்: |
|---|---|
| அமோனியம் ஸல்பேட் | அன்ஹைட்ரஸ் அமோனியா |
| ஸூப்பர் பாஸ்பேட் | ஸல்ப்யூரிக் ஆஸிட் |
| ராக் பாஸ்பேட் | கார்பன் – டை – ஆக்ஸைட் |
| NPK மிக்சர்ஸ் | அமோனியம் க்ளோரைட் |


(எல்லாத் தோட்டக்கால் நிலங்களுக்கும் விவசாயப் பண்ணைகளுக்கும் எங்கள் இலவச யோசனைகளைப் பயன்படுத்திக்கொள்ளக் கோருகிறோம்)

**பெர்டிலைஸர்ஸ் அண்டு கெமிகல்ஸ் திருவிதாங்கூர் லிமிடெட்**

**உத்யோகமண்டல் P. O., :: கேரள ராஜ்யம்.**

மானேஜிங் ஏஜண்டுகள்:

**சேஷசாயி பிரதர்ஸ் (திருவிதாங்கூர்) பிரைவேட் லிமிடெட்.**



**மேட்டூர் சந்தன சோப்**

இப்பொழுது மேலும் அதிக மணத்துடன் கமழ்கின்றது. பரிபூரண சந்தன நறு மணத்திற்கு நீங்கள் கேட்டு வாங்க வேண்டிய சோப் மேட்டூர் சந்தன சோப்.




**காவேரி சூபர் சோப்**

ஒளஷத குணம் நிறைந்த சால்முக்ரா தைலம் கலந்தது. வெப்பத்தினுல் ஏற்படும் வியர்வை துர்நாற்றத்தையும், அழுக்கினுல் ஏற்படும் அபாயத்தையும் ஒழிக்க அத்யாவசியமானதொரு சோப்.




**காவேரி பார் சோப்**

காவேரி பார் இல்லாள் கை கண்ட சலவை சோப். வெள்ளை ஆடைகளை மேலும் வெண்மையாகவும் வர்ண ஆடைகளை மேலும் பிரகாசமாகவும் செய்ய வல்லது.

தயாரிப்பாளர்கள் :

**மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிமிடெட்,**

மேட்டூர் அணை R.S., சேலம் ஜில்லா.

*மானேஜிங் ஏஜண்ட்ஸ்:*

சேஷசாயி பிரதர்ஸ் பிரைவேட் லிமிடெட்.

போட்டோ சாமான்களுக்கும்
கலை நுட்பம் துலங்கும்
போட்டோ சம்பந்தமான
எல்லா வேலைகளுக்கும்
நம்பிக்கையான
ஊழியர்கள்

**டீலக்ஸ்**

**போட்டோ சர்வீஸ்,**

**கரூர்.**

கல்யாண காலத்திற்கு சுபமாக எங்கள் கடையில் உத்திரவாதமுள்ள **பொன், வெள்ளி நகைகளை** வாங்குங்கள்.

நவீன மோஸ்தர்களில் **நெக்லஸ், சங்கிலி, வளையல்கள், மோதிரம்** யாவும் எந்த வேளையிலும் சுத்தமாக தயார் செய்து வைத்திருக்கிறோம்.

பெண்மணிகளின் மனதுக்கு உகந்த கல்களில் செய்த பலவகை ஆபரணங்களும் கைவசம் உள்ளன. வந்து வாங்கி மகிழ்ச்சி அடையுங்கள்.

★

**அமர் ஜுவல்லரி ஹவுஸ்**

*மலைவாசல், திருச்சி.*

நீங்கள் எத்தனையோ ரேடியோக்கள் பார்த்திருக்கலாம்; கேட்டிருக்கலாம் — ஆனாலும், உலகத்திலேயே சிறந்த விஞ்ஞானிகளாகிய ஜெர்மானியர்களால் செய்யப்பட்ட கீழ்கண்ட ரேடியோவையும் வந்து பாருங்கள். நீங்கள் கொடுக்கும் பணத்துக்கு அதிகமாகவே மதிப்பிடுவீர்கள் என்று எங்கள் நம்பிக்கை.

1. நோவாக்
2. டெலிபங்கன்
3. சபா (HGEC)

தங்கள் வரவை ஆவலுடன் எதிர்பார்க்கும்:—

ஜெர்மன் ரேடியோ ஹவுஸ்

5, நிர்மலா பில்டிங்ஸ், கோட்டை ஸ்டேஷன் ரோடு,
திருச்சி - 2.

தயாராகிவிட்டது

நீங்கள் வெகு நாட்களாக ஆவலுடன் எதிர்பார்த்த
6 மருந்துகள் அடங்கிய கவர்ச்சிகரமான


குழந்தைகள் மருந்துப் பெட்டி

ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்கவேண்டியது.

இதில் மாந்தம், கணை, இழுப்பு, சளிக்கட்டு, ஜுரம், மலச்சிக்கல் அஜீரணம், வயிறு உப்புசம், வாந்தி, கபம், இருமல், ஜலதோஷம் முதலிய வியாதிகளுக்கு கைகண்ட மருந்துகள் அடங்கியிருக்கின்றன.

விலை. ரூ. 5—00. தபால் சிலவு தனி.
வியாபாரிகளுக்கு தக்க கமிஷன் கொடுக்கப்படும்

விவரங்களுக்கு:— மானேஜர், லலிதா பார்மஸி, கும்பகோணம்.




தந்தி "கைராசி"

**கியாரண்டியுள்ள பவுன் நகைகள்**
**& வெள்ளி பாத்திரங்கள்**
**நம்பிக்கையுடன் கிடைக்குமிடம்**

# ராதா ஜுவல்லரி ஹவுஸ்

**Proprietor**

**G. R. கல்கி வரதராஜுலு செட்டி,**

பெரிய கடைவீதி, திருச்சிராப்பள்ளி-8.

முன்னணியில் நிற்பவை!

# K. T. R.

- கோபுர மார்க் பன்னீர்
- சந்தனுதித் தைலம்
- அரைக்கீரைவிதைத் தைலம்
- ஒயிட்ரோஸ் ஹேர் ஆயில்
- சேரன், சோழன் பாண்டியன் ஜவ்வாது பத்திகள்

**K. T. R.** வாசனை திரவியசாலை,

விஜயபுரம் - தஞ்சை ஜில்லா.

# எங்கள் வெளியீடுகள்

**கி. லக்ஷ்மணன் எம். ஏ.**

| | |
|---|---|
| பாரதத் தூதுவர் | 1—25 |
| கம்பனது கதா பாத்திரங்கள் | 1—00 |

**ரா. பி. சேதுப் பிள்ளை**

| | |
|---|---|
| அலையும் கலையும் | 3 00 |
| தமிழகம் ஊரும் பேரும் | 5 00 |
| தமிழின்பம் | 4 00 |
| வேலின் வெற்றி | 3 50 |
| தமிழ் விருந்து | 2 00 |
| தமிழர் வீரம் | 2 00 |
| வழி வழி வள்ளுவர் | 1 50 |
| கால்டுவெல் ஐயர் | 1 50 |
| கடற்கரையிலே | 1 25 |
| திரிவேணி—ஹேமா ஆனந்த தீர்த்தன் | 4 00 |
| நீயும் உனது உடலும்—S. M. லெட்சுமணன் (தமிழாக்கம்) செட்டியார் | 3 50 |

**வெ. இராமலிங்கம் பிள்ளை**

| | |
|---|---|
| மாமன் மகள் | 7 00 |
| அவனும் அவளும் | 6 00 |
| மலைக்கள்ளன் | 5 00 |
| என் கதை | 4 00 |
| இலக்கிய இன்பம் | 3 50 |

| | |
|---|---|
| அல்லி விஜயம்—டி. எஸ். சொக்கலிங்கம் | 3 75 |
| காந்திமகான் கதை—கொத்தமங்கலம் சுப்பு | 4 50 |
| மஞ்சள் துணி—தி. ஜ. ர. | 2 50 |
| புது நாள் ,, | 2 00 |
| புன் சிரிப்பு—கி. ரா. | 2 25 |
| கலை உள்ளம்—சி. பெரியநாயகி | 1 37 |
| திருக்குறளும் பொதுநோக்கமும் —S. ஆறுமுக முதலியார் | 2 00 |
| கோனார் தமிழ்க் கையகராதி —T. ஐயன்பெருமாள் கோனார் | 3 00 |

# பழனியப்பா பிரதர்ஸ்

**தெப்பக்குளம், திருச்சி-2.**

**சேப்பாக்கம், சென்னை-2.**

ஸ்ரீ விஜயகோபால்
பிக்சர்ஸாரின்
முதல் தயாரிப்பு

சிவாஜி கணேசன்
எம். ஆர். ராதா
வி. கே. ராமசாமி
கே. சாரங்கபாணி
கமலா லெட்சுமண்
பண்டரிபாய்
சௌகார் ஜானகி
எம். என். ராஜம்
மற்றும் பலர் நடிக்கும்

தமிழ்நாட்டின் தலைசிறந்த
நாவலாசிரியர்
அகிலன்
அவர்களின்

# பாவை விளக்கு


டைரக்ஷன்:
கே. சோமு

திரைக்கதை வசனம்:
ஏ. பி. நாகராஜன்

சங்கீதம்:
கே. வி. மஹாதேவன்

தயாரிப்பாளர்கள்:
வி. கே. கோபண்ணா, டி. விஜயரங்கம்.

விவரங்களுக்கு:
ஸ்ரீ விஜயகோபால் பிக்சர்ஸ்,
33, பைகிராப்ட்ஸ் முதல்தெரு, சென்னை-14.



தந்தி : ஸ்டாண்டர்டு தொலை பேசி எண் : 343

1959 - 1960 வருடத்திய புதிய

நவஸோனிக் ரேடியோக்கள்

PHILIPS

பிலிப்ஸ் கம்பெனியாரால்

தயாரிக்கப்படுகிறது

உங்களுக்குத் தெரியுமா?

*

இன்றே உங்கள் வருகையை

எங்கள் பார்வை முகாமுக்குத் தந்து

வேண்டுவனவற்றைப் பார்வையிட வேண்டுகிறோம்.

*

தி ஸ்டாண்டர்டு எலெக்டிரிக் கம்பெனி

மேல் அரண் சாலை, : : திருச்சி.

பவுன், தங்கம், வெள்ளி வைர நகைகளுக்கு

எல்.கே.எஸ் ஜுவல்லர்ஸ்



தந்தி. ஜுவல்லர்ஸ்

போன்: 49

K. S. Nellokannu.

பெரியகடை வீதி. திருச்சி.



மாணவர்களுக்கும், பள்ளிக்கூடங்களுக்கும், அச்சுக்கூடங்களுக்கும், பத்திரிகாலயங்களுக்கும், ஸ்தலஸ்தாபனங்களுக்கும், அரசாங்க அலுவலகங்களுக்கும், வியாபாரிகளுக்கும், பொதுமக்களுக்கும் தேவையான

**எல்லாவிதமான உயர்ந்தரக பேப்பர்கள்—ஆர்ட் பேப்பர்கள்**
**அழகிய திருமணத் தாள்கள், கார்டுகள், கவர்கள்**
**அச்சுக்கூட மை, ரோலர் காம்போசீஷன்**
**யாவும் எப்பொழுதும் கிடைக்கும்.**

# குப்தா பேப்பர் மார்ட்,

**பேப்பர் வியாபாரம்,**

**அல்லிமால் தெரு, [போன் : 640] திருச்சிராப்பள்ளி—8.**

எங்கள் கிளை விற்பனை நிலையம்:- **333, பெரியகடைத் தெரு, திருச்சி-8.**

# P. T. C.

உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானியும், சிறந்த தமிழறிஞருமான

**டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன் அவர்களுக்கு**

**அஞ்சலிகள்.**

அவரது தலைமையில் கூடும்

**எழுத்துலகச் சிற்பிகளுக்கு எங்கள் நல்வாழ்த்துக்கள்.**

*

சமுகத்தில் நேராநோரைத் நேரச் செய்பவர்கள்

எழுத்தாளர்கள்.

**கல்வித் துறையில் எங்கள் பணியும் அஃதே.**

*

## பிரசிடென்ஸி டுடோரியல் காலேஜ்,

திருச்சி - 2.

இமய வெற்பிலிருந்து உதித்த

புதுப் புனல் கங்கை ...

சமய வெற்பிலிருந்து உதித்த

புதுப் புனல் பக்தி ...

எங்கள்

இதய வெற்பிலிருந்து உதித்த

புதுப் புனல் இலக்கியம்...

*

## புதுப்புனல் பதிப்பகம்,

திருச்சி - 2.

# தக்க காரணங்கள்

**ஜவுளித் துறையில் எங்கள் வியாபாரம் பிரபலம் அடையக் காரணம் தாங்கள் அறிவீர்களா?**

1. தயாரிப்பவர்களிடம் புடவைகளோ, வேஷ்டிகளோ தேக்கமாயிருக்கும்போது ரொக்கத்திற்குக் கொள்முதல் செய்கிறோம்.

2. நிதானமான லாபத்திற்கு எவ்வளவு விலையுயர்ந்த உருப்படியானாலும் விற்று வருகிறோம்.

3. எங்கள் வர்த்தகத்திற்கு தகுந்தாற்போல் ஏராளமான கையிருப்பு பட்டுப்புடவை, நூல்புடவை, 6, 7, 8, 9 கெஜங்களில், ஜரிகை வேஷ்டிகள், எந்த ரகத்திலும் எங்களிடம் எப்போதும் இருக்கின்றன.

4. கலியாண, இதர முக்கிய கொள்முதலுக்கு வெளியூர்களிலிருந்தும் கூட, திருச்சி வந்துபோக சொற்ப சிலவைப் பற்றி நினைக்கவேண்டாம். விலை குறைவு. ஏராளமான தேவையான உருப்படி எங்கள் கையிலிருந்து பொறுக்கி எடுப்பதில் திருப்தி, இவை கண்டிப்பாய் தங்களுக்கு உண்டு.

5. எங்களைத் தவிர எந்த ரகத்திற்கும் ஜவுளியில் வேறொரு கடை பார்க்கவேண்டிய அவசியமே ஏற்படாது.

6. உயர்ந்த சூட்டிங் & டுவிட், சில்க் இன்னும் பின்னி துணிகள், வாயில்கள், சீட்டி, சர்டிங் எதுவானாலும் எங்களிடம் கிடைக்கும்.

7. காலை 9 மணி முதல் இரவு 8 மணி வரை எங்கள் கடைகள் வியாபாரத்திற்கு திறந்து வைக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். ஞாயிறு கடையில்லை.

**ஒரே விலை. மாற்றம் கிடையாது.**

## P. R. நாராயணசாமி அய்யர்

**Branch :**

**"Fancy Hall"**
சைனா பஜார், திருச்சி.
**Phone : 165**

ஜவுளி வியாபாரம்
**Post Box No. 401**
பெரிய கடைவீதி, திருச்சிராப்பள்ளி-8
**Phone : 26 & Resi. : 26-A.**

Telegram : "BONTEX"

Gram : ARTEECEE

# R.T.C

PHONE: 172

## Rajendra Technical & Tutorial Colleges

Madras, Tiruchi, Tanjore, Kumbakonam, Madurai & Coimbatore.

COURSES OFFERED :

TECHNICAL: Overseer, Draughtsman, Surveyor, Tracer, Tuitions for: B. E, (1-st year), Pre-Proffessional Engg. 1-st year Diploma Courses, Typewriting (Eng. & Tamil.) Shorthand, Telegraphy, D. Com. etc.

TUTORIAL: S. S. L. C, (Oct. & Mar.) Academic, Bifurcated courses, Pre-University, Matriculation, B. A., B. Sc., B. Com. etc., Moderate fees, Convenient timings,

Laboratary fully equiped.

**MODERN BUILDING WORKS.**

We undertake Construction of Buildings, Offices, Bridges & culverts-Preparing Plans & Estimates-Steel design works R. C. C. Works, Electrification of Houses, Offices, etc, at Moderate Charges.

**RAJENDRA TAMIL TEST PAPERS**

For

**S. S. L. C. 1960**

By

**Vidwan. S. RANGASWAMY**

For Further Particulars apply to:-

**T. N. RAJENDRAN** B. E., M. I. S. E. M. I. C. E. (U. S. A.), G. I. E. (Ind.),
Principal, R. T. C., Engineer & Architect.

TEPPAKULAM ★ TIRUCHI-2.

Edited & Published by A. V. R. Krishnaswamy Reddiar, for The Tiruchi Tamil Writers' Association.
Printed at the Kannan Press, 24, Theradi Bazaar, Tiruchi-2.